விலை: ரூபா 20 | பக்கங்கள் 28

10 DEC 2015

# உதயன்




சுடர் 31 | கதிர் 014 | வள்ளுவர் ஆண்டு 2046 | கார்த்திகை 24, வியாழக்கிழமை 10.12.2015

## இலங்கை சிங்களவரின் நாடு ஏனையோர் வந்தேறு குடிகள்

### கொக்கரிக்கிறார் ஞானசார தேரர்



கொழும்பு, டிசெ. 10
வரலாற்று ரீதியாக இந்த நாட்டின் மக்கள் சிங்களவர்களே. பாதைகள் அமைப்பதற்கும், வர்த்தக நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும், தோட்டங்களில் பணியாற்றுவதற்காகவுமே ஏனைய இனத்தவர் இந்த நாட்டுக்கு வந்தனர். இந்த நாடு சிங் களவர்களின் நாடு. நாட்டில் தோன் றியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தமிழ் மக்கள் சிங்கள மொழியைக் கற்க வேண்டும்.
இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
அந்த அமைப் பக். 24

## உள்ளூராட்சித் தேர்தல் மார்ச்சில் சாத்தியமாகாது



கொழும்பு, டிசெ.10
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்துவது சாத்தியமில்லை என அரசு தெரிவித்துள்ளது.
எல்லை நிர்ணயம் தொடர்பான மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் குறித்த காலப் பகுதிக்குள் தேர்தலை பக். 24

## முதலமைச்சர்களுடன் மைத்திரி இன்று பேச்சு

கொழும்பு, டிசெ. 10
2016 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாதீட்டால் மாகாண சபைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு முதலமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், அவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று பேச்சு நடத்தவுள்ளார். இந்தப் பேச்சுக்கு, வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பக். 24

# வடக்கு மீனவர்கள் கடன்களால் தவிப்பு

### அவற்றை நீக்கவேண்டும் என்று அரசிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 10
தொழிலுக்காகக் கடன் எடுத்து அதை மீளச் செலுத்த முடியாமல் தவிக்கும் வடக்கு மீனவர்களின் கடன்களை நீக்கவேண்டும், என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா வலியுறுத்தினார்.
இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் நினைத்தால் இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்தலாம். இதற்கான வலியுறுத்தலை இலங்கை அரசு செய்யவேண்டும். இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமருடனும், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடனும் பக். 24

"இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் நினைத்தால் இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்த முடியும். இதை வலியுறுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது."



## விபத்துக்களால் 24 மணிநேரத்தில் 7 பேர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.10
கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் இடம்பெற்ற விபத்துக்களில் 7 பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
கொழும்பு - இரத்தினபுரி பிரதான வீதியில் எஹலியில் பிரதேசத்தில் மஞ்சள் கடவை ஊடாகப் பாதையை கடக்க முயன்ற 70 வயதான முதியவர் ஒருவர் பக். 24




'ஊழல் இலஞ்சமற்ற ஓர் இலங்கை' என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் கருஜயசூரிய, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விச் சமூகத்தினர், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-சி)

### முச்சந்தி முரளி



கிளப்பிவிடுகிறதுதான் அவைன்ர வேலை பாருங்கோ...

## மாகாண சபை சேர்க்கும் நிதி எப்படித் தமிழகத்தைச் சேரும்?

### இந்திய அரசு எந்த உதவியையும் ஏற்காது என்கிறது தூதரகம்

யாழ்ப்பாணம், டிசெ. 10
மழை வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களுக்கு உதவுவதற்காக வடக்கு மாகாண சபை திரட்டிவரும் நிதி, தமிழக மக்களைச் சென்றடையுமா என்கிற கேள்வி எழுந்துள்ளது.
இயற்கைப் பேரிடர் உதவி தொடர்பில் வெளிநாடுகளின் நிதிகளையோ பொருள் உதவிகளையோ பெற்றுக்கொள்வது இல்லை என்பது இந்திய மத்திய அரசின் பிடிவாதமான கொள்கை என்று இந்திய அதிகாரிகள் தெரிவிக்கும் நிலையில், திரட்டப்படும் நிதி எப்படி தமிழகத்தைச் சென்றடையப் போகிறது என்கிற கேள்வி எழுந்துள்ளது.
மழை வெள்ளத்தால் தமிழகத் தலைநகர் சென்னை உட்பட பல மாவட்டங்கள் கடும் பாதிப்படைந்துள்ளன. லட்சக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர். இவர்களின் உதவிப் பணிகளுக்கு ஈழத் தமிழர்களின் ஆதரவையும் தெரிவிக்கும் வகையில் நிதி திரட்டி அனுப்பும் நடவடிக்கையை வடக்கு மாகாண சபை ஆரம்பித்தது. வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதன் ஊடாக நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது.
எதிர்வரும் 20ஆம் திகதி வரை வங்கிக் கணக்கில் சேரும் நிதியை பக். 24

## சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திடமாட்டோம்

### ரணில் நேற்றுச் சபையில் உறுதி

கொழும்பு, டிசெ. 10
இந்தியாவுடன் சீபா உடன்படிக்கையை அரசு ஒருபோதும் கைச்சாத்திடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் உறுதியாகத் தெரிவித்தார். இருப்பினும், இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை யொன்று கைச்சாத்திடப்படவுள்ளது பக். 24

## வேகாத கோழிப் பொரியலை விற்ற நிறுவனத்துக்கு தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ.10
நன்கு வேகாத கோழிப் பொரியலை விற்பனை செய்த பல்தேசிய உணவக நிறுவனமொன்றுக்கு எதிராகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
குறித்த நிறுவனம் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வங்கி ஊழியர் பணிப்புறக்கணிப்பு

## வரவு - செலவுத் திட்டத்தில் வங்கி நடவடிக்கைகளைப் பாதிக்கும் திட்டங்கள்



மாங்குளம், டிசெ.10
2016ஆம் ஆண்டு அரச வரவு - செலவுத் திட்டத்தில் வங்கி நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து நாடு முழுவதும் அரச மற்றும் தனியார் வங்கி ஊழியர்கள் நேற்று 1 மணி நேரப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பி.ப. 12.30 மணிதொடக்கம் 1.30 மணி வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தங்க மற்றும் தங்க ஆபரண அடகு வணிகத்தை வங்கிகளிடமிருந்து அகற்றும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அடகுக் கடன்களை மொத்தக் கடன் அளவின் 5 வீதத்திற்கு வரையறுத்தல், குத்தகைக் கடன்களை 2016.06.01ஆம் திகதி முதல் வங்கிகளிடமிருந்து அகற்றுதல், வங்கிகளில் உள்ள செயற்படாக் கடன் நிலுவைகளை 2016.01.01. திகதி அரசின் இணைந்த நிதிக்கு வரவு வைத்தல், வங்கிகளை ஒன்றிணைத்தல், மீளப்பெறும் தொகைக்கு வரி அறவிடுதலை அறிமுகஞ் செய்தல், அதிக வரிச் சுமையை வங்கிகளின் மீது சுமத்துதல், கேள்வி வைப்புகளைக் குறைத்து வங்கிகளை அழிக்கும் நோக்கில் நடைமுறைக் கணக்குகளை வரையறுப்பதற்கு நடவடிக்கை முன்னெடுத்தல், வெளிநாட்டு பணப் பரிமாற்றச் சேவையினை இலகுவாக்குவதன் மூலம் வங்கிகளின் வசமுள்ள வெளிநாட்டுப் பண இருப்பை நலிவடையச் செய்தல், ஊழியர் சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய நிதியங்களை 'அரச வள நிதி' என்னும் பெயரில் புதிய நிதியம் ஒன்றில் இணைக்கப்படுவதுடன் சிங்கப்பூரின் மாதிரிக்கு அமைய நிறுவப்படுகின்ற நிறுவனம் ஒன்றின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல் போன்ற திட்டங்கள் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்தன. இவற்றைக் கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ற-422,108,9)

# மனைவியைத் தாக்கிவிட்டு தலைமறைவானவர் கைது

## பிணையில் செல்ல அனுமதியளித்தது நீதிமன்று

சாவகச்சேரி, டிசெ.10
கடந்த வருடம் மனைவியை தாக்கிக் காயப்படுத்திவிட்டு தலைமறைவானவர் வெளிநாடொன்றிலிருந்து அண்மையில் திரும்பியபோது விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை பிணையில் செல்ல நேற்று சாவகச்சேரி நீதிமன்று அனுமதியளித்தது.

2014 செப்ரெம்பர் மாதம் தாவளை இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் தனது மனைவியை கைகளாலும், கால்களாலும் உடைந்த கண்ணாடியாலும் தாக்கிக் காயப்படுத்தியள்ளார். அதையடுத்து மனைவி கொடுத்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது குறித்த நபர்தலைமறைவானார். அதையடுத்து அவருக்கெதிராக நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இவர் வெளிநாட்டுக்குச் சென்று தப்பிவிடாமல் இருக்க விமான நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த நபர் கடந்த 25 ஆம் திகதி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீர்கொழும்பு நீதிமன்ற நீதிவான் சிறைச்சாலை அதிகாரி மூலம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த உத்தரவிட்டார். இந்த நபரை கடந்த 30 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவிருந்ததையடுத்து தாக்குதலுக்கிலக்கான இவரது மனைவியும் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் செல்ல அனுமதித்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிடப்பட்டது. (ற-9)

# வெள்ளம் பாதித்தோருக்காக வெள்ளியன்று பிரார்த்தனை

யாழ்ப்பாணம், டிசெ. 10
தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலன் வேண்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள இந்து சமயப் பேரவை, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறும் பிரார்த்தனையில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் கேட்டுள்ளது.

இது தொடர்பில் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தாய்த் தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்து சமய அமைப்புக்கள் வெள்ளிக்கிழமை பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும். ஆலயங்களில் அதனை மேற்கொள்ள முடியாதவர்கள் வீடுகளில் மேற்கொள்ளுங்கள்.

இந்தப் பிரார்த்தனைக்கான ஏற்பாடாக இந்து சமயப் பேரவையில் நேற்று முன்தினம் பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது.

தவிர திட்டமிடப்பட்ட சுகாதாரக்குழுவில் இணைந்து கொள்ள விரும்புவோர் இந்து சமயப் பேரவையில் அல்லது சைவமகா சபையிலோ தொடர்புகொள்ள முடியும். 077 0711152, 021 222 6048 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும்.- என்றுள்ளது.

(ற-4)

# கப்பம் கேட்டு மிரட்டியவரை பதுங்கிப் பிடித்தது பொலிஸ்

நெல்லியடி, டிசெ.10
சாவகச்சேரியைச் சேர்ந்த பெண்ணொருவரின் புகைப்படத்தை இணையத்தளத்தில் பதிவேற்றுவேன் என்று மிரட்டிக் கப்பம் கோரிய சந்தேக நபர் ஒருவரை பருத்தித்துறையில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மடக்கி பிடித்தனர்.

குறித்த பெண்ணின் பெற்றோர் பதிவு செய்த முறைப்பாட்டுக்கு அமையவே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபருடன் அவருடைய நண்பர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் சாவகச்சேரியைச் சேர்ந்த குறித்த பெண்ணை காதலிப்பதாகக் கூறி நீண்ட நாள்கள் பழகி வந்துள்ளார். இந்த நிலையில் அந்தப் பெண்ணின் புகைப்படத்தை இணையத்தளத்தில் பதிவேற்றுவேன் என்று மிரட்டியுள்ளார். அப்படிச் செய்யாதிருக்க 30 ஆயிரம் ரூபா தனக்குத் தர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். அந்தப் பணத்தை பருத்தித்துறையில் உள்ள உணவகம் ஒன்றுக்குக் கொண்டு வந்து தருமாறும் அவர் மிரட்டியுள்ளார்.


இதுகுறித்துத் தனது பெற்றோருக்கு அந்தப் பெண் தெரியப்படுத்தியுள்ளார். அதன்பின்னர் கடந்த திங்கட்கிழமை இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதையடுத்து பொலிஸார் நடவடிக்கைகளை களை முன்னெடுத்தனர்.

இதற்குப் பருத்தித்துறைப் பொலிஸாரின் உதவியும் பெறப்பட்டது. பருத்தித்துறையில் வைத்துச் சந்தேகநபரை மடக்கத்திட்டமிடப்பட்டது. அதன்படி அந்தப் பெண்ணிடம் பணம் கொடுக்கப்பட்டு, அவர் சந்தேக நபரால் கூறப்பட்ட உணவகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அந்த உணவகத்தில் பொலிஸார் சிவில் உடையில் இருந்தனர். பெண் உணவகத்துக்குச் சென்றதும் சந்தேகநபரும், அவரது நண்பரும் பணத்தைப் பெற அங்கு வந்தனர். அந்தச் சமயம் சிவில் உடையில் இருந்த பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

சந்தேக நபர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. அவரது நண்பர் குடத்தனையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-109)



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் அமைந்துள்ள வவுனிக்குளம் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாக வான் பாய ஆரம்பித்துள்ளது. குளத்தினுடைய நீர்மட்டம் 26 அடியாக உயர்ந்து இரண்டாவது தடவையாக கடந்த மூன்று நாள்களாக வான் பாய்ந்து வருகின்றது. ஆனாலும் அப்பகுதியில் மக்களுடைய பாதிப்பு தொடர்பான தகவல் எதுவும் பதிவாகவில்லை என அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ற-ரி7)

# மயிலிட்டியில் இராணுவம் அமைத்த மாளிகைப் படம் முதலமைச்சரிடம்

யாழ்ப்பாணம், டிசெ. 10
மயிலிட்டியில் இராணுவத்தினர் அமைத்துள்ள மாளிகை - விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் தொடர்பில் கூகுள் வரைபடத்தின் ஊடாக பெறப்பட்ட ஒளிப்படங்கள் முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவற்றை முதலமைச்சர் மனித உரிமைகள் சபைக்கு அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார் என்றும் வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் குறிப்பிட்டார். வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தினர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள மயிலிட்டியில் பொதுமக்களின் காணிகளில், இராணுவத்தினரால் மாளிகைகள் - விளையாட்டு மைதானங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் அவை அமைந்துள்ள இடங்கள் மற்றும் அவற்றின் கூகுள் வரை படம் ஊடாகப் பெறப்பட்ட ஒளிப்படங்கள் என்பனவும் இதன் போது முதலமைச்சருக்கு காண்பிக்கப்பட்டது.

இதனையடுத்து முதலமைச்சர், இந்த விவரங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்துள்ளார் என்று, குணபாலசிங்கம் குறிப்பிட்டார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

நாடளாவிய ரீதியில் உள்ள ஏழு ஆசிரிய கலாசாலைகளிலும் இரண்டு வருட ஆசிரிய பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் டிசெம்பர் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பணிப்பாளர், ஆசிரியர்கல்வி நிர்வாகப்பிரிவு, கல்வி அமைச்சு இசுறுபாய என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அரச சேவை ஆணைக்குழு அல்லது கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் ஆகியோரின் கையொப்பத்தோடு கூடிய முறையான நியமனத்தைப் பெற்றவர். அரச பாடசாலைகளில் அல்லது தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள், தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சியில் சித்தியடையாதவர்கள், பிரிவேனா கல்விப் பிரிவில் பதிவு செய்யப்பட்டவர்கள் ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

முறையாக நியமனம் பெற்று 27.11.2015 ஆம் திகதி குறைந்தது மூன்று மாதகால சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேலதிக விவரங்களை 2015. 11. 27ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம். (ற-11)

## 21st Birth Day Greetings

## அகவை 21ஆவது பிறந்த நாள்



இன்று(10.12.2015) வியாழக்கிழமை
அகவை 21 இல் கால்பதித்திடும்
சற்குணநாதன் கிருபாராணி
தம்பதிகளின்
செல்வப்புதல்வன்

S.Sajeesan ச.சாயீசன்



எல்லாச் செல்வங்களும்
இனிதே பெற்று உசன் முருகன்
துணையுடன் நூற்றாண்டு
வாழ்ந்திட எங்கள் பல்கோடி
நல் வாழ்த்துக்கள் கூறி
தவப்புதல்வனை அன்புடன்
வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணா – சஞ்சீவன் (லண்டன்), உறவினர்கள்.
உசன், மிருசுவில்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2710 திகதி 09.12.2015

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 25 32 36 70 K | போனஸ் இல: 21 | சனிக்கிழமை ஜக்பொட்: ரூ.13,926,825/-

Galaxy Star

வெற்றி வாரம் 015 திகதி 09.12.2015

03 05 40 54 60

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,719,380/-

## BA 1st YEAR(G.A.Q) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினால் புதிய பாடத்திட்டத்தின் கீழும் புதிய நடைமுறையில் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

* A/L இல் கலை. வர்த்தகம். கணிதம். விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவார்.
* புதிய நடைமுறையில் BA 1st year தான் பழைய நடைமுறையில் G.A.Q என்பதனை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.
* இக்கற்கை நெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
* புதிய பாடத்திட்டத்தின் கீழ் விரிவுரைகள் ஆரம்பம்- 12.12.2015 காலை 8 மணி
* **விவரங்களுக்கு S.அருள் நங்கை (நிர்வாகி)**

T.P: 021 222 8148
021 568 9477

**புதிய உயர்கல்லூரி
ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முதல்வர்
திரு. **கிருஷ்ணபிள்ளை விக்கினராஜா**

இலங்கையின் ஆயிரம் பாடசாலை வேலைத் திட்டத்திற்கமைவாக கல்வியமைச்சினால் அகில இலங்கை ரீதியாக தமிழ் மற்றும் சிங்கள முதன்மை வாய்ந்த, 12 அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இவர்களுள் வட மாகாணத்திலிருந்து கிளி நொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் அயல் பாடசாலையான கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் முதல்வரும் எமது இல்லத்தின் பொதுச் செயலாளருமான கௌரவ திரு. கிருஸ்ணபிள்ளை விக்கினராஜா அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியமைச்சின் விசேட செயற்பாட்டிற்கமைய வரும் 11ஆம், 12ஆம் திகதி அளவில் ஏறத்தாள பத்து நாள்கள் வெளிநாட்டு சுற்றுப் பயணமாக தாய்லாந்து அழைத்து செல்லப்படவுள்ளார்.

இவர்கள் அங்கு தாய்லாந்தின் மறுசீரமைக்கப்பட்ட நவீன கல்வி முறைமை, புதிய நேர்த்தியான நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் தலைமைத்துவம் தொடர்பிலான மாற்றங்களை இலங்கைக் கல்விச் சூழலிலும் ஏற்படுத்தும் வகையில் இவரது பயணம் சிறப்புற அமைய எமது இல்லக் குழந்தைகள் மற்றும் நிர்வாகம் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
இல்லக் குழந்தைகள்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.**

## மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வி நிலையம் (PICTEC)

## ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.01.2016 தொடக்கம் 31.12.2016வரை

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மரக்காரம்பளை வவுனியாவில் இயங்கிவரும் PICTEC இற்குரிய சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கு தகுதியான/ தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களிடமிருந்து **01.01.2016** தொடக்கம் **31.12.2016** வரையான காலப்பகுதிக்கு மாகாணக்கல்வித் திணைக்கள திணைக்கள பெறுகைக்குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

1. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் **வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கில்** கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா **500** காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **09.12.2015** தொடக்கம் **23.12.2015** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 16.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைக் கேள்விகள் **23.12.2015ஆம்** திகதி **03.00** மணிக்கு முன்பதாக **வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கின்** கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் **வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு அவர்களின்** தொலைபேசி இலக்கம் **024-2222026** உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
4. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) **2015.12.18** ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு **வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கின்** கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
5. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுப்பட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
திணைக்கள பெறுகைகள் குழு,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வட மகாணம்.**

## மாகாண ஆங்கில வள நிலையம் (PESC)

## ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.01.2016 தொடக்கம் 31.12.2016வரை

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மன்னாரில் இயங்கிவரும் PESC இற்குரிய சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கு தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களிடமிருந்து **01.01.2016** தொடக்கம் **31.12.2016** வரையான காலப்பகுதிக்கு மாகாணக்கல்வித் திணைக்கள திணைக்கள பெறுகைக்குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

1. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் **வலயக் கல்வி அலுவலகம் மன்னாரில்** கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா **500** காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் **09.12.2015** தொடக்கம் **23.12.2015** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 16.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைக் கேள்விகள் **23.12.2015** திகதி **03.00** மணிக்கு முன்பதாக **வலயக் கல்வி அலுவலகம் மன்னாரின்** கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் **வலயக் கல்வி அலுவலகம் மன்னார் அவர்களின்** தொலைபேசி இலக்கம் **023-4920670** உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
4. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) **2015.12.18** ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு **வலயக் கல்வி அலுவலகம் மன்னாரின்** கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
5. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
திணைக்கள பெறுகைகள் குழு,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வட மகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரநாதர் திருக்கோயிலின் புனருத்தாரணம் தொடர்பாக சிவனடியார்கள் அறிய வேண்டிய உண்மைகள்

திருக்கேதீஸ்வரநாதர் திருக்கோயிலின் நிலை தொடர்பாக எம்மால் இந்து சமய பேரவைக்கு கொடுக்கப்பட்ட முறைபாடு தொடர்பாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை 29.11.2015 இல் நடந்த அச்சபையின் செயற்குழு கூட்டத்தில், திருக்கேதீஸ்வர ஆலய அங்கத்தவர்களாகிய நாங்களும், திரு. த.கணநாதலிங்கம் மற்றும் ச.பாலேஸ்வரன் அவர்களும் கலந்துகொண்டு இவ்வாலயம் தொடர்பான தகவல்களை எடுத்துரைத்தோம்.

அதன் பேறாக அவ்வமைப்பின் தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்களால் கொடுக்கப்பட்ட விளக்கமும் அவ்வமைப்பின் ஆதங்கமும் 30 நவம்பர் 2015 உதயன் நாளிதழில் வெளியாகிருந்தது.

இது சம்பந்தமாக இந்து சமய பேரவையும் ஊடகமும் காட்டிய கரிசனை போற்றுதற்குரியது. இதனால் சிவனடியார்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதாக அறிகின்றோம்.

இவ்வறிவித்தலுக்கு பதிலளிக்குமுகமாக திருக்கேதீஸ்வர ஆலயத்தின் திருப்பணிச்சபையின் அறிக்கையானது 3.11.2015 உதயனில் வெளியாகியுள்ளது. இதில் திருக்கேதீஸ்வர சீரமைப்பு குறித்து இந்து சமய பேரவையின் அறிக்கை தமக்கு வேதனை அளிக்கின்றதாகவும் எம்மால் எடுத்துரைக்கப்பட்டவை பொய் குற்றச் சாட்டுகளென வும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே சில உண்மை நிலையை அடியார்களுக்கு தெளிவுபடுத்தப்படவேண்டிய கடப்பாட்டை உணர்ந்து இவ்வறிக்கையை சமர்ப்பிக்கின்றோம்.

ஆலயத் திருப்பணி நடவடிக்கைகள் யாவும் ஒரு சிலரால் தன்னிச்சையாக தீர்மானிக்கப்பட்டு, ஆட்சிக்குழுவிற்கு தெரியப்படுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படுகின்றன. இத்திருப்பணிச்சபையின் ஆட்சிக் குழு கூட்டங்களின் நிலைபற்றி சில தகவல்களை குறிப்பிடுகிறோம்.

01 **பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரநாதர் திருக்கோயிலின் பாலஸ்தாபனம் 7 ஆம் திகதி ஜூன் மாதம் 2015 இல் நடைபெற்றது,ஆனால் இவ்விடயம் 23.05.2015 நடைபெற்ற ஆட்சிக் குழு கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் கூட இடம்பெறவில்லை. கூட்டம் நடைபெறும் போதே இவ்வாறான ஒரு முக்கிய நிகழ்ச்சி அறிவிக்கப்படுகிறது.**

02 **ஆலய அமைப்பு விதிகளின்படி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய ஆட்சிக்குழுக் கூட்டம், 5மாதங்களுக்குப் பின் 1.11.2015 இல் நடைபெற்றபோது, ஆலயத்தின் மகா மண்டப, அர்த்த மண்டப அடிக்கல் நாட்டு நிகழ்வு தொடர்பாக எவ்விதத்திலும் கூட்டத்தில் வெளிப்படுத்தாது, கூட்டம் முடிந்த சில நாள்களின் பின் 14.11.2015 ஆம் திகதியிட்ட 22.11.2015 இல் அடிக்கல் நாட்டுவதற்கான அறிவித்தல் அங்கத்தவர்களுக்கு அனுப்பட்டது.**

01.11.2015 இல் நடைபெற்ற ஆட்சிக் குழு கூட்டறிக்கையின் நிழ்ச்சி நிரலில் நாலாவதாக குறிப்பிடப்பட்டது 'கோயில் புனருத்தாரண வேலைகள்' ஆலயத்தில் தற்பொழுது நடைபெறும் சில வேலைகளைப் பற்றி அங்கத்தவர்களின் அபிப்பிராயங்கள் கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தில் பிரதி தலைவர் பின்வரும் சில விடயங்களை கூறினார்.

- **மகா மண்டபத்தின் கட்டட வேலைக்கு பொறுப்பேற்ற மாமல்லபுர அரசினர் சிற்பக்கலை கல்லூரியின் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் இவ்வாலயத்தின் கட்டட வேலைகளை பொறுப்பேற்க முடியாது என மறுத்துள்ளார்.'**
- **இந்திய அரசாங்கத்தினால் இவ்வாலய புனருத்தாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியுதவியில் கருங்கற்களுக்கும் மற்றும் அனைத்து பொருள்களுக்குமாக செலவிட்ட தொகை இந்திய பணம் 90 மில்லிய னெனவும் கட்டட நிறுவுதலுக்கான மிஞ்சிய தொகையான 43 மில்லியன் இந்திய பணத்தை இந்திய அரசு திருப்பணிச் சபைக்கு அனுப்பிவைக்க வுள்ளதாகவும் கூறப்பட்டது.**
- **ஆலய திருப்பணிச்சபை தனியார்களுடன் ஆலய மகாமண்டபத்தை நிறுவுவதற்கான ஓர் ஒப்பந்தத்தை செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.**

ஆலய நலன் கருதும் அங்கத்தவர்களுக்கு இச்செய்தி அதிர்ச்சித் தகவல்களாகவே அமைந்தது. இதற்கான கேள்விகளோ அல்லது ஆக்கப்பூர்வமான பிரேரணையோ எழுப்பப்படாமல் இந்திய அரசுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு மாறான முக்கிய மாற்றங்கள் அங்கத்தவர்களுக்கு தகவலாக கூறப்பட்டு பின்னர் இம்மாற்றங்கள் சபையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக 03.12.2015 உதயன் நாளிதழில் வெளிவந்த அறிக்கையில் திருப்பணிச் சபை கூறியுள்ளது.

04.11.2012 நடைபெற்ற பொதுக்கூட்ட ஆண்டறிக்கையில் மாமண்டபத்திற்குரிய நடவடிக்கைகள் பக்கங்கள் 8,9 இல்விவரமாக குறிப்பிடப்பட்டது. இதில் கூறப்படும் முக்கிய விடயங்களை எடுத்து காட்ட விரும்புகிறோம்.

- **பக்கம் 8 இல் -''இந்திய மத்திய அரசு 326 மில்லியன் ரூபா செலவில் கருங்கல்லால் ஆலய மகாமண்டபத்தை அமைத்துத்தர விரும்பி அதற்கான ஒப்பந்தத்தினை திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையுடன் செய்துள்ளது. ஏலவே திருப்பணிச்சபையால் 446 கருங்கற் தூண்களும் சிற்பங்களும் செதுக்கப்பட்டு கப்பல் மூலம் வரவழைக்கப்பட்டு ஆலயவீதியில் கிடப்பில் உள்ளது. இவற்றுக்கு மேல் தேவையான கற்களை இந்திய அரசே செதுக்கி சீர்செய்து வரவழைக்கவுள்ளது''**

**பக்கம் 9 இல்**

- **''இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியினரின் மேற்பார்வையில் தமிழ்நாடு மாமல்லபுரம் அரசினர் கட்டட கல்லூரி தமிழ் நாடு அரசினர் கலை,கலாசாரத் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்றது''**
- **''இதில் திருப்பணிச்சபையின் குறிப்பிடக்கூடிய பங்களிப்புகள்''**
  1. **இப்போதுள்ள மண்டபத்தை அகற்றுதல்**
  2. **நிலத்தை துப்புரவு செய்து கொடுப்பது.**
  3. **கட்டடபணிக்கு தேவைக்கேற்ப உதவுதல்**
  4. **உள்நாட்டிலுள்ள நிபுணத்துவமுடையோரையும் மற்றும் பணியாள்களை பயன்படுத்த ஒழுங்கு செய்தல்.**
  5. **ஆளணி பொருள்கள் தருவதில் உதவுதல்**
- **''இந்திய அரசின் முக்கிய பங்களிப்பு''**
  1. **மாமல்லபுரத்தில் தேவையான சிற்ப பணிகளை செய்து தருதல்**
  2. **இரண்டு மண்டபங்களை நிறுவுதல்**
  3. **இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்கள ஆணையாளருடன் ஒத்து இசைந்து செயற்படல்**

இப்பணிகள் தொடர்ந்து முறையே இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவடையவேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது

இந்திய அரசுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இதுவரை காலமாக ஆலய மகா மண்டபம் இந்திய அரசினால் நிறுவப்படுவதாகவே இருந்தது. கட்டடத்திற்கு தேவைப்படும் அனைத்து தூண்களும் இதர சிற்பங்களும் கொண்டுவரப்பட்டு, [illegible] அடிக்கல் நாட்டப்பட்டு, [illegible] இத்தருணத்தில் இந்தியஅரசு மண்டபங்களை நிறுவும் பணியிலிருந்து விலகுவதற்கான காரணங்கள் அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. புதிய அதிபரின் நியமனத்தினால் மாமல்லபுர அரசினர் சிற்பக்கலை கல்லூரி, மகாமண்டப கட்டடத்தை நிறுவுவதற்கு இயலாது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மகாமண்டப வேலைகளுக்கென சபைத்தலைவரின் கொள்வனவு கட்டமைவுக்கு அமைவாக மாமல்லபுர அரசினர் சிற்பக்கலை கல்லூரியினால் செதுக்கப்பட்டு 2005ஆம் ஆண்டு ஏறத்தாள இலங்கைப் பணம் ரூபா 28 மில்லியன் பெறுமதியான 446 சிற்பவேலைகளைக் கொண்ட தூண்களும்.இதர சிற்பங்களும் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டன. மகாமண்டப கட்டட வேலைக்கு மேலும் தேவைப்படுவதாக இருந்தவை மூடுகற்கள்(பாவுகற்கள்) மற்றும் அடித்தளகற்கள் மட்டுமே. ஆனால் தற்போது ஆலயத்திற்கு வரவழைக்கப்பட்ட பொருள்களில் ஏற்கனவே 2005இல் கொண்டுவரப்பட்ட தூண்களும் சிற்பங்களும் அடங்கியுள்ளதாக உணரப்படுகிறது.

2005 இல் கொண்டுவரப்பட்ட தூண்களும் சிற்பங்களும் மகாமண்டபத்திற்கு பயன்படுத்தப்படுவதை பற்றியும் சந்தேகம் எழுந்துள்ளது.

2012 - 2013 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கையின் பின், கருங்கல் திருப்பணிக்காக திருக்கேதீஸ்வரநாதரின் பக்தர் ஒருவரால் அளிக்கப்பட்ட அன்பளிப்புகடந்த 20 மாதங்களாக பல தரப்பில் விசாரிக்கப்பட்டுவருகிறது. இதற்கு 49 பக்கங்களடங்கிய ஓர் அறிக்கை ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டு, அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்குள் அதுதொடர்பாக வாத பிரதிவாதங்கள் ஏற்பட்ட பொழுதும் அவ்வறிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னார் பிரதேச செயலகம் நடத்தும் விசாரணையை நிறுத்துவதற்காக கொழும்பு மேல் நீதி மன்றத்தில் தடையுத்தரவை சபையின் அங்கீகாரமின்றி பெற்றிருக்கிறார்கள். 22.03.2015 இல் நடைபெற்ற ஆட்சிக்குழுவில் அங்கத்தவர்களால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களடங்கிய குழுவின் அறிக்கையை திசை திருப்பும் நோக்கத்துடன் போலியாக ஓர் ஆவணம் புனைக்கப்பட்டு இவ்விசாரணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாவணம் 30.06.1985 என திகதியிடப்பட்ட ஒரு சபை அங்கீகாரம். அமரர் களாகிய நம்பிக்கை பொறுப்பாளர் சபை அங்கத்த வர்களின் கையொப்பங்கள் வேறொரு சபை அங்கீகாரத்திலிருந்து பிரதி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத் தினால் கொடுக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட் டுள்ளது. இவ்வாறான செயலை இணைக்காரியதரிசிகளுக்கு தெரியப்படுத்தி 09.11.2015 இல் பதிவு மூலம் கடிதம் அனுப்பி ஓர் அவசர கூட்டத்தை ஏற்பாடு செய்ய கோரியும், இது வரை சபை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திருப்பணிச்சபை கூறுவது போல் எம்மால் முன் வைக்கப்பட்டிருக்கும் விடயங்கள் பொய் குற்றச் சாட்டுக்கள் அல்ல என நிரூபிப்பதற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன.

பக்தியை தேடியே அடியார்கள் ஆலயம் செல் கிறோம். ஆலயச் சபைகளில் அங்கத்தவர்களாகவுள்ள அடியார்களே, பதவி தாங்குனர்களை திருப்தி யளிக்க முயலாமல், ஆலயத்தின் நலன் கருதி செயற்படுங்கள். இறைவனின் சொத்துக்களை பாதுகாக்கும் இத்தகைய பொறுப்பை பெரும் பாக்கியமாகக் கருதுங்கள். இவற்றை பாராதிருப்பது பெரும் பாவச் செயலாகும்.

**சிவகுமார் நமசிவாயம்**
**நம்பிக்கை பொறுப்பாளர் சபை அங்கத்தவர்**
**திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை**
**சந்திரா நமசிவாயம்**
**முன்னாள் உள்ளக்கணக்காய்வாளர்**
**(2012 - 2013 - 2014)**
**திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்து ஒருவரைக் கொலை செய்ய முற்பட்ட நபர்

## வைத்தியசாலை நிர்வாகத்தின் துணிச்சலான செயற்பாட்டால் அசம்பாவிதம் தவிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

கத்திக் குத்துக்குள்ளான ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், குறித்த விடுதியில் வைத்தும் கத்தியால் குத்த வந்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் பிடிக்கப்பட்ட ஒருவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப் பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ். போதனா வைத்தியசாலைக்கு வெளியே ஓரிடத்தில் வைத்து குறித்த நபர், ஒருவர்மீது கத்தியால் குத்தியுள்ளார். காயப்பட்டவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். அங்கு குறித்த நபர் 24 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதன் போது, தலைக்கவசம் அணிந்து முகத்தை மூடிய வாறு ஒருவர் குறித்த நோயாளர் விடுதிக்கு வந்துள்ளார். அத்துடன் அவருடன் மேலும் மூன்று பேர் வைத்தியசாலை வளாகத்தினுள் நுழைந்துள்ளனர்.

இதில் தலைக்கவசம் அணிந்திருந்தவரது நடத்தை, குறித்த நோயாளர் விடுதியில் கடமையிலிருந்தவர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தலைக்கவசத்தை கழற்றிவிட்டுச் செல்லுமாறு கூறப்பட்டது. வேறு வழியின்றி தலைக்கவசத்தைக் கழற்றியபடி நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிக்குள் நுழைந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த சந்தேகநபர் வருகை தந்த ததை அடையாளம் கண்ட கத்திக் குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நபர் கத்தியுள்ளார். இதனால் குறித்த சந்தேக நபர் தான் கொண்டு வந்த கத்தி ஒன்றை காண்பிக்க, படுகாயமடைந்த நபர் அலறியபடி அந்த இடத்திலிருந்து விலகி ஓடியுள்ளார்.

இந்த சம்பவத்தைக் கண்டு உசாரடைந்த அங்கு நின்றிருந்தவர்கள், குறித்த சந்தேகநபரைத் தப்பிச் செல்லவிடாது முற்பட்டதோடு பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் அழைத்துள்ளனர். அந்த நேரம் வைத்தியசாலைப் பணிப்பாளர், விடுதிகளைப் பார்வையிட்டுக் கொண்டு சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் அங்கு குழப்பத்தை உண்டுபண்ணவே அவர், கத்தி வைத்திருந்ததாகக் கூறப்பட்ட சந்தேகநபர் மற்றும் அவருடன் வந்த மூவரையும் வெளியே செல்ல விடாது தடுத்து வைத்துக் கொண்டு யாழ்.பொலிஸாருக்கு சம்பவத்தைத் தெரிவித்துள்ளார்.

உடனடியாக அங்கு விரைந்த பொலிஸார் குறித்த சந்தேகநபர்களைக் கைது செய்தனர். அத்துடன் அவர்களைப் பரிசோதித்தபோது குறித்த சந்தேகிக்கப்பட்ட நபர் கத்தி ஒன்றை மறைத்து வைத்திருந்தமையைப் பொலிஸார் கண்டறிந்தனர். அதனை மீட்ட பொலி ஸார் குறித்த நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

குறித்த சந்தேக நபர்கள் திட்டமிட்டு அவ்வாறு செயற் பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சந்தே நபர்கள் தொடர்பில் பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-4)

# பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் பஸ் சேவையில்லை

## *உடன் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ.10

இ.போ.சபை பஸ் சேவையில் ஏற்படும் தாமத்தால் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு உரிய நேரத்திற்கு சமுகமளிக்க முடியாது தவிக்கும் பூநகரி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 16 மாணவர்களின் பயணத்துக்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் அவசரக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

[illegible]நகரிப் பிரதேசத்தின் மண்டக் கல்லாறு பகுதியில் தொடர்ந்தும் வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கும் சூழலில், பூநகரி மகாவித்தியாலயத்தில் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் ஆற்றின் மறுகரையைச் சேர்ந்த 16 மாணவர்கள் தினமும் காலை 6.30 மணிக்கு படகுப் பயணம் மேற்கொண்டு பூநகரிகரையை 7.30 மணியளவில் அடைந்த போதும் அங்கு தரித்து நிற்கும் இ.போ.சபைக்கு சொந்தமான பஸ் சாரதி தனது பயண ஒழுங்கு நேரம் 8.45 தான், அதன் பின்பே பஸ்ஸை எடுக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

இதனால் கடந்த இரண்டு நாட்களும் மாணவர்கள் 9.15 மணியளவிலேயே பரீட்சை மண்டபத்தை அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். ஆனால் வடக்கு மாகாண கல்வி அமைச்சரோ, அல்லது வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் இ.போ.சபையின் வடக்கு மாகாண உதவி முகாமையாளர் கேதீஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, .தனியார் பஸ் சேவையும் எமது நேர ஒழுங்கும் குறித்த பிரச்சினையில் தொடர்புபட்டதாக இருப்பினும் இன்று முதல் மாணவர்களின் நலன் கருதி, படகு வந்து சேர்ந்ததும் உடன் பஸ் சேவையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர். (வ-101)

# அரச, தனியார் துறையினருக்கு ஒரே மாதிரியான ஓய்வூதியம்

## *பிரதமர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.10

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு ஒரே மாதிரியான ஓய்வூதிய முறைமையொன்றை தயாரிக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

துறைமுக, கடல் துறை, மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் ஆகிய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு விசேட அறிவித்த லொன்றை விடுத்து உரையாற்றுகையி லேயே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

புதிய ஓய்வூதிய முறைமை தற்பொழுது சேவையிலுள்ளவர்களுக்கு பொருந்தாது. எதிர்காலத்தில் தொழில்துறையில் இணைந்து கொள்ளும் இளைஞர், யுவதிகளுக்கு இந்த முறைமை நடைமுறைப்படுத்தப்படும்.

2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட வருமானம் 2005 பில்லியன் ரூபா. சகல துறையிலுள்ளவர்களுக்கும் சம்பளத்துக்காக மட்டும் 632 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

ஓய்வூதியம் வழங்குவதற்கு 169 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. அத்துடன், 1390 பில்லியன் ரூபாவை கடன் செலுத்த செலவிட வேண்டியுள்ளது. அரச நிதி முகாமைத்துவத்தின் போது வரவு-செலவுகளில் கூட்டல் குறைத்தல் இடம்பெறும். இதற்காக சலுகைகளிலும் கூட்டல் குறைத்தல்கள் ஒவ்வொரு வேளையிலும் மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என்றார். (வ)

**காணி விற்பனைக்கு**

யாழ் புகையிரத நிலையத்திற்கு அருகில் 3 பக்க மதிலுடைய நிலப்பரப்பு 2 குழி 13 விஸ் தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 544 3346

**நாஹா மருத்துவ நிலையம்**

தீவிர கை, கால்விறைப்பு, பாரிசவாதம், முள்ளந்தண்டு பாதிப்பு மாறாதநோய்கள், மர்மக்கட்டிகள், நீரிழிவு, ஆஸ்மா குணமாதல்.

குழந்தை இன்மை அதி நவீன ஆய்வுச்சிகிச்சை.

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி(ஜெகபதிவீடு)
மானிப்பாய். T.P: 077 321 2740

**தேவை**

ஜபேஸ் அல்சேசன் இன இரண்டு - இரண்டரை வயது நாய்கள் அல்லது இரண்டு மாதங்கள் நிறைந்த ஆண்குட்டி தேவை.

(c 20725) (14,16,17)

தொடர்பு: 077 659 0606

**வேலைக்கு ஆள் தேவை**

பிரபல தனியார் கம்பனியான World Express Services (பார்சல் சேவிஸ்) பார்சல்களை Delivery பண்ணுவதற்கு மன்னார்க் கிளைக்கு ஆள் தேவை. மோட்டார் சைக்கிள் அவசியமானதாகும்.

தொடர்பு: 023 492 4013

**வேலையாள் தேவை**

யாழ்.முன்னணி பேக்கரி மற்றும் அதன் நேரடி விற்பனையகங்களில் எம்முடன் இணைந்து பணியாற்ற அனுபவமும் ஆர்வமும் உள்ள பணியாளர்கள் இருபாலாரும் தேவைப்படுகிறார்கள். விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(66966) (14,16,17)

தொடர்பு: 075 900 3300

**யாழ். மாநகர சபை அறிவித்தல்**

கடந்த காலங்களில் நல்லூர் உற்சவ காலங்களில் அடியார்களால் தவறவிடப்பட்ட தங்க நகைகளை 21.12.2015 இற்கு முன் உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

தவறும் பட்சத்தில் அவை அரசுடைமையாக் கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

ஆணையாளர்,
மாநகர சபை,யாழ்ப்பாணம்.

(சி.20728)(13,15)

**மணிவிழா வாழ்த்து**



உயர்திரு செ.தர்மராஜா

அகவை 60தனில் அடிபதித்து வங்கிச் சேவையில் நிறைவு கண்டு வாழும் கலைதனில் (Art of Living) ஆசானுமாய் சமூக சேவைதனில் தடம் பதிக்கும் - உங்களை பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழிய நின் சேவை..... வாழிய நின் புகழ்.......

10.12.2015

**சாரதிப் பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

கேன் காப்பகமானது வீடுகளில் தங்கியிருக்கும் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை பராமரித்து சிகிச்சையளிக்கும் திட்டத்திற்காக முச்சக்கரவண்டி சிற்றூர்தி செலுத்தக் கூடியதும் நோயாளிகளின் தேவைகளை கவனிப்பதற்குமாக வாகன சாரதிப் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதாந்த வேதனம் 10000.00-15000.00 வரை வழங்கப்படும். பூரணப்படுத்தப்படும் விண்ணப்பத்துடன் சாரதி அனுமதிப் பத்திரத்தின் நிழற்படப்பிரதி இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் முடிவடையும் திகதி 20.12.2015. விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப் படல் வேண்டும்.

தலைவர்
கேன் புற்றுநோய் காப்பகம்
இல. 05 சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில்,
சுன்னாகம்.

**தவறிவிட்டது**

விஜயகுமார் ரெஜினோல்ட் என்பவருடைய தே.அ. அட்டை (881312590 V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி பத்திரம், வரிபத்திரம்என்பன அடங்கிய பேஸ் கோப்பாயிலிருந்து சுன்னாகம் ஊடாக அச்சுவேலி செல்லும் வீதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 077 4850588
32, [illegible], யாழ்ப்பாணம்.

**Personal Classes**

9, 10, 11 புதிய பாடத்திட்டத்திற்கான தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் 20 வருட கடந்தகால வினாவிடை விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.

ஆசிரியர் K.Amir
T.P: 072 223 4948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லையா
பொன்னுத்துரை
திதி: அமாவாசை (10.12.2015)

இருபது ஆண்டுகள்
கடந்தாலும்
உங்கள் அன்பு உருவம்
மறைவதில்லை
உங்கள் நினைவில் நாம்
வாழ்கின்றோம்.

இல.10 பாரதிலேன். நல்லூர் றோட்,
கச்சேரி. யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
நாகம்மா ஆறுமுகம்
திதி : சதுர்த்தசி



கற்களைப் படிகற்களாக்கித் தரணியில்
தலைநிமிர வைத்த தங்க அம்மாவே!
கண்ணெனக் காத்த கண்மணியே ஆண்டு
ஒன்று ஆனாலும் உங்கள் அன்பு முகத்தை
மறக்க முடியவில்லையே அம்மா உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டு என்றும் அகலாது
நிறைந்து இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி
யடைய எல்லாம் வல்ல பெருமாட்கடவைப்
பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
அளவெட்டி மேற்கு,
(தம்மனை)

மலர்வு
14.03.1924

உதிர்வு
21.11.2014

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
21.06.1972

மறைவு
10.11.2015

கடந்த 10.11.2015
செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்
அமரர்
இராசையா
மதியழகன் (தயா)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (10.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு
17 . 08 . 1939



உதிர்வு
21 . 11 . 2014

திருமதி பரமசாமி தவமலர்
திதி: 10.12.2015

அன்பினால் எமக்கு உயிரூட்டி
அறிவுரைகளால் எமக்கு உணவூட்டி
வாழ்க்கைப் பாதையில் வழிகாட்டி
வாழ்வாங்கு வாழவைத்த அன்புத் தெய்வமே!
இறுதி வரை உங்கள் வழிநின்று எங்கள் பணிதொடர
என்றும் உங்கள் ஆசி வேண்டி நிற்கும்!

155 ஆம் கட்டைA9 வீதி,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.


## மகிந்தவுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு ரூ. 71 மில்லியன்

*சுனில் ஹந்துன்நெத்தி குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ. 10

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு நன்றி கூறும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனத்துக்காக முன்னாள் அமைச்சர்பசில்ராஜபக்சவால் 71மில்லியன் ரூபாசெலவழிக்கப்பட்டுள்ளதுஎன்று-ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி சபையில் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, ஏனைய அமைச்சுகளில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் குறித்து தேடிக் கொண்டிருக்கின்றார். அவர் முதலில் தனது அமைச்சில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளைத் தான் தேட வேண்டும்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனம் ஒன்றை நடத்த 71 மில்லியன் ரூபா செலவு செய்துள்ளார். இந்தச் சம்மேளனத்தின் நோக்கம் என்ன ? இதில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் மூன்று தீர்மானங்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குநன்றிகூறுவதாகும். இதற்குத்தான் 71 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும், போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறுபவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்படும். ஆனால், மனிதன் ஒருவன் ஏழை என்பதை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. வாழ்வின் எழுச்சி பயனாளிகளுக்குத்தான் இவ்வாறு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 11 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. சான்றிதழ் அச்சிட செலவிட்ட 11 மில்லியன் ரூபாவை அந்த மக்களுக்காக செலவிட்டிருக்கலாம் – என்றார். (த-5-சி)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் துரைசிங்கம்
நடராசலிங்கம்
( ஓய்வுபெற்ற அதிபர்,யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்)

அன்னை மடியில்
18.03.1944

ஆண்டவன் அடியில்
21.11.2014

திதி: சதுர்த்தசி (10.12.2015)

பிரியமான கணவனாய், பாசமிகு தந்தையாய், மாமனாய், பட்சமிகுபேரனாய், அன்புமிகு சகோதரனாய், மானிடத்து வாழ்வுதனை மாண்புடனே வாழ்ந்து விதையாய் இருந்த எம்மை விருட்சம் ஆக்கினீர்கள் வேராக இருந்து பாசமுடன் நற்பண்புகளை வளர்த்து எமை ஆளாக்கினீர்கள்.

நேற்று நடந்தது போல் இருக்கிறது எமைவிட்டு பிரிந்து ஆண்டொன்று சென்று விட்டதே!ஆண்டு ஒன்றல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் இன்முகமும்,பசுமையான நினைவுகளும் எம்முடன் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். மனிதருள் புனிதராய் வாழ்ந்திட்ட உங்கள் ஆத்மசாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கும்......



வன்னியசிங்கம் ஒழுங்கை,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்
மற்றும் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்து யாழ். நகரில் நடைபயணம்

யாழ்ப்பாணம், டிசெ.10
பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் யாழ். நகரப் பகுதியில் நடைபயணம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர்மகிழ்வகத்தின்(சி.சி.எச்)பெண்களுக்கான அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில், ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட பெண்கள் வன்முறைக்கு எதிரான தினமாக நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரைக்கும் ஒரேஞ்ச் த வேல்ட் எனும் தொனிப் பொருளில் பெண்களுக்கு சமாதானம் வேண்டி ஊர்வலங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



இந்த நடைபயணம் யாழ். வீரசிங்கம் மண்டப முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு, முனியப்பர் வீதி வழியாக யாழ்.ஆஸ்பத்திரி வீதியை சென்றடைந்தது. அங்கிருந்து யாழ்.ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ்.மாவட்ட செயலகத்தில் நிறைவடைந்தது.

பெண்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் ஏற்பட வேண்டுமென்பதனை வலியுறுத்தி ஒரேஞ்ச் கலரை தெரிவு செய்துள்ளோம். பேண்களுக்கு எதிரான வன்முறைகளில் மாற்றம் ஏற்படுத்துவற்காக இந்த நடை பயணத்தினை மேற்கொண்டுள்ள அதேநேரம், உடனடியாக மாற்றம் ஏற்படாவிட்டாலும் எதிர்காலத்தில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்துவோம். - என்பதை முன்னிறுத்தி இந்த நடை பயணம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ். மாவட்ட செயலகம் மற்றும் ஏனைய பகுதிகளிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான துண்டுப் பிரசுரங்களும் கையளிக்கப்பட்டன.

(ந-106)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

கரணவாய் டிசம் 10
கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறைப் பொலிஸார் கற்



கோவளம் புனிதநகர்ப் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட அதே இடத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரை ஒரு கிலோகிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

அவரை நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி மா. கணேசராசா முன்னிலையில்முற்படுத்தினர். குறித்த நபரை எச்சரிக்கை செய்த நீதிவான் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்தநபர் இதே குற்றச்சாட்டில் நீதிமன்றால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-108)



யாழ்ப்பாணம், பலாலி வீதியில் போக்கு வரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் போட்டிக்கு ஓடிய நிலையில் இ.போ.ச. பஸ்ஸை தனியார் பஸ் முந்திச் செல்ல முற்பட்டபோது இரு தரப்புக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் நடுவீதியில் மோதலில் ஈடுபட்டமையால் பயணிகள் செய்வதறியாது பரிதவித்தனர். நீண்ட நேரமாக இரு தரப்பினரும் தீர்வுக்கு வராத நிலையில் பயணிகள் மீண்டும் பணம் கொடுத்து வேறு பஸ்களில் பயணித்தனர். இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு பொலிஸார் இரு சாரதிகளினதும் சாரதி அனுமதி பத்திரங்களையும் பெற்றுக் கொண்டதுடன், பஸ்களையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று பதிவு செய்த பின்னர் விடுவித்தனர்.

(ந-101)

## சனசமூக நிலைய நன்கொடையை வழங்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.10
வடக்கு மாகாணத்தில் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைகளை உரிய காலங்களில் அந்தந்த சனசமூக நிலையங்களின் வங்கிக் கணக்குக்கு வழங்க வேண்டும் என வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு கேட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகச் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப் பணம் வழங்கப்படாதிருந்தது. தற்போது உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள் சனசமூக நிலையங்களின் அறிக்கைகளை சோதனை செய்து நிறைவு செய்துள்ளனர். இவ்வாறு நிறைவுசெய்த பலஉள்ளூராட்சிசபைகள் ஏற்கனவே கொடுப்பனவுகளை வழங்கியுள்ளன.

இதுவரை நன்கொடை நிதி வழங்காத ஏனைய சபைகள் உடன் சனசமூக நிலையங்களுக்கு இந்த நிதியை வழங்குமாறு உள்ளூராட்சி அமைச்சு சகலஉள்ளூராட்சிசபைச் செயலாளர்களையும் கேட்டுள்ளது.

(ந-50)

# இலஞ்ச குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி பருத்தித்துறையில் மீளவும் பணியில் இணைவு

## விசாரணைகள் தொடர்பில் பொதுமக்கள் அதிருப்தி



நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனது அலுவலகத்துக்குத் திரைமறைப்பு சீலைகள் தைத்து வழங்கியமைக்கான தனது தையல் கூலியைத் தராது அதற்கான காசோலையை அவரே எடுத்து விட்டார் என தையல் கடை ஒன்றின் உரிமையாளர் ஒருவரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.



யாழ்ப்பாணம், டிசெ.10
தையல் கடைக்காரருக்குச் சேர வேண் டிய பணத்தை லஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் இணைப்புஎடுத்துவந்துள்ளார். அதே வேளை இலஞ்சமாகப் பெற்றார் என்று கூறப்படும் பணத்தை அவர் இதுவரைதிருப்பிச்செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் முற்பகுதியில் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த குறித்த பொறுப்பதிகாரி தனது அலுவலகத்துக்குத் திரைமறைப்பு சீலைகள் தைக்க வேண்டும் என்று 35 ஆயிரம் ரூபா விலை மனு கேட்டார் என்றும், பின்னர் அதற்கான காசோலை வந்தவுடன் தன்னிடம் கையெழுத்து வாங்கிவிட்டு தனது தையல் கூலியைத் தராது முழுத் தொகையையும் அவரே எடுத்துவிட்டார் என்றும் வதிரி பகுதியில் உள்ள தையல் கடை ஒன்றின் உரிமையாளரான பாதிக்கப்பட்டவரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதுபோன்று வேறு கடைக்காரர்களும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதையடுத்து பொறுப்பதிகாரி கடந்த மே மாதம் 11 ஆம் திகதி தலை மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய லலித் ஏ.ஜெயசிங்கவால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் சீ.டி.மெதவெலவுக்கு [illegible]டது. இளவாலையில் உ[illegible] யாலயத்தில் விசாரணைகள் முன்னெக்கப்பட்டன. குறித்த தையல் கடைக்காரர் மற் றும் பாதிக்கப்பட்ட ஏனைய சிலகடைக்காரர்களிடமும் பொலிஸ்பிரிவினரால் அங்கு வாக்கு மூலங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

இருதடவைகள் பாதிக்கப்பட்டவரை தனது காரியாலத்துக்கு அழைத்த உதவி பொலிஸ்அத்தியட்சகர் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் கடை உரிமையாளரிடம் வாக்குமூலங்கள், சாட்சிகளை பெற்றிருந்ததோடு உரிய பணத்தைப்பெற்றுத்தருகின்றேன் என்றும் உறுதியளித்திருந்தார். ஆனால் 7 மாதங்கள் கடந்துவிட்டபோதும் பொலிஸ் திணைக்களம் தனக்குத் [illegible] வேண்டிய பணத்தை இதுவரை தரவில்லை என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

இந்தப் பின்னணியில் குறித்த பொறுப்பதிகாரி சுமித் பெரேரோ கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணியில் இணைந்துள்ளார். எனினும் அவர் லஞ்சமாகப் பெற்றுக் கொண்டார் என்று கூறப்படும் - கடைக்காரருக்குச் செலுத்த வேண்டிய பணத்தை அவர் இன்று வரை செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது குறித்த தையல் கடைக்காரர் தனது கடைக்குச் செல்வதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பொலிஸ் அதிகாரியால் தனக்கு ஏதாவது ஆபத்து ஏற்படலாம் என்று அவர் அஞ்சுகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாருக்கு எதிராக பொது மக்கள் முறைப்பாடுகளை வழங்கினால் தாங்கள் தண்டிக்கப்படலாம் என்று பொதுமக்கள் அச்சப்படுவதற்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். பொலிஸ் திணைக்களம்மீதுபொதுமக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படாது இருக்க பொலிஸ் உயர்பீடம் நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றும்கோரிக்கை விடுக்கப்படுகின்றன. (ந4,109,107)

## பதிவாளர் நியமனம்

கைதடி, டிசெ.10
சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வட்டுக்கோட்டைப் பிரிவுக்கான பிறப்பு இறப்பு மற்றும் விவாகப் பதிவாளராக முருகேசு ஜெயநாதன் கடந்த ஒக்ரோபர் மாதம் தொடக்கம் பதிவாளர் நாயகத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் வட்டுக்கோட்டை மூன்றாம் பனை ஐக்கிய நாணய சங்கத்தின் உறுப்பினரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும், சமூக சேவையாளரும் ஆவார்.

(ந-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் உரிமைகோரும் 271 சிங்களக் குடும்பங்கள்

## 1981 காலப் பகுதியில் வசித்தவர்களாம்

முல்லைத்தீவு, டிசெ.10
முல்லைத்தீவு மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் வசித்தனர் என்று கூறும் ஒரு தொகுதி சிங்களக் குடும்பங்கள் தம்மை மீள்குடியேற அனுமதிக்குமாறு மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட மீள்குடியேற்றம் தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் வடக்கு மாகாண மீள் குடியேற்ற அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்குடியமர்வுகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. அதன்போது

> நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக இடம்பெயர்ந்து சென்றனர் என்றும் தற்போது மீள்குடியேற அனுமதிக்க வேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலருக்கு அந்தக் குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன

மேற்குறிப்பிட்ட விடயமும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வசித்தனர் என்று குறித்த 271 குடும்பங்களும் கூறுகின்றன. நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக தாம் இடம்பெயர்ந்து சென்றனர் என்றும், தற்போது மீள்குடியேற அனுமதிக்க வேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலருக்கு அந்தக் குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்றங்கள் குறித்து ஆராயப்படும் சந்தர்ப்பத்தில் இந்த விடயம் குறித்தும் கவனத்தில் எடுத்துக் கொள்வது என்று கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது என்றும் கூறப்பட்டது. (ற-101)



தீ விபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு தம்மைப் பாது காத்துக் கொள்வது என்பது குறித்து வவுனியா மாவட்ட செயலகத்தின் திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோத்தகர்களுக்கு செயன்முறை விளக்கம் நேற்று வழங்கப்பட்டது. வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ். சூரியகுமார், உதவி மாவட்ட செயலாளர் நா. கமலதாசன், வன்னி மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எச்.எம். நபீல் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (ற)

## வட்டுவாகல் பாலம் அமைக்க 1,200 மில்லியன் ரூபா தேவை

### முல்லை மாவட்டச் செயலர் தகவல்

முல்லைத்தீவு, டிசெ.10
முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தை புனரமைப்பதற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச்செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட மீள்குடியேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன்போது கருத்துத் தெரிவித்த மாவட்ட செயலர், பாலத்தை உடனடியாகத் திருத்த வேண்டிய கட்டாயம் உள்ளது என்று குறிப்பிட்டார்.

1950ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட சுமார் 200மீற்றர்நீளமான இந்தப் பாலம்பலத்தசேதங்களைச் சந்தித்துள்ளது. போரால் பெரும் சேதமடைந்த இந்தப்பாலம் சிறு சிறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பிரயாணம் மேற்கொள்ளத்தக்க வகையில் மாற்றப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த மாதம் பெய்த கடும் மழையால் இந்தப் பாலத்தினூடாக வெள்ளம் வான் பாய்ந்தது. அதனால் பாலம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. அதனால் பாலத்தை உடனடியாகத்திருத்தவேண்



டிய தேவை ஏற் பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வீதி அதிகார சபையின் கீழ் உள்ள இந்தப் பாலத்தை மீள அமைப்பதற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப் பட்டுள்ளது. அதற்கான நிதி கிடைக்கப் பெற்றால் பாலம் அமைக்கும் பணி உடனடியாக ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-21)

## இந்திய அரசின் நிதியுதவியில் வவுனியாவில் நோயாளர் விடுதி

வவுனியா, டிசெ.10
இந்திய அரசின் 180 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் கட்டப்பட்ட நோயாளர் விடுதி எதிர்வரும் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த விடுதியானது 200 நோயாளிகளுக்கான படுக்கை வசதிகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடமாகும்.

இந்த நிகழ்வில் மத்திய சுகாதார அமைச்சர், மாகாண முதலமைச்சர், மாகாண சுகாதார அமைச்சர், இந்தியத் தூதுவர், யாழ்.இந்தியத் துணைதூதுவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-21)

## மன்னாரில் எயிட்ஸ் விழிப்புணர்வு



மன்னார், டிசெ.10
சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்த விழிப்புணர்வு ஊர்வலம் மன்னாரில் நேற்றுக் காலை நடைபெற்றது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக மு.ப. 8.45 மணியளவில் ஆரம்பமான விழிப்புணர்வு ஊர்வலம் பிரதான வீதியூடாகச் சென்று மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்தது. தொடர்ந்து ஊர்வலம் மன்னார் நகர சபை மண்டபத்தை சென்றடைந்தது. அங்கு எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடை பெற்றது.

அதில் மன்னார் மாவட்ட தொற்றா நோய் வைத்திய அதிகாரி மருத்துவர் ஏ.அன்ரன் சிசில், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ரூபன் லெம்பேட், மன்னார் பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் கே.சுதாகரன், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.வெற்றி நாதன் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், தன்னார்வத் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற-56)

# காட்டு யானைகளால் ஏற்பட்ட அழிவுகளின் விவரமில்லை

## சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் கைவிரிப்பு

முல்லைத்தீவு, டிசெ.10
முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டுயானைகளின் அட்டகாசத்தால் அழிவடைந்த மக்களுடைய சொத்துக்கள் பற்றிய சேத விவரங்களை அதற்குப் பொறுப்பாக உள்ள எந்தத் திணைக்களங்களும் திரட்டவில்லை.

இவ்வாண்டு ஏற்பட்ட அழிவு விவரங்கள் குறித்து அந்தத் திணைக்களங்களில் கேட்டபோது அதுகுறித்த விவரங்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்று அவர்கள் கைவிரித்தனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காட்டுயானைகளால் முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு, இத்திமடு, மாங்குளம், கரிப்பட்டமுறிப்பு, அம்பகாமம், தச்சடம்பன், நெடுங் கேணி ஆகிய பல பகுதிகளில் உள்ள வீடுகள் உட்பட பயிர்கள், தென்னைகள் எனப் பல சொத்துக் கள் நாளாந்தம் யானைகளால் சேதமாக்கப்படுகின்றன என்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக இடர் முகாமைத்துவக் குழுவினர், வன ஜீவராசிகள் திணைக் களத்தினருக்கு பல முறைகள் அறிவித்துள்ளபோதும் யானைகளின் அட்டகாசத்தை நிறுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள்தெரிவித்தனர்.

[illegible] [illegible] னைகளுக்குள் புகும் யானைகள் வீடுகளை நாசமாக்குகின்றன என்றும், விதைப்பதற்காக வைக்கப்பட்ட நெல் மூடைகள், அறுவடை முடிந்து வீட்டிலே அடுக்கப்படும் நெல் மூடைகள் என பலவற்றை சேதப்படுத்துகின்றன என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

யானைகளால் சேதமாக்கப்பட்ட சொத்து விவரங்கள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவத்துவப் பிரிவினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தம்மிடம் அது குறித்த பதிவுகள் இல்லை என்று தெரிவித்தனர். முல்லைத்தீவு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரைத் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு வன ஜீவராசிகள் திணைக் களத்தினரைத் தொடர்பு கொண்டபோது [illegible] அவ்வாறான தகவல் [illegible] இல்லை என்றனர். கிளிநொச்சி வன விலங்குகள் திணைக்களத்தினரே இவ்வாறான தரவுகளைச் சேகரிப்பார்கள். அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் என்று பதிலளித்தனர்.

அதையடுத்து கிளிநொச்சியில் உள்ள வன ஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் கேட்டபோது தம்மிடம் எந்தத் தரவுகளும் இல்லை என்று அவர்கள் கைவிரித்தனர்.

தம்மிடம் 2014 ஆண்டுக்குரிய தரவுகளே உள்ளன என்றும், 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட சேதவிவரங்கள் தொடர்பில் தரவுகள் இல்லை என்றும் தெரிவித்து தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தனர்.

மீண்டும் அழைப்பு எடுத்தபோது தமிழ் பேசத் தெரிந்தவர்கள் இல்லை என்று பதிலளித்தனர். ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களிடம் தொலைபேசியைக் கொடுங்கள் என்று கேட்டபோது அவ்வாறானவர்கள் இல்லை என்று தெரிவித்து மீண்டும் தொடர்பைத் துண்டித்தனர். (ற-21,ரி7,500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்புச் செயற்பாடு 32 பேருக்கு எதிராக வழக்கு

## கோப்பாய் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை

அச்சுவேலி, டிசெ. 10

கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டின்போது 32 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 242 காணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கைத் துண்டுகள் ஒட்டப்பட்டுள்ளன.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கே.மகேந்திரனின் வழிப்படுத்தலில் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பிரிவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம அலுவலர் பிரிவு, டெங்கு ஒழிப்புக் குழுவினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

டெங்கு ஒழிப்புக் கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்ட நேரடி அவதானிப்பின் நிமித்தம் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்காத 32 பேர் மீது நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 242 காணிகளில் கால அவகாசம் வழங்கி இறுதி அறிவித்தல் என்ற வகையில் சிவப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

> மாரிமழையை அடுத்து டெங்கு நுளம்பு பெருக்கமடையக் கூடிய நிலை காணப்படுவதால் பொதுமக்கள் விழிப்புணர்வோடு டெங்கு நுளம்புப் பெருக்கத்தை இல்லாமல் செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு யாழ். மாவட்டத்தில் கூடியளவு குடும்பங்களையும் சனத்தொகை அளவையும் கொண்டது.

அத்துடன் அங்கு ஒப்பீட்டளவில் டெங்குத் தாக்கம் கூடியவில் உள்ள பிரிவு என்றும் கணிக்கப் படுகின்றது. அந்தப் பிரிவில் இந்த வருடத்தில் இதுவரை நூறு பேர் வரையில் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின் றது.

மாரிமழையை அடுத்து டெங்கு நுளம்பு பெருக்கமடையக் கூடிய நிலை காணப்படுவதால்பொதுமக்கள் விழிப்புணர்வோடு டெங்கு நுளம்புப் பெருக்கத்தை இல்லாமல்செய்வதற்கானமுன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர். (ற-11)

### தேங்கியுள்ள வெள்ளத்தால் தென்னைச் செய்கை பாதிப்பு

சாவகச்சேரி, டிச.10

மீள்நடுகைத் திட்டத்தில் நடப்பட்ட தென்னம்பிள்ளைகள்உள்ளகாணிகளுக்குள் வெள்ளம் தேங்கியுள்ளதைஅடுத்துஅவற்றைப் பிடுங்கி வேறிடங்களில் நட வேண்டிய நிலைமை தோட்ட உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மீள்குடியமர்வின்பின்னர்கடந்தஓகஸ்ட் மாதம் மீள்நடுகைத் திட்டத்தின் கீழ் காணிகள் மற்றும் தோட்டங்களில் தென்னம் பிள்ளைகள் நடுகை செய்யப்பட்டன.

கடந்த இரண்டு மாதங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பெருமழையால் ஏற்பட்ட வெள்ளம் காணிகளில் நீண்ட நாள்களாக வற்றாமல் காணப்படுவதால், தென்னம் பிள்ளைகள் அழுகிப் போகும் நிலை காணப்பட்டது. அதனால்நடப்பட்டஅனைத்துத் தென் னம்பிள்ளைகளும் அந்த இடத்திலிருந்து பெரும் சிரமங்களின் மத்தியில் பிடுங்கி எடுக்கப் பட்டு வெள்ளம் நிற்காத பகுதிகளில் நடப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டுக்கு முன்னர் அங்கிருந்த தென்னம்தோட்டங்கள் போரால் அழிக்கப்பட்டிருந்தன. இந்தப் பகுதியில் வெடிப்பொருள்கள் அகற்றப்பட்டு மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் பல தென்னந் தோட்டங்கள் மீள்நடுகை செய்யப்படாமல் பற்றைக் காடுகளாகக் காணப்பட்டன.

அங்கு நேரில் சென்று பார்வையிட்ட யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் அழிந்து போன தென்னந் தோட்டங்களில் மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் தென்னம் பிள்ளைகளை நடுகை செய்யுமாறு குடி யிருப்பாளர்களையும் தோட்ட உரிமையாளர்களையும் கேட்டிருந்தார். அதனையடுத்து தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்களால் தோட்டங்கள் மற்றும் குடி யிருப்புகளின் விவ ரங்கள் பதிவு செய்யப்பட்டன. இதனையடுத்து பற்றைகளாகக் காணப்பட்ட காணிகள் வாகனங்கள்மூலம்துப்புரவு செய்யப்பட்டுஉழவுவேலைகள் மேற்கொண்ட பின்னர் தென்னம்பிள்ளை கள் நடுகை செய்யப்பட்டன.

கனரக வாகனங்கள் மூலம் துப்புரவு செய்யப்பட்டமை மற்றும் உழவு இயந்திரங்கள் மூலம் உழவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டமை போன்றவற்றால் காணிகளில் மேடு பள்ளம் ஏற்பட்டு மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது

காணிகளில் தேங்கியுள்ள வெள்ளம் வடிந்து பழைய நிலைக்குத் திரும்ப குறைந்தது இரண்டு மாதங்களுக்கு மேல் செல்லும் என்பதால் அதுவரை தென்னம்பிள்ளைகள் தாக்குப் பிடிக்காமல் அழுகிவிடும் என்பதைக் கருத்தில் கொண்டு நடப்பட்ட அனைத்துத் தென்னம் பிள்ளைகளும் பிடுங்கி எடுக்கப்பட்டு வெள்ளம் இல்லாத பகுதிகளில் நடப்பட்டுள்ளன என்று தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ற-9)

### பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, வழமையாக கூட்டம் நடைபெறும் இடத்தில் இடம்பெறவுள்ளது என்று அந்த அமைப்பின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (ற-5)



இலஞ்ச ஊழலுக்கு எதிரான சர்வதேச தினம் நேற்று நாடெங்கிலும் உள்ள அரச அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்பட்டது. பரிசுத்தமான தேசம் ஒன்றை நாளைய சந்ததியினருக்கு உரித்தாக்கும் உயரிய நோக்குடன் முன்னோடியாக அர்ப்பணிப்புடன் தனிப்பட்ட ரீதியிலும் தொழில் சார்ந்த வாழ்விலும் சிறந்த வெளிப்படைத்தன்மையுடன், பொறுப்புக்கூறும் வகையிலும், அர்ப்பணிப்புக் கண்ணோட்டத்துடனும், இலஞ்சமும் ஊழலுமற்ற கௌரவமான பிரஜையாக அபிமானத்துடன் வாழ்வேன் என்றும், சேவையாற்றுவேன் என்றும், நான் திடசங்கற்பத்துடனும் கௌரவத்துடனும் உறுதியளிக்கிறேன் என இலங்கைத் தேசியக் கொடியின் கீழ் நின்று அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையிலான மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். (ற-9)

### போதையில் சாரத்தியம்; இருவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, டிசெ.10

மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளின் சாரதிய அனுமதிப்பத்திரங்களை தலா ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக இருவருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அதன்போது சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன், சாரதிய அனுமதிப் பத்திரத்தை 6 மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது. (ற-9)

### டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்

அச்சுவேலி, டிசெ. 10

இலங்கை விவசாயத் திணைக்களத்தினால் நடத்தப்படும் விவசாய உற்பத்தி தொழில் நுட்பத்தில் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்று சித்தி எய்திய 17 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்கள் இதற்கு விண் ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் டிசெம்பர் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பேராதனை விவசாயத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விவசாய தேசிய டிப்ளோமா 2016/2017 ஒரு வருடப் பாடநெறி தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடைபெறவுள்ளது. அனுமதிக்கான போட்டிப் பரீட்சை 2016 ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. (ற-11)

## சிகிச்சை நேரத்துக்கு 15 நிமிடம் முன்னதாக வருதல் போதுமானது

### சாவ. வைத்தியசாலை கிளினிக்குகளுக்குச் செல்லும் நோயாளருக்கு அறிவுறுத்தல்

சாவகச்சேரி, டிச.10

சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைபெறும் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்துக்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வைத்தியசாலைக்கு வர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் ஆரம்பமாகும் கிளினிக்கில் பொது மருத்துவநிபுணர் உட்பட 6 வைத்திய அதிகாரிகள் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குகின்றனர். பிரதி செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் நடத்தப்படும் பொது மருத்துவம் மற்றும் நீரிழிவு சிகிச்சைகளில் வாராந்தம் 600க்குமேற்பட்ட நோயா[illegible] ளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படு[illegible] கிறது. இந்த நோயாளர்களுக்கு காலை 8 மணி தொடக்கம் 9 மணி 10 மணி 11 மணி 12 மணி 1 மணி என நேரம் குறிப்பிடப்பட்டு பதிவுகள் வழங்கப்படுகின்றன.

ஆயினும் முப 11மணிக்கு நேரம் குறிப்பிடப்பட்டுள்ள நோயாளர் காலை 7 மணிக்கே கிளினிக் கட்டடத்தில் வந்து அமர்ந்து கொள்கின்றார். ஒரே நேரத்தில் அனைத்து நோயாளர்களும் கிளினிக் கட்டடத்தில் குவிவதால் கட்டடத்தில் இடநெருக்கடி ஏற்படுகின்றது.

அதையடுத்து நேற்றுமுன்தினம் தொடக்கம் கிளினிக்குக்கு வரும் நோயாளர்களின் கிளினிக் கொப்பியில் உள்ள நேரத்தைப் பார்த்து பாதுகாப்பு அலுவலர்கள் சிகிச்சைக்கு அனுப்புகின்றனர். [illegible] பார்வையாளர் [illegible] டடத்தில் தங்க வைக்கப்பட்டு கிளினிக் கொப்பிகள் சேகரிக்கப்பட்டு கிளினிக் கட்டடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் கொப்பியில் குறித்த நேரத்துக்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் கிளினிக் கட்டடத்துக்கு அனுப்பப்படுகின்றனர்.

அதேவேளை கிளினிக் கட்டடத்தில் ஆறு வைத்தியர்கள் சிகிச்சை வழங்கக்கூடிய கட்டட வசதிகள் உள்ள போதிலும் அவற்றில் மூன்று அறைகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பொது வைத்திய நிபுணர் ஒரு அறையிலும், ஏனைய இரு அறைகளில் மூன்று அல்லது இரண்டு வைத்திய அதிகாரிகள் வீதம் அமர்ந்திருந்து நோயாளர்களைப் பார்வையிடுகின்றனர். [illegible]தாக அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை அறைகளுக்கு எந்தவொருவசதியும் செய்யப்படவில்லை எனவும் அதனால் சிரமங்களின் மத்தியில் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது வைத்தியர்களின் பரிசோதனைக்கென தனித்தனி அறைகள் அமைக்கப்பட்ட போதிலும் அதற்கு குளிரூட்டி வசதியோ அல்லது மின்விசிறி வசதியோ இதுவரை செய்யப்படவில்லை. உரிய அதிகாரிகளுக்கு இது தொடர்பாக அறிவித்து நான்கு மாதங்களுக்கு மேலாகியும் அறைகளுக்கு உரிய வசதிகள் செய்து தரப் படவில்லையெனவும் வசதிகள் செய்து தரப்பட்டால் வைத்தியர்கள் சிரமங்களின்றி நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத்தின் செயற்பாடு திருப்தியானதாக இல்லை

## சந்தியா எக்னெலிகொட குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ 10
ஊடகவியலாளர் காணாமற் போகச் செய்யப்பட்ட விவகாரத்தில் இலங்கை இராணுவம் செயற்படும் விதம் திருப்தியானதாக இல்லை எனக் குற்றம் சுமத்தியுள்ளார் காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட.

ஊடகவியாளர்கள் காணாமற் போகச் செய்யப்பட்ட விவகாரத்தில் சில அரச நிறுவனங்கள், குறிப்பாக இலங்கை இராணுவம் செயற்படும் விதம் தனக்குத் திருப்தியானதாக இல்லை எனவும் இலங்கை இராணுவமும் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் மந்தகதியில் செயற்படுகின்றமை தனக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவில் வைக்கப்பட்டிருந்த இராணுவப்புலனாய்வுப்பிரிவின் முன்னாள் அதிகாரிகள் இரண்டு பேர் ஹோமகம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். எக்னெலிகொட காணாமற் போகச்செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின்போது, இவர்கள் இருவரும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் கைதுக்குச் சில அமைப்புக்களினால் ஏற்கனவே எதிர்ப்பு இருந்துவந்த நிலையில்,

> கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதி மன்ற வளாகத் துக்குச் சில கிலோ மீற்றர் களுக்கு அப்பால் நகரின் மத்தியில் நாட்டுக்காக இராணுவத்தினர், சிவ்பல சேனா என்ற அமைப்பு கள் உட்பட பல சிவில் குழுக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

அசம்பாவிதங்கள் ஏதேனும் ஏற்படலாம் என்ற அச்சத்தினால் ஹோமகம நீதிமன்ற வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்துவதற்கு நீதிமன்றம் தடைவிதித்திருந்தது. அங்கு மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் இவர்களது கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்ற வளாகத்துக்குச் சில கிலோ மீற்றர்களுக்கு அப்பால் நகரின் மத்தியில் நாட் டுக்காக இராணுவத்தினர், சிவ்பல சேனா என்கிற அமைப்புகள் உட்பட பல சிவில் குழுக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

"இராணுவத்தினர் மீது கை வைக்காதே", "இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்காதே" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்திய வாறு கோசமெழுப்பினர்.

இந்தப் பின்னணியில், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்த இரு முன்னாள் இராணுவ அதிகாரிகளும் நீதிமன்றுக்கு அழைத்து வரப் பட்டனர். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி இந்த மாதம் 17ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்துள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னிலிகொட 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சில நாள்களுக்கு முன்னர் காணாமற்போனமை குறிப்பிடத்தக்கது. (த-10)



இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

# பணிப்பெண்ணுக்கு மன்னிப்பளியுங்கள்

## இலங்கை முஸ்லிம் கவுன்ஸில் சவூதி மன்னரிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ 10
துர் நடத்தை காரணமாக கல்லால் எறிந்து கொல்வதற்குத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண்ணுக்கு மன்னிப்பு வேண்டி இலங்கை முஸ்லிம் கவுன்ஸில் சவூதி அரேபியாவின் மன்னரான சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல்சாவுத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

வறுமையில் வாடும் இத்தகைய பெண்கள் சவூதி அரேபியாவில் நிலவும் கடுமையான சட்டங்கள் பற்றி அறிந்திராத காரணத்தால் புரிந்துள்ள இந்தக் குற்றத்துக்கு மன்னிப்பை வழங்குமாறு மேற்படி கவுன்ஸில் தனது கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவின் சட்டதிட்டங்களுக்குத் தாம் மதிப்பளிப்பதோடு சவூதி அரேபிய நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் மனிதாபிமானம் என்ற பக்கத்தில் கீழ்நிலைக்குச் சென்றிருப்பவை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ள முஸ்லிம் கவுன்ஸில் மனிதாபிமான காரணிகளுக்காக இவருக்கு மன்னிப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. (த-22)





# குற்றவாளிகளுடன் தொடர்பு; 30 சிறைக் காவலர் பணி நீக்கம்

கொழும்பு, டிசெ 10
போதைப்பொருள் கடத்தல் புள்ளிகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 30 சிறைக் காவலர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைத் தலைமையகம் தெரிவிக்கிறது.

இரு பெண் காவலர்கள் உள்ளிட்ட சார்ஜன்ட் ஒருவரும் இந்த 30 பேரில் உள்ளதாகவும், இத்தகைய குற்றச்சாட்டுக்களில் இந்த ஆண்டில் மாத்திரம் கனிஷ்ட தரத்தில் உள்ள 19 சிறைக் காவலர்கள் பணியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரான துஷார உபுல் தெனிய தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் மன்னனான வெலேசுதாவிடமிருந்து ஈஸிகேஸ் முறைமையூடாக இலட்சக்கணக்கில் பணத்தைப் பெற்றுள்ள 17 சிறைக் காவலர்களும் இதில் உள்ளடங்குவர்.

தற்போது இவர்கள் குறித்து ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வும் உபுல் தெனிய தெரிவித்தார். (த-22)

# விரக்தியில் கோத்தா

## அரசியல் பழிவாங்கலே காரணமாம்

கொழும்பு, டிசெ, 10
அரசியல் ரீதியாக நான் பழிவாங்கப்படுகின்றேன் இவ்வாறு விரக்தியாகத் தெரிவித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,
மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பிலான விசாரணைகள் எனக்கு பெரும் தொந்தரவாக உள்ளது. ஒரே சம்பவம் தொடர்பில் பல தரப்பினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் பல்வேறு தரப்பினரின் விசாரணைகளுக்கும் முன்னிலையாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பெரும் நிதி மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவு ஆகியன ஒரே சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றன. இவ்வாறான விசாரணைகளை அரசியல் ரீதியான துன்புறுத்தலாகவே கருதப்படவேண்டும்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்காக மட்டும் பத்து தடவைகள் நான், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள விசாரணைக் குழு அலுவலகத்தில் முன்னிலையாகியுள்ளேன். ஒரு சம்பவம் தொடர்பில் ஒரு நிறுவனத்தினால் விசாரணை நடத்தப்படுவதே ஏற்றுக்கொள்ளக் கூடிய நியதி. எனினும் எனக்கு எதிராகப் பல்வேறு தரப்பினர் ஒரே விடயம் குறித்து பல தடவை விசாரணை நடத்தி அரசியல் ரீதியாக பழிவாங்குகின்றனர் எனத் தெரிவித்தார். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் சர்வதேசத்திடம் தாரை வார்ப்பு

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 10

வரவு–செலவுத் திட்டத்தின் ஊடாக இந்த நாட்டின் பொருளாதாரம் வெளிநாட்டு நிறுவனங்களிடமும், வெளிநாட்டுச் செல்வந்தர்களிடமும் தாரை வார்க்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும், மகிந்த ஆதரவு அணியின் முக்கியஸ்தருமான வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், மக்கள் எதிர்ப்பினால் வரவு–செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல யோசனைகள் மீளப் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுப் புதன் கிழமை கொழும்பில் இடம்பெற்ற போது, அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இன்று அரசுக்குள்ளேயே அதன் எதிர்காலப் பயணம் குறித்து தெளிவில்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. வரவு–செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட பல யோசனைகளை அவர்கள் திரும்பப் பெற்றுள்ளதுடன், ஒரு சில யோசனைகள் மாற்றப்பட்டுள்ளன.

> இந்த வரவு–செலவுத் திட்டத்தின் மூலம் இந்த அரசு எந்தளவுக்கு மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது என்று நன்கு தெளிவாகின்றது. மக்களின் எதிர்ப்பினால் இந்த அரசு பல யோசனைகளை மீளப் பெற்றுக்கொண்டுள்ளது.

அத்துடன், எதிர்க்காலத்தில் இன்னும் எத்தனை யோசனைகள் மாற்றப்படும் என்பதை எதிர்வுகூற முடியாதுள்ளது. உரமானியம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, அந்த யோசனையும் மீளப்பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகப் பத்திரிகை மூலம் அறிந்து கொண்டோம்.

இந்த வரவு–செலவுத் திட்டத்தின் மூலம் இந்த அரசு எந்தளவுக்கு மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது என்று நன்கு தெளிவாகின்றது. மக்களின் எதிர்ப்பினால் இந்த அரசு பல யோசனைகளை மீளப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்த வரவு–செலவுத் திட்டத்தின் ஊடாகச் சர்வதேச செல்வந்தர்கள், சர்வதேசக் கம்பனிகளைப் பிரதானமாக்கி, இந்த நாட்டுப் பொருளாதாரத்தை அவர்களின் காலடியில் வீழ்த்தும் செயற்பாட்டினை இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்றார். (த)

# நாட்டைச் சீரழிக்கின்றனர் மகிந்தவும், கோத்தாவும்

## அசாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் மீண்டும் இனங்களுக்கிடையில் முறுகல் நிலையினைத் தோற்றுவிக்கும் முயற்சியில் மகிந்த ராஜபக்சவும் அவரது சகோதரர் கோத்தபாயவும் ஈடுபட்டுள்ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளின் கொள்கைகளை செயற்படுத்தியதாகவும், அந்த இயக்கம் இல்லாமல் செய்யப்பட்டதன் பின்னரும் கூட்டமைப்பினர் அவர்களது கொள்கைகளைச் செயற்படுத்தி வருவதாகவும் நாலக தேரர் தெரிவித்து வருகின்றார். இது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் தடுக்கும் நோக்கில் பரப்பப்படும் கருத்தாகும். கோத்தபாய மற்றும் மகிந்த ஆகியோர் பிக்குகளை வைத்துக்கொண்டு இவ்வாறான தவறான கதைகளைப் பரப்பி வருகின்றனர். மேலும், ரக்பி வீரர் வசிம் தாஜுதீன் கொலைச் சம்பவம் தொடர்பில் பல்வேறு கருத்துகள் நிலவிவருகின்றன. எனினும் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவேண்டும்.

இந்தக் கொலைச் சம்பவத்தை மூடி மறைத்த பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அநுர சேனாநாயக்க உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் என்றார். (த)

ஒளிப் படச் செய்தி




# இன்றே சோதிப்போம்

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை மற்றும் மாவட்ட பாலியல் நோய் தடுப்புப் பிரிவு என்பன இணைந்து முல்லைத்தீவு மாவட்ட சிறிலங்கா குடும்பத்திட்ட சங்கத்தின் அனுசரணையில் நேற்றுமுன்தினம் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.



‘இன்றே பரிசோதனை செய்து மகிழ்ச்சியாக வாழ்வோம்’ என்ற தொனிப் பொருளில் முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

இந்த ஊர்வலத்தில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், முல்லைத்தீவு மாவட்ட சிறிலங்கா குடும்பத்திட்ட சங்கத்தின் அலுவலக ஊழியர்கள், பிராந்திய சுகாதார பணிமனையின் ஊழியர்கள், பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், முள்ளியவளை மற்றும் முல்லைத்தீவு பொலிஸார், ஆட்டோ சாரதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பதாதைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வீதியில் ஊர்வலமாகச் சென்று எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப் புணர்வுகளை வழங்கினர். (ற–426)






# மீனவரின் சடலம் மீட்பு

திருகோணமலை, மூதூர் மகாவலி ஆற்றுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மீன் பிடிப்பதற்குச் சென்ற மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மல்லிகைத்தீவு, பெருவெளியைச் சேர்ந்த மதுரவீரன் பேரின்பநாயகம் (வயது–32) என்ற இளம் குடும்பஸ்தரே காணாமற்போன நிலையில், நேற்றுப் புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீன் பிடிக்கச் சென்ற இவர், இரவாகியும் வீடு வராமை தொடர்பில் மூதூர் பொலிஸாருக்கும் அயலவர்களுக்கும் அவரது மனைவி தெரிவித்துள்ளார். இதனை அடுத்து பிரதேச மக்கள் பலரும் மகாவலி ஆற்றில் தேடியபோது, இவர் சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர். (த)

# கிழக்கு மாகாணத்தில் மத நல்லிணக்க மன்றம்

மட்டக்களப்பு, டிசெ. 10

சிறுவர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பிற்கான மத நல்லிணக்க மன்றம், வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் எம்.தயாபரன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வேர்ல்ட் விஷன் சர்வதேச உதவி நிறுவனங்களின் அனுசரணையுடன் வெருகல் மற்றும் சேருவில் பிரதேச செயலகப் பிரிவுகளை இணைத்து இந்தச் சிறுவர் மற்றும் மாற்றுத் திறனாளிகளை ஒருங்கிணைப்பதற்கான மத நல்லிணக்க மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதேச செயலாளர் எம்.தயாபரன், மாற்றுத் திறனாளிகளும் எமது குடும்பத்தில் ஒருவர் என்பதனை நாம் [illegible] காலத்தின் தேவை [illegible] இப்பொழுது சிறுவர்கள் மீதான வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துள்ள நிலையிலேயே, நாம் சிறுவர்கள் தொடர்பான பாதுகாப்புக் குறித்தும், சிறுவர் உரிமைகள் குறித்தும் அதிகமாகப் பேசி வருகின்றோம்.

நம்மில் தங்கி வாழ்கின்ற சிறார்கள் தொடர்பாக நமது சமூகமும், சமூக நிறுவனங்களும். அதிகாரிகளும், பெற்றோர்களும் [illegible] கொள்ளவேண்டும். [illegible]த்திலுள்ள எல்லாத் தரப்பினருக்குமான ஒருங்கிணைந்த வேலைத் திட்டமொன்று அவசியம் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரியும் வளவாளருமான மாற்றுத் திறனாளி சார்ள்ஸ் ராஜ்குமார், வேர்ல்ட் விஷன் நிறுவன கொழும்புப் பணிமனை இணைப்பாளர் ஜோன் தேவதாசன், திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் இம்மானுவேல் பிரகாஸ்குமார், வெருகல் உதவிப் பிரதேச செயலாளர் எம்.கே.எம். முபாறக் உட்பட மத அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலக அதிகாரிகள், பொது மக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உலக நாடுகளுக்கான நியமங்களை பக்கச் சார்பற்றுப் பேணுக!

இன்று, டிசெம்பர் மாதம் பத்தாம் திகதி, அனைத்துலக மட்டத்தில் மனித உரிமைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

அனைத்து மக்களினதும் அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தி, அனைவரினதும் மனித உரிமைகளைப் பாதுகாக்க, இந்த நாளில் உறுதி எடுத்துக் கொள்வோம் என்பது --

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் - கீ மூனின் மனித உரிமைகள் நாள் தொடர்பான கருத்தாகும்.

அனைத்துலக மனித உரிமைகள் குறித்த பிரகடனம் வெளிப்படுத்தப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட ஐம்பதாவது ஆண்டாகவும் இது அமைகிறது.

உலகளாவிய மக்கள் அனைவரினதும் சிவில் மற்றும் அரசியல், பொருளியல், கலாசார, சமூகவியல் உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டு இன்று ஐம்பது வருடங்கள் -- அரைநூற்றாண்டு -- நிறைவடைகிறது என்ற சிறப்பு கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

ஐம்பது ஆண்டுகள் கடந்தேகிவிட்டபோதிலும் -- கரைந்தோடிவிட்ட போதிலும் -- உலக மக்கள் அனைவருக்கும் உரிய பேச்சுரிமை, வழிபாட்டு உரிமை, கலாசாரத்தைப் பேணிக் காக்கும் உரிமை ஆகியவை மேன்மேலும் செயலாக்கப்பட வேண்டிய தேவை உண்டு.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள (மனித) உரிமைகள், சுதந்திரங்கள் அவர்களது உயிரோடு இணைந்துள்ளன என்ற எடுகோள், என்றைக்கும் நிலைத்து நிற்கும் நியமமாகும் என்றும் ஐ.நா. சபையின் பிரகடனங்கள் மேலுயர்த்தித் தெரிவிக்கின்றன.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக பழுதிலாத் திறனுடன் அனைத்துலக நாடுகள் அவற்றைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்ற அழித்து எழுத முடியாத நியமம் செவ்வனே செயற்பட்டு வருவதாக --

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் தொட்டுக் காட்டி உள்ளதையும், உலகின் அரச தலைவர்கள் உய்த்துணர்ந்து செயற்பட வேண்டியது அவர்களுக்கு உரிய கடமை.

மனித உரிமைகள் தினத்தை, ஆண்டுதோறும் டிசெம்பர் பத்தாம் திகதியன்று கொண்டாடுவது, வழமையாகிவிட்ட போதிலும், அதன் எடுகோள்கள் உலகின் பல நாடுகளால் கருத்தில் கொள்ளப்படுவதில்லை என்பது பெரும் பின்னடைவாகவே தொடர்கிறது.

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாடுகள் பலவற்றிலும் ஜனநாயகம் முற்றாகவோ, அரைகுறையாகவோ கசக்கி, நசுக்கி வீசப்படுகின்றன.

ஜனநாயக அரசு என்ற போர்வைக்குப் பின்னால், பல நாடுகளில் சிறுபான்மையின மக்களுக்குச் சேர வேண்டிய ஜனநாயக உரிமைகள் கடாசப்பட்டு, அவர்கள் அரசியல் அநாதைகள் ஆக்கப்படுகின்றனர்.

இத்தகைய நிலையைப் போக்குவதற்கான நியமங்களை வகுத்து, சம்பந்தப்பட்ட நாடுகளைத் தண்டிக்க, ஐக்கிய நாடுகள் சபை, உகந்த வழிமுறைகளை வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.

பாகுபாடும், பாரபட்சமும் மேலெழாத வகையில், உலக நாடுகள் அனைத்துக்குமான நியமங்கள், பக்கச்சார்புகள் அற்ற நிலை நின்று பேணப்பட வேண்டும். எதிர்பார்க்கலாமா......?

# வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் கட்டுப்பாடு



இலங்கை அரசானது அடுத்த ஆண்டுக்கான பரிந்துரைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை அண்மையில் வெளியிட்டது. இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வரி வருமானம் உட்பட அடிப்படை விடயங்கள் தொடர்பான அரசாங்கத்தின் கணிப்பீடுகள் தொடர்பானசந்தேகங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட பெரும்பாலான விடயங்கள் போலியானவை எனக்கொழும்பைத்தளமாகக் கொண்டியங்கும் பத்திரிகையாளரான குசல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஏனைய விவகாரங்களுக்கு மத்தியில், இந்த வரவுசெலவுத் திட்டமானது நாட்டில் பொருளாதார சமமின்மைக்கு வழிவகுக்கும் எனவும் பெரேரா கருதுகிறார்.

இதனைச் சாதகமாக நோக்கில், கடந்த காலங்களில் இலங்கையை ஆட்சி செய்த மகிந்த ராஜ பக்சவை விட தற்போதைய

> “2014இல் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மொத்தச் செலவினங்களின் 62 சத வீதத்தை ராஜ பக்ச தனது கட்டுப் பாட்டில் வைத்திருந்தார்.”

அதிபர் மைத்திரிபால சிறிசேன, வரவு செலவுத் திட்டம் மீது மிகக் குறைந்த கட்டுப்பாட்டையே கொண்டிருப்பார்.

**மகிந்தவின் கட்டுப்பாட்டில் 62 சதவீதம்**

2014இல் வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மொத்தச் செலவினங்களின் 62 சத வீதத்தை ராஜபக்ச தனது கட்டுப் பாட்டில்வைத்திருந்தார். ஆனால் 2016இல் [illegible] செலவினங்களில் கிட்டத்தட்ட 10 சதவீதம் மாத்திரமே சிறிசேனவின் கட்டுப்பாட்டில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் பாதுகாப்புச் செலவினங்கள் என்பது மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை கெட்ட வாய்ப்பாகும். 2016இன் பாதுகாப்புச் செலவினமானது 2014 இல் வரையறுக்கப்பட்ட பாதுகாப்புச்செலவீனத்தை விட 20 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2014ல் ஒதுக்கப்பட்ட பாதுகாப்புச் செலவினத்தில் நகர அபிவிருத்தி அமைச்சின் செலவினங்களும் உள்ளடங்கியிருந்தன. கடந்த ஜனவரியில் ராஜபக்ச ஆட்சியிலிருந்து விலகிய பின்னர், நகர அபிவிருத்தி அமைச்சானது தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படவில்லை.

ஆகவே இந்த அடிப்படையில் நோக்கும் போது 2014 ஆம் ஆண்டை விட 2016 இல் பாதுகாப்புச் செலவினமானது கணிசமான அளவில் அதிகரிக்கும் என்பதே உண்மையாகும்.

இலங்கையின் பாதுகாப்புச் செலவினமானது தொடர்ந்தும் அதிகரிப்பதற்கான காரணம் என்ன? என சமூக ஊடகங்களில் வினவப்படுகிறது.

இதனை நியாயப்படுத்துவதற்கு எவ்வித நியாயமான தேசிய பாதுகாப்புக் காரணங்களும் காணப்படவில்லை.

**தொடரும் இராணுவ மயமாக்கல்**

இலங்கையின் இடம்பெற்ற கொடிய யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் இலங்கையில் தொடர்ந்தும் இராணுவமயமாக்கல் இடம்பெறுகிறது.

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

சிறிசேன அரசாங்கமானது இன்னமும் இராணுவமயமாக்கலை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. ஆனால் பாதுகாப்புச் செலவினம் தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளதானது இது தொடர்பான பிழையான தகவலையே வெளிப்படுத்துகிறது.

**பாதுகாப்புச் செலவினம் தக்கவைக்கப்படும்**


சிறிசேனநிர்வாகமானது இராணுவமயமாக்கல் தொடர்பாக வெளிப்படையாகக் கதைக்க விரும்பியிருந்தால் மற்றும் இது ஒரு முக்கியமான விவகாரம் என் பதையும் இந்தப் பிரச்சினை யைத் தீர்க்க வேண்டும் எனவும் கருதியிருந்தால் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினத்தை ஓரளவு குறைத்திருந்திருக்கும்.

சிறிசேன அரசாங்கம் குறைந்தது பாதுகாப்புச் செலவினத்தைக் குறைத்திருந்தால் கூட இதனை வரவேற்றிருக்கலாம்.

வரவுசெலவுத் திட்டமானது இன்னமும் இறுதியாக்கப்படாது விட்டாலும்கூட, தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பாதுகாப்புச் செலவினமானது தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிசேன அரசாங்கத்தால் தவறவிடப்படுகின்ற பிறிதொரு தக்க தருணமாகவே இதனை நோக்க முடியும்.

நன்றி: புதினப்பலகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி



# தமிழ்நாட்டு உறவுகளுக்கு உதவுவது எமது கடமை

கொட்டித் தீர்த்த கனமழையினால் தமிழகத் தலைநகர் வெள்ளத்தில்மூழ்கி பல லட்சக்கணக்கான மக்கள் ஏதிலிகள் ஆக்கப்பட்டு அவல வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாத இறுதி வாரப் பகுதியில் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையையும் இருப்பையும் ஒரு கணப்பொழுதினில் இயற்கையின் சீற்றம் அடியோடு தகர்த்து விட்ட கொடிய சம்பவமானது இன்று உலகத் தமிழர்களின் கவனத்தை தமிழகத்தின் பால் இழுத்திருக்கின்றது. ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சியான கால வரையறையின்றி கொட்டித் தீர்த்த கொடுமையான மழை சென்னை மாநகர வாழ் தமிழர்களை ஏதிலிகளாக்கி உள்ளது. தமிழகம் இன்று வெள்ளத்துக்குள் மிதந்தபடி கடந்த ஒரு வாரமாகக் காட்சி தருகின்றது. பெரு வாரியான மக்களோ அடுக்கு மாடிகளிலும், மொட்டைமாடிகளிலும், முச்சக்கர வண்டிகளிலும், கனரக வாகனங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். ஒருதடவையாவது தேநீர் குடிக்கவோ, சமைத்துண்ணவோ, ஓரிரு மணிநேரம் உறங்கவோ, கைக் குழந்தைகளுக்குப் பாலூட்டவோ, கற்கச் செல்லவோ, தொழிற்றுறை களுக்குச் செல்லவோ இயலாது தமிழகத் தமிழன் இன்று நாதியிழந்துள்ளான்.

### 24 மணி நேரமும் ஒலிபரப்பு

அன்றாடம் தமிழகத்தில் உள்ள அத்தனை தமிழ் ஒலிபரப்புச் சாதனங்களும் 24 மணி நேரமும் கொடும் மழையினால் அவலப்படும் தமிழக மக்களின் வாழ்வியல் போராட்டத்தை ஒலிபரப்பிக் கொண்டிருக்கின்றன. வன்னியில் தமிழ் மக்கள் போரின்போது பட்ட அவலங்கள்போன்று, தமிழகத் தமிழர்களும் இயற்கையின் கொடிய சீற்றத்துக்கு ஆளாகித் துன்பப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஏறத் தாழ 380 இற்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர். வெள்ளத்தில் பலர் மூழ்கிப்போய் உள்ளனர். பலர் காணாமற்போயுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நூறு ஆண்டு கால வரலாற்றில் இப்படிப் பட்ட பேரழிவுகளை தமிழகம் கண்டதில்லை என ஆய்வாளர்களால் கூறப்படுகின்றது. சிங்காரச் சென்னை இன்று மக்களை வெள்ளத்துக்குள் சிக்க வைத்து எம் தொப்புக்கொடி உறவுகளை கண்ணீரில் மிதக்க வைத்துள்ளது.

ஈழத் தமிழர்கள் தங்களது போர்க்கால வரலாற்றில் பட்ட துயர்களும், இயற்கை ஆர்ப்பரித்த வெள்ளப் பெருக்கினால் தமிழக மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளும் இந்த நூற்றாண்டின் தமிழருக்கு என இடப்பட்ட சாபமா? என்ற வேத னையான வினாவே எஞ்சியிருக்கின்றது.

ஈழத் தமிழர்கள் வன்னிப் போரிலே தினமும் கொன்றொழிக்கப்பட்டபோது, கொதித்து எழுந்த எம் தமிழ் உறவுகளை ஈழத் தமிழன் இன்று நினைத்துப் பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். வன்னிப் போரின்போது தியாகி முத்துக்குமாரனும் போரின் பின்னர் செங்கொடியும் தமிழினத்தின் மீது சிங்களப் பேரினவாத அரசு நடத்திய கொடிய போரைக் கண்டித்து தீக்குளித்து தமது உயிர்களைத் தியாகம் செய்தனரே... அந்த தமிழக மக்கள் மீது வெள்ளக் கொடுமையின் இடர் இப்படிக் கோரத் தாண்டவம் ஆடியிருக்கின்றது.

ஈழத் தமிழ் மக்களுக்கும் அடைக்கலம் கொடுத்து வாழ்வளித்துக் கொண்டிருக்கின்ற தமிழகம், வன்னிப் போரின் போது ஏதிலிகளாகி விட்ட தமிழ் மக்களுக்கு கலைஞர் மு.கருணாநிதி ஆட்சியின் போது, தமிழகத்தில் இருந்து உணவுப் பொதிகளை அனுப்பி ஆறுதலளித்ததை வன்னி மக் கள் என்றுமே மறந்துவிடமாட்டார்கள். பேரிடரைத் தாங்கி நிற்கின்ற தமிழகத்து உறவுகளுக்கு என்ன கைமாறு செய்யப் போகின் றோம் என்ற நிலையில் ஈழத்தமிழர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

> “கொட்டித் தீர்த்த கன மழையினால் தமிழகத் தலைநகர் வெள்ளத்தில் மூழ்கி பல லட்சக்கணக்கான மக்கள் ஏதிலிகள் ஆக்கப்பட்டு அவல வாழ்க்கைக்குள் தள்ளப் பட்டுள்ளனர்.”

### ஏன் இந்தப் பாராமுகம்

இலங்கை அரசில் பல தமிழ் அமைச்சர்கள், நாடாளுமன்றத்தில் இருந்தும் தமிழ மக்களின் இன்னல், அவல நிலை குறித்து தமது அனுதாபங்களையோ, ஆறுதல்களையோ தெரிவிக்கவில்லை. நாடாளுமன்றக் கூட்டத் தொடர்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழக மக்கள் படுகின்ற இன்னல்கள் குறித்து அரசதரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் பேசா மடந்தைகளாகவே இருக்கின்றனர்.

தமிழ் மக்கள் வேறு, ஈழத்தமிழர்கள் வேறு என்ற கருத்தியலை நீக்கி ஒரே இரத்தம், எம் உறவுகள் என்ற உரிமையுடன் கைகோர்த்து வெள்ளச் சேதத்தால் அவலப்படுகின்ற தமிழக மக்களுக்கு நாம் உதவ வேண்டும். தமிழக மக்கள் படுகின்ற கொடும்துயர பரிதாபக் காட்சிகளை தமிழகத் தொலைக் காட்சிகள் ஊடாகத் தினமும் பார்க்கின்ற நாம் தமிழக உறவுகளுக்கு உதவத் தயாராகுவோம்.

## நிலத்தடி நீர் தொடர்பில் குழப்ப வேண்டாம்

சுன்னாகம் பகுதியிலுள்ள நிலத்தடி நீரில் எண்ணெய்க் கழிவுகள் இல்லையென்ற அறிவிப்பு எமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது. ஆனால் இங்கு காணப்படும் நீரில் மலத்தொற்று, நைதரேற் கழிவுகள் என்பவை உள்ளதாகக் குறிப்பிட்டமை கவலை தருகின்றது. இதனால் அந்த நீரைப் பயன் படுத்துவதில் இங்குள்ள மக்கள் தயக்கமானதொரு நிலையில் காணப் படுகின்றனர்.

நீரில் ஏற்கனவே மலத்தொற்றும், நைத ரேற் கழிவும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் எண்ணெய்க் கழிவு கலந்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

இப்போது எண்ணெய்க் கழிவு இல்லையெ னத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலத் தொற்றும், நைதரேற் கழிவும் குடாநாடு முழுவதற்குமான பிரச்சினையாகும்.

ஆனால் இந்தப் பாதிப்புக்கள் சுன் னாகம் நிலத்தடி நீரில் மட்டுமே இருப்பதாகத் தெரிவிக்கும் தோற்றம் ஒன்று உருவாக்கப்பட் டுள்ளமைதான் சரியானதாகத் தெரியவில்லை.

மேலும், தற்போது இந்தப் பகுதி மக்கள் பவுஸர் மூலமாக வழங்கும் நீரையே தமது குடிதண்ணீராகப் பயன்படுத்தி வருகின்றனர். தற்போதைய நிபுணர் குழுவின் அறிக்கை காரணமாக இதுவும் தடைப் பட்டு விடலாம் என்ற அச்சம் மக்களிடையே எழுந்துள் ளது.

ஆகவே மேலும் மக்களைக் குழப்பாது நீரை அருந்தலாமா? அல்லது இல்லையா? என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

பா. ரஞ்சனி, சுன்னாகம்

## போதனா வைத்தியசாலையில் அடாவடி

யாழ். போதனா வைத்தியசாலையில் திடீரென மரணமடையும் நோயாளர்களின் இறந்த உடல்களை வைத்துப் பணம் சம்பாதிக்கும் நடவடிக்கை கடந்த பல வருடங்களாக நீடித்து வருகின்றது. இது தொடர்பாக பணிப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்தா லும் நடவடிக்கை எடுப்பாரில்லை.

விடுதிகளில் இறக்கும் நோயாளர்களின் உறவினர்களிடம் தரகர்களாகச் செயற்படும் வைத்தியசாலை சிற்றூழியர்கள் தாம் கூறும் அந்தியகால சேவை நிலையங்களிலேயே பிரேதப் பெட்டிகளை எடுக்க நிர்ப்பந்திப்பதுடன் அவ்வாறு நடந்து கொள்ள மறுப்பவர்களிடம் இறந்தவர்கள் உடலைக் கையளிப்பதில் [illegible] தாமதம் ஏற்படுத்துவதோடு, கவலையில் நிற்கும் உறவினர்களிடம் தகாத வார்த்தைகளினாலும் ஏசுகின்றனர். அவர்கள் சொற்படி நடந்தால் சகல மரியாதைகளும் நடைபெறுகின்றன. இந்த அடாவடித்தனங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வாசகர் திருமுகத்தி [illegible]

பாதிக்கப்பட்ட சமூகம்
(நா. டேவிற்)

## வயோதிபர்களை நேசியுங்கள்

கடந்த முதலாம் திகதி பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலை மனநோயாளர் கிளினிக்குக்கு காலை ஆறு மணிக்கே சென்று எனது கிளினிக் அட்டையை வரிசைக் கிரமப்படி அடுக்கிவிட்டு வைத்தியரின் வருகைக்காகக் காத்திருந்தேன்.

என்னைப்போல் இந்தக் கிளினிக் பிரிவில் சுமார் 60 - 70 பேர் வைத்தியரின் வருகைக்காகக் காத்திருந்தனர். வைத்தியரோ தனது கடமை தவறாது 8.30க்கே வருகை தந்து மன நோயாளர் ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, புதிதாக வரும் நோயாளர்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகள் ஆகியவற்றைப் பார்வையிட்ட பின்னர் வருகை தருவார். அன்றைய தினமும் வைத்தியர் கிளினிக் பிரிவில் வருகை தந்து நோயாளர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். என்னையும் ஆறாவது இடமாக அழைத்தார்கள். என்னையும் வைத்தியர் பரிசோதித்து விட்டு மருந்து எழுதித் தந்து மருந்தகம் அனுப்பினார். மருந் தகத்திலே ஒரே கியூ வரிசை. நானும் அந்த வரிசையில் ஒருவராக நின்று எப்போது எனக்கு இடம் கிடைக்கும் என ஆவலுடன் காத்திருந்தேன்.

அப்போது அந்த வரிசையில் சுமார் 75 வயது மதிக்கத்தக்க வயோதிப மாது தன்னால் நிற்க முடியவில்லை யாராவது விட்டுத்தாருங்கள் என்று கெஞ்சி மன்றாடியும் அது எவருடைய காதிலும் கேட்கவில்லை. அப்போதுதான் என் மனதுக்குள் பெரும் ஆத்திரம் தோன்றியது. நாம் வருடாந்தம் மூத்தோர் கௌரவிப்பு, முதியோர் தினம் கொண்டாடி வேடிக்கை காட்டிக்கொண்டு இருக்கின்றோம்.

இந்த ஒரு வயோதிப மாதுவுக்குச் சற்று இடம் விட்டுக் கொடுத்தால் என்ன? மனித நேயத்துடன் செயற்படுங்கள். தற்போது நாம் செய்யும் நல்ல செயல்கள்தான் பிற்காலத்தில் எம்மை நல்வழிப்படுத்தும் என்பதைத் தயவு செய்து மறந்து விடாதீர்கள்.

மு.அருமை, கறுக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை 17 லட்சம் பேர் மீட்பு இயல்புக்கு வருகிறது தமிழகம்

தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து இதுவரை 16.97 இலட்சம் மக்கள் மீட்கப்பட்டு உதவி மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. எனினும் மழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் இயல்புநிலை மெதுவாகத் திரும்பி வருகிறது.
அதேசமயம், தென் மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் பல பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்துவருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**நிவாரண மையங்கள்
மருத்துவ முகாம்கள்:**
சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் தமிழக அரசின் உதவி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதுவரை 16 இலட்சத்து 97 ஆயிரத்து 565 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.
இதற்காக, 6 ஆயிரத்து 81 உதவி மையங்கள் அமைக்கப்பட்டு, 1.13 கோடி உணவுப் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

**முகாம்களிலிருந்து
திரும்பும் மக்கள்:**
சென்னை புறநகர்ப் பகுதிகளிலும், கடலூரின் உள்புறப் பகுதிகளிலும் வெள்ள நீர் முழுவதும் வடியாத காரணத்தால் அங்குள்ள பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் அமைக்கப்பட்ட உதவி முகாம்களிலேயே மக்கள் தங்கியுள்ளனர்.
சென்னை நகரம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வெள்ளநீர் வடிந்து வருவதால் மக்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.
சென்னையில் வளசரவாக்கம், விருகம்பாக்கம், மேற்கு மாம்பலம், வேளச்சேரி, முடிச்சூர் என வெள்ளம் கடுமையாகச் சூழ்ந்த பகுதிகளில் நீர் மெதுவாகவே வடிந்துவருகிறது. இதனால், தேங்கிய நீரில் மக்கள் இன்னும் சிரமப்பட்டுச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**மருத்துவ முகாம்கள் மூலம்
24 இலட்சம் பேர் பயன்:**
மழைக்காலத்தில் ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்காக இதுவரை 25 ஆயிரத்து 551 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு நோய் தடுப்புக்கான மருந்து, மாத்திரைகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்கள் மூலம் 24 இலட்சத்து 68 ஆயிரத்து 441 பேர் பயனடைந்துள்ளனர். எனினும் மருத்துவர்களுக்கும் மருத்துவப் பணியாளர்களுக்கும்கூட நோய்கள் தொற்றி வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வாந்திபேதி, காய்ச்சல் போன்றவற்றின் தாக்கம் அதிகம் இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

**வெள்ள நிவாரணத்தில் களமிறங்கிய
ஜெயின், சீக்கிய, கிறிஸ்தவ மக்கள்**
பெருமழையும், பேரிடரை ஏற்படுத்திய வெள்ளமும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மக்களுக்கு துயரை ஏற்படுத்தியிருக்கலாம், ஆனால், மனிதர்களுக்கு இடையே இருந்த மதம் என்ற சுவரை சுக்குநூறாக உடைத்து தூள்தூளாக்கியிருக்கின்றன.
வெறித்தனமாய் வேட்டையாடிச் சென்ற வெள்ளத்தில் உடைமைகளை இழந்து சொந்த ஊரிலேயே அகதிகளாக சாலை ஓரங்களில் தவிக்கும் மக்களுக்கும், திக்கற்றுத் திரியும் மக்களுக்கும் ஜெயின் சமூகத்தினரும், மார்வாடிகளும், சீக்கியர்களும், கிறிஸ்தவர்களும் எண்ணற்ற நிவாரண உதவிகளைச் செய்து வருகின்றனர்.
வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவாலயங்களில் தங்க இடமளித்துள்ள கிறிஸ்தவர்கள் இந்த ஆண்டு கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் இல்லை என்று அறிவித்துவிட்டனர். சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 5 கோடி மதிப்புள்ள வெள்ள நிவாரணப் பொருள்களை ஜெயின் சமூகத்தினர் வழங்கியுள்ளனர்.
அத்தோடு, 75 இளைஞர்களும், அவர்களின் குடும்பத்தாரும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை என 16 மணி நேரமும் நிவாரணப் பொருள்களை வழங்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர். (உ)

# தமிழகத்தின் வெள்ளப் தேசியப் பேரிடராக அறி


## இந்தியப் பிரதமருக்கு ஜெயலலித

சென்னை, டிசெ. 10
தமிழக வெள்ளப் பாதிப்பை தேசியப் பேரிடராக அறிவிக்கக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.
அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது: தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகளை நீங்கள் நேரடியாக பார்வையிட்டதால் சேதத்தின் தாக்கத்தை அறிந்துள்ளீர்கள். எனவே, தமிழக வெள்ளப் பாதிப்பை தேசிய பேரிடராக உடனடியாக அறிவிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.
இந்த வெள்ளத்தில் மக்கள் தங்கள் உடைமைகளை இழந்துநிற்கின்றனர். கட்டுமான சேதங்கள் பெரியளவில் ஏற்பட்டுள்ளன. ஏற்கெனவே தமிழக அரசு சார்பில் கடந்த நவம்பர் 23இல் வெள்ளச் சேத அறிக்கை தாக்கல் செய்யப் பட்டது. தற்போது, மீண்டும் மற் றொரு அறிக்கையை தயா ரித்து வருகிறோம். கடைசியாக ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளை ஒருங்கிணைத்த புதிய சேத அறிக்கையை விரைவில்

> “கனமழையால் உடைமைகளை இழந்த மக்கள் வாக னங்கள், வீட்டு உபயோகப் பொருள்களை மீண்டும் வாங்குவதற்கு ஏது வாக ரூ. 5 லட்சம் வரை கடனு தவி அளிக்க வங்கிகளை அறிவுறுத்த வேண்டும்.”



அளிக்கவேண்டும் எனக் ...
உள்ள மக்கள் தங்கள் வாழ்...
நிதி அமைச்சகம் தேவை ...
வேண்டும்.
இவ்வாறு அக்கடிதத்தில் மு...



## நுளம்புக்கு மரபணு மாற்றம்: மலேரியாவைக் கட்டுப்ப

மலேரியா நோய் பரவச் செய்யும் நுளம்பில் மரபணு மாற்றம் செய்வதன் மூலம் அந்த நோய் பரவலைத் தடுக்க முடியும் என்று பிரிட்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.
இது குறித்த ஆய்வுக் கட்டுரை, 'நேச்சர் பயோடெக்னாலஜி ஆய்விதழில் வெளியாகியுள்ளது.
மலேரியா நோய்க் கிருமியை அனோபிலிஸ் கேம்பியே என்னும் நுளம்பு இனம் பரவச் செய்கிறது.
இந்த நுளம்பில் மரபணு மாற்றம் செய்வதால் முட்டைகள் உருவாவதைக் கட்டுப்படுத்த இயலும் என்று அந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
கட்டுப்பாடு தொடர்பான மரபணு மாற்றமும் விரைவாக அடுத்தடுத்த தலைமுறை நுளம்புகளுக்கு எடுத்துச் செல்லும் விதமான தொழில்நுட்பமும் இந்த ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்டது.
இதன் மூலம் காலப்போக்கில் மலேரியா நோய் கிருமியை பரப்பும் நுளம்பு இனப் பரவல் குறைந்துவிடும் அல்லது முற்றிலும் அழிக்கப்பட்டுவிடும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.
சாதாரணமாக, மரபணு மாற்றம் என்பது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குச் செல்லும்போது, அதில் 50 சதவீத அளவு மட்டுமே மாற்றம் ஏற்படுகிறது. ஆனால், இம்பீரியல் கல்லூரி ஆராய்ச்சியாளர்களின் புதிய மரபணு மாற்ற முறையின் கீழ், ஒரு தலைமுறையில் ஏற்படுத்தப்படும் மாற்றமானது 90 சதவீத அளவு அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லப்படுகிறது.
இந்தப் புதிய முறையின் மூலம், ம...
பரவலைக் கணிசமாகக் குறைக்க...
ஆராய்ச்சிக் குழுவின் இணை...
ஆண்ட்ரியா கிரிசான்டி குறிப்பிட்டு...
உலகம் முழுவதும் ஆண்டுதோறு...
மலேரியா நோய் பாதிப்புக்கு ஆளா...
களில் சுமார் நான்கரை லட்சம் பே...
னோர் உயிரிழக்கின்றனர். அதிலும் ...
உயிரிழப்பு ஆபிரிக்க நாடுகளி...
கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப் பாதிப்பை அறிவியுங்கள்

## ...லிதா கடிதம்



அரசு தாக்கல் செய்யும்.
சமீபத்திய மழை வெள்ளத்தால் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கனமழையால் உடைமைகளை இழந்த மக்கள் வாகனங்கள், வீட்டு உபயோகப் பொருள்களை மீண்டும் வாங்குவதற்கு ஏதுவாக ரூ. 5 லட்சம் வரை கடனுதவி அளிக்க வங்கிகளை அறிவுறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.
அதேபோல், வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் மார்ச் மாதம் (2016, மார்ச் 31) வரை வீட்டு உபயோகப் பொருள்கள் மீதான சுங்க வரிக்கு விலக்கு ...டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் ...கள் வாழ்க்கையை மறு கட்டமைப்பு செய்ய வேண்டியுள்ளதால் ... தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட ...தத்தில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார். (உ)



கத்தோலிக்க புனித ஆண்டின் ஆரம்பத்தைக் குறிக்கும் புனிதக் கதவை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வத்திக்கானிலுள்ள பசிலிக்கா தேவாலயத்தில் நடைபெற்றது. இதில் பாப்பரசர் பிரான்ஸிஸ் ஓய்வுபெற்ற பாப்பரசர் 16 ஆவது பெனடிக்றை கட்டித் தழுவி வரவேற்றார். (தி)

## ...ப்படுத்த

...ன் மூலம், மலேரியா நோய் ...க் குறைக்க முடியும் என்று ...ன் இணைத் தலைவர் ... குறிப்பிட்டுள்ளார்.
...ண்டுதோறும் 20 கோடி பேர் ...க்கு ஆளாகின்றனர். இவர் ... லட்சம் பேருக்கும் அதிகமா...ர். அதிலும் சுமார் 90 சதவீத ... நாடுகளில்தான் ஏற்படு... (உ)

# டொனால்டின் பேச்சுக்கு கடுமையான எதிர்ப்பு

அமெரிக்காவில் முஸ்லிம் குடியேற்றத்துக்கு முழுமையாகத் தடை விதிக்க வேண்டும் என்று குடியரசு கட்சியின் மூத்த தலைவர் டொனால்ட் டிரம்ப் பேசியதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.
குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளராகக்கூடியவர் என்று கணிக்கப்படும் டொனல்ட் டிரம்ப் இத்தகைய வெறுப்புப் பேச்சுக்கு மட்டுமல்ல விவேகமற்ற முறையில், அநாகரிகமாகவும் பேசக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு என்று அமெரிக்க அரசியல், ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழையும் மெக்சிக்கோ நாட்டுக்காரர்கள் அனைவரும் பாலியல் பலாத்காரம் செய்பவர்கள் என்றும், ஜான் மெக்கெய்ன் வியட்நாமில் சிறை பிடிக்கப் பட்டதால் அவர் ஒன்றும் போர் நாயகன் அல்ல என்றும் கூறியதோடு மாற்றுத் திறனாளிப் பத்திரிகையாளர் ஒருவரைக் கேலி பேசியதும் ஏற்கனவே அவரது வரலாற்றில் பதிந்துள்ள கறைகள் என்று கூறுகிறார்கள்.
குடியரசுக் கட்சியின் அதிபர் விவாதத்தின் போது தொலைக்காட்சி பெண் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கடுமையான கேள்வி ஒன்றை கேட்டார், அவர் இத்தகைய கேள்வியைக் கேட்டதற்கு அவரது மாதவிடாய் காலம்தான் காரணம் என்று கூறிச் சர்ச்சைகளில் சிக்கியவரே இந்த டொனல்ட் டிரம்ப்.
இந்த நிலையில் அமெரிக்காவுக்குள் முஸ்லிம்கள் நுழைவதைத் தடை செய்ய வேண்டும் என்று பேசிய அவர், அனைவரும் அரசியல் சீர்திருத்தப் பார்வையைக் கொண்டுள்ளனர், இதுதான் நம் நாட்டின் பிரச்சினை. தடம் கண்டு, புலனாய்வு செய்ய வேண்டிய மக்கள் தொகுதியினர் உள்ளனர். அது முஸ்லிம்களாக இருந்தால் முஸ்லிம்கள்தான் என்ன செய்வது? என்று பேசியுள்ளார்.
தீவிரவாத இஸ்லாமியப் போக்குகளுக்கு எதிராக குடியரசுக் கட்சி எப்போதும் கடுமையான நிலைப்பாடுகளை எடுத்து வந்திருந்த போதிலும், அயல்நாடுகளில் நடைபெறும் போர்களை இக்கட்சியினர் ஆதரித்து வந்த போதும் அதன் தலைவர்கள் எவரும் முஸ்லிம்களைப் பற்றி இந்த அளவுக்கு தீவிர கருத்துகளை வெளிப் படுத்தியதில்லை என்றே அமெரிக்க ஊடக வட்டங்கள் தெரிவிக்கின்றன.
இதனால் டிரம்ப் கருத்துக்கு அவரது கட்சியிலிருந்தே எதிர்ப்புக் குரல்கள் கிளம்பியுள்ளன. நியூஜெர்சி ஆளுநர் கிறிஸ் கிறிஸ்டி, டிரம்பின் கூற்றை முட்டாள்தனமானது என்று வர்ணித்துள்ளார். அமெரிக்காவில் இப்போதெல்லாம் அயல்நாட்டு குடியேறிகள் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பும் அதிருப்தியும் தோன்றி வருகின்றன. வலதுசாரி வாக்குவங்கியைத் தனக்குச் சாதகமாக உறுதிப்படுத்தவே அவர் இவ்வாறு பேசிவருகிறார் என்றும் கூறப்படுகிறது. (உ)

# அமெரிக்காவிலும் வெள்ளம்!

புளோரிடா , டிசெ . 10
அமெரிக்காவின் புளொரிடா மாகாணத்தில் கன மழையை அடுத்து ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக அங்கு உள்ள மிருகக் காட்சிசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் வெள்ளத்தில் மிருகங்கள் நீந்தித் தப்பிக்கக்கூடும் என்பதால் மிருகக்காட்சிச்சாலை நிர்வாகத்தினர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளை மிகவும் ஈர்க்கும் பகுதியான தெற்கு புளொரிடா மியாமிவின் பகுதியில் இந்த மிருகக்காட்சிசாலை அமைந்துள்ளது.
24 மணிநேரத்தினுள் 28 செனிரி மீற்றருக்கு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. நீர் மட்ட உயர்வு மிருகங்கள் தப்பித்துக் கொள்ள சிறந்த சந்தர்ப்பமாக அமையும் . புலி, சிங்கம், கரடி மற்றும் விலங்குகள் நீந்தி நகருக்குள் செல்லக்கூடியன என்பதால் முன்கூட்டியே ஆபத்தைத் தவிர்க்கும் நோக்கோடு கால வரையறையற்ற விதத்தில் மிருகக்காட்சிச் சாலையை மூடிவிட்டனர்.
வெள்ளப் பாதிப்பில் சிக்கியுள்ள மிருகங்களைப் பாதுகாப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மிருகக்காட்சிச்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (உ-ரி4)


# குற்றஞ்சாட்டுகிறார் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர்

வோஷிங்டன் , டிசெ .10
ரஷ்ய போர் வானூர்திகள் சிரிய இராணுவ அரண்களைத் தாக்கின என அமெரிக்கா அறிவித்ததை மறுத்துள்ள சிரியா, அமெரிக்கக் கூட்டுப் படை வானூர்திகளே தாக்கின என்று குற்றஞ்சாட்டியுள்ளது. இந்தத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததுடன், 14 பேர் காயமடைந்தனர்.
இது தொடர்பில் வெளியிடப்பட்ட சிரியாவின் அறிக்கையில் அமெரிக்க கூட்டுப் படைகளின் தாக்குதல்கள் குறித்து கடுமையாகச் சாடப் பட்டுள்ளது. இரவு முழுவதும் சிரியாவின் டேயர்-அல் -சூர் மாகாணத்தில் தாக்குதல் இடம்பெற்றதாகவும் கூறியுள்ளது.
சிரியாவின் எண்ணெய்க் கிணறுகளை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என சிரிய இராணுவப் பேச்சாளர் ஸ்டீவ் பக்தாத்தில் தெரிவித்தார்.
சிரியாவின் வெளிவிவகார அமைச்சர் இந்தத் தாக்குதலை கொடிய ஆக்கிரமிப்பு என விமர்சித்துள்ளார்.
தாக்குதல் தொடர்பான முறைப்பாடு ஐ.நாவின் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறனதொரு தாக்குதல் மீண்டும் நிகழாமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சிரியா அதில் வலியுறுத்தியுள்ளது.
இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மூன்று கவச வாகனங்கள், நான்கு இராணுவ வாகனங்கள், இரண்டு கனரக இயந்திரத் துப்பாக்கிகள், ஆயுதங்கள் மற்றும் ஒரு வெடிமருந்துக் கிடங்கு என்பன சேதமடைந்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
குறிப்பிட்ட தாக்குதலில் 8 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது தவிர பல பொது மக்கள் வேறு தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல், துருக்கி என்பனவும் பல்வேறு தரப்பட்ட காரணங்களுக்காக சிரியா மீது குண்டு மழை பொழிந்து வரு கின்றன. தற்போது சிரியா பல்வேறு நாடுகளின் தாக்குதலுக்கு முகம் கொடுத்து வருகின்றது.
கடந்த வார இறுதியில் ஈராக்கின் ஒரு நகரமான ராக்காவில் மட்டும் 15 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். (உ-ரி4)

# முஸ்லிம்கள் குடியேற்றத்தை முற்றாகத் தடுக்க வேண்டும்

## அமெரிக்க குடியரசுக் கட்சியின் மூத்த தலைவர் அறைகூவல்

பிரான்ஸில் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதல்களை அடுத்து மேற்கு நாடுகளில் முஸ்லிம்களுக்கு எதிரான போக்கு அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது.
இந்த நிலையில் அமெரிக்காவில் முஸ்லிம் குடியேற்றத்துக்கு முழுமையாகத் தடை விதிக்கவேண்டும் என்று குடியரசுக் கட்சியின் மூத்த தலைவர் டோனால்டு டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.
அடுத்த ஆண்டு நவம்பரில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி ஆளும் ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சியில் அதிபர் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க உட்கட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக இரு கட்சிகளிலும் மூத்த தலைவர்கள் கட்சித் தொண்டர்கள் மத்தியில் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.
குடியரசுக் கட்சியின் மூத்த தலைவர் டோனால்டு டிரம்ப் அதிபர் வேட்பாளர் [illegible] முன்னணியில் உள்ளார். கலிபோர்னியா மாகாணம், சான் பெர்[illegible] சுட்டதில் 14 பேர் உயிரிழந்த சம்பவத்தை தனது பரப்புரையில் டோனால்டு குறிப்பிட்டு வருகிறார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:
அமெரிக்காவில் முஸ்லிம் குடியேற்றத்துக்கு முழுமையாகத் தடை விதிக்க வேண்டும். எமது நாட்டில் நடைபெறும் தீவிரவாதச்செயல்களைத்தடுத்துநிறுத்த இதைத் தவிர வேறுவழியில்லை.
அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்கள், மசூதிகளின் செயல்பாடுகளை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். தீவிரவாதிகள் எங்கிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும். இல்லையெனில் தீவிரவாதப் பிரச்சினை ஓயாது.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.
டோனால்டின் கருத்துக்கு குடியரசுக் கட்சியின் ஏனைய வேட் பாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். "மதவாதத்தைத் தூண்டும் வகையில் டோனால்டு பேசியுள்ளார். அவரது [illegible]துகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் சகோதரர் ஜெப் புஷ் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

**இன்று மனித உரிமைகள்தினம்**

அச்சுவேலியூர்
கி.சஞ்ஜீவன்

உலகில் மனிதர்களாகப் பிறப்பெடுத்த அனை வருக்கும் உரிமைகள் உள்ளன. வாழும் உரிமை, விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை, விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமை, கற்கும் உரிமை எனப் பல்வேறுபட்ட உரிமைகள் உள்ளன. ஒவ்வொருவரும் இந்தப் பாரினில் சமமான வர்களாகவே கருதப்படுகின்றனர். சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி நாட்டில் ஒவ்வொரு வரும் சகலரையும் மதித்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும். ஆம்! இன்று மனித உரிமைகள் தினம் ஆகும். ஒவ்வொருவரும் ஒரு தாய் மக்களாவோம். இதனையே ஆனந்த சமரக்கோன் 'ஒரு தாய் மக்கள் நாமாவோம், ஒன்றே நாம் வாழுமில்லம், நன்றே உடலில் ஓடும் ஒன்றேநம் குருதிநிறம்' எனத் தமது கவிதையில் குறிப்பிட்டுள்ளார். வளர்ந்துவரும் தொழில்நுட்ப உலகில் ஒருவரையொருவர் மதிப்பது குறைவாகவே உள்ளது. மானிட உரிமை எனப்படுவது மானிட + உரிமை எனப்பிரித்து மானிட என்பது மனிதர்கள், உரிமை என்பது, ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் தமக்கென விரும்பியவற்றை பின்பற்றுதல் எனக் கொள்ளப் படும். எனவே இத னைச் சுருக்கமாக மனித அல்லது மானிட உரிமைகள் என்கிறோம்.

**மனித உரிமைகள் ஆணைக்குழு**

ஒவ்வொருவருக்கென்றும் உரிமைகள் மீறப்படுகின்ற பட்சத்தில் பல்வேறுபட்ட வன்கொடுமைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் எனப் பல்வேறுபட்ட கொடுமைகள் எம்மை நெருங்குகின்றன. ஒவ்வொருவரினதும் உரிமைகள் மீறப்படும் போது அதனைத் தடுக்க மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படுகின்றது. எனவே எமது பிரச்சினைகளை அங்கு சென்று முறையிட முடியும்.

உலகில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கென்றும் தனிப்பட்ட உரிமைகள் உள்ளன. முன்னர் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஒன்றரை நூற்றாண்டுகள் மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட உரிமைகள் அனைத்தும் மீறப்பட்டு எம் குடிமக்கள் பல்வேறு பட்ட இன்னல்களை அனுபவித்தனர். பின் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டாலும் அது பூரணமாக 1972 ஆம் ஆண்டு வழங்கப்பட்டு, இலங்கை குடியரசு நாடாகவும் மாற்றப்பட்டது. இதற்குப் பின் முப்பது ஆண்டு கால உள்நாட்டு போர் மூலமாகவும் மனித உரிமைகள் மீறப்பட்டன. மனிதர்களுக்குள் ஏற்படும் புரிந்துணர்வு இன்மையே இதற்கு காரணமாகும்.

இதனால்தான், மனிதன் தன் கையில் போர் எனும் கொடிய அரக்கனை சுவீகரித்து அதன்மூலம் பல்வேறுபட்ட கலாசார சீரழிவுகள் உரிமைகள் போன்றவற்றை சீரழிக்கின்றான்.

**அனைத்துக்கும் அடிப்படை மனித உரிமை**

தற்கால உலகில் அனைத்துக்கும் அடிப்படையாக இருப்பது மனித உரிமைகள் தான். தனிப்பட்ட ஒவ்வொருவருக்காக வும் ஒதுக்கப்பட்ட உரிமைகள் மீறப்படும்போது அதனைத் தடுத்து மனித உரிமைகளை நாம் சர்வதேச ரீதியில் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பது அவசியமாகும். நாடு என்பது பெரிய பரந்த பிரதேசம். அதில் மக்கள் என்பவர்கள் நாட்டின் தலைவிதியையும் பல்வேறுபட்ட தீர்மானங்களையும் எடுக்கும் பெரிய ஒரு சக்தியாகின்றனர். இந்த வருடத்தில் எத்தனையோ விதமாக நாளுக்கு நாள் வீட்டிலோ, வீதியிலோ எங்கும் பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள் நிமிடத்துக்கு நிமிடம் நடந்து கொண்டே இருக்கின்றன. எப்போது எங்கு என்ன நடக்கும் என்பது பற்றி தற்போது எம் நாட்டில் எவருக்கும் தெரியாது. அந்தக் குறிப்பிட்ட சம்பவம் நடந்த பின்னர் தான் எல்லோருக்கும் தகவல் கிடைக்கும். அவ்வாறானதொருநிலைமை எமது நாட் டினுள் மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலும் நிலவுகின்றது. அதுவோர் சர்வசாதாரண விடயமாகத்தான் இருக்கின்றது. எனவே அவ்வாறு இன்றி எந்த நேரத்திலும் மக்கள் சுதந்திரமாக நடமாடத்தக்க சூழல் உருவாக்கப்படவேண்டும்.

> “ஒவ்வொருவரினதும் உரிமைகள் மீறப்படும் போது அதனைத் தடுக்க மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படுகின்றது. எனவே எமது பிரச்சினைகளை அங்கு சென்று முறையிட முடியும்.”

**வேறுபாடு வேண்டாம்**


பிறக்கும் குழந்தையிலிருந்து வயதானவர்கள் வரை அனைத்து ஜீவன்களுக்கும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இன்றி அனை வரும் உடன் பிறந்தவர்களாக வாழவேண் டும். அப்போதுதான் எமது உரிமைகள் மீறப் படாது மதிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். இல்லாவிடில் பல்வேறுபட்ட பிரச்சினைகள், துன்புறுத்தல்கள் உருவா கும். ஆகவே பூமியில் படைக் கப்பட்ட நாம் அனைவரும் ஒரு தாய்மக்களாகவும் சகோதரத் துவமுள்ள மக்களாகவும் வாழ .உறுதி பூணுவோம்.

# பாரிஸ் உச்சி மாநாடு சாதிக்கப்போவது என்ன?

தமிழில்: வெ. சந்திரமோகன்

பாரிஸில் நடந்துவரும் பருவ நிலை மாறுதல் தொடர்பான உச்சி மாநாடு, வரும் வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெறவிருக்கிறது. இந்த நிலையில், பருவநிலை மாறுதல் தொடர்பான முழக்கங்களையும் தாண்டி சில உறுதிமொழிகளை உலகத் தலைவர்கள் எடுக்க வேண்டியிருக்கிறது. எனினும், எதிர்காலத்தில் உலக அளவிலான வெப்ப நிலை 3.6 டிகிரி பாரன் ஹீட் உயரவிருக்கும் அபாயத்தைக் கட்டுப்படுத்தும் தேவை தொடர்பாக, தீர்க்கமான முடிவுகள் எதுவும் இன்னமும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், இந்தப் பிரச்சினை தொடர்பான தீர்வை நோக்கி தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளும் வளர்ந்து வரும் நாடுகளும் பயணப்பட வேண்டியிருக்கிறது.

> “புவி வெப்பமயமாதல் பிரச்சினை பூதாகரமாகியிருக்கும் நிலையில், அது தொடர்பாக எளிய மற்றும் துரித தீர்வுகள் எடுக்கப்பட வேண்டும் எனும் எதிர்பார்ப்பும் அதிகரித்திருக்கிறது.”



புவி வெப்பமயமாதல் பிரச்சினை பூதாகரமாகியிருக்கும் நிலையில், அது தொடர்பாக எளிய மற்றும் துரிதத் தீர்வுகள் எடுக்கப்பட வேண்டும் எனும் எதிர்பார்ப்பும் அதிகரித்திருக்கிறது. பசுங்குடில்வாயுக்கள் வெளியீட்டைக் [illegible] பாக, வளர்ச்சியன[illegible] இன்னமும் போதுமான அளவில் பொறுப்பு எடுத்துக்கொள்ளவில்லை. மேலும், வளர்ந்துவரும் நாடுகள் சுற்றுச்சூழல் சீர்கேடு தொடர்பாக பொறுப்புடன் நடந்து கொள்வதில் மேலும் அக்கறை காட்ட வேண்டியிருக்கிறது.

எனினும், 170-க்கும் அதிகமான நாடுகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் தன்னார்வத் திட்டங்கள் அர்த்தமுள்ள நடவடிக்கையாகப் பார்க்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் சீர்கேடு விடயத்தில் பெரும் [illegible] அமெரிக்கா, சீனா [illegible] நாடுகள் அதைக் கட்டுப்படுத்துவதில், சர்வதேச அளவில் பிற நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டிய கட்டாயத்தை இம்மாநாட்டில்நிகழ்த்தப்பட்ட கருத்து வெளிப்பாடுகள் உருவாக்கியிருக்கின்றன.

இந்தியா உள்ளிட்ட வேகமாக வளர்ந்து வரும் நாடுகள், மிக மோசமான தங்கள் தொழில்துறை செயல்பாடுகளால் மனித உயிர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதை ஒப்புக்கொள்ளுமாறு இந்தப் பேச்சு வார்த்தைகள் நிர்ப்பந்தித்திருக்கின்றன. வளர்ச்சியடைந்து வரும் சிறிய நாடுகள், தங்கள் வளர்ச்சிக் கொள்கையில் இந்த விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பிரச்சினையில் முக்கிய முடிவுகளை எடுப்பதில் இன்னமும் தடை கள் இருக்கின்றன. எனினும், பருவ நிலைக் கொள்கை, மேம்பாடு அடையும் தொழில்நுட்பம் மற்றும் பொது, தனியார் பங்களிப்பு போன்றவற்றின் நிலைப்பாட்டில் மாற்றம் வரும் என்பதான நம்பிக்கைகளை பாரிஸ் மாநாடு தந்திருக்கிறது.

பாரிஸ் மாநாட்டுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தின் காரணமாக, பருவநிலை மாறுதல் தொடர்பான விவாதம்பெரியஅளவில்நடந்துவருகிறது. பல்வேறுகொள்கைகளின் அடிப்படையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக உள்நாட்டுத் தலைவர்கள் மற்றும்தொண்டுநிறுவனங்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் நிலை உருவாகியிருக்கிறது.

ஆங்கில மூலம்: தம்பா பே டைம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி: தி இந்து தமிழ்



# தமிழகத்தின் தலைநகரில் மழையால் மக்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள்

எதிர்பாராதது அல்ல. அப்படிச் சொன்னால், அது பெரும் பாவம்! சென்னை இந்தப் பருவத்தில் எதிர்கொள்ளும் கடும் மழையை ஒக்.16 ஆம் திகதி அன்று நண்பர் கணேஷ் சொன்னார். அவர் கையிலிருந்த வானிலை அறிக்கை சொன்னது. சரியாக ஒரு மாதம் கழித்து, நவம்பர் 14 இல் சென்னை கடும் மழையை எதிர்கொண்டது. நகரம் ஸ்தம்பித்தது. அடுத்த கடும் மழை நவ.22 ஆம் திகதி என்றது முன்னெச்சரிக்கை. நவ.30 இல் எதிர்கொள்ளவிருக்கும் மழை இவற்றின் உச்சமாக இருக்கும் என்பதையும் அப்போதே கணேஷ் சொன்னார்.

**வானிலை மையம் எச்சரிக்கை**

கணேஷ் வானிலை ஆய்வாளர் அல்ல. வானிலை ஆய்வு மையம் தரும் அறிக்கைகளைச் செய்திகளாகத் தரும் செய்தியாளர். வானிலை ஆய்வு மையங்கள் இப்படி முன்கூட்டி அறிக்கை தருவதன் முதன்மை நோக்கம், மக்களை எச்சரிப்பது மட்டும் அல்ல. அரசுகளை எச்சரிப்பதும் ஆகும். அரசுகளை முன்கூட்டித் திட்டமிடவும், மக்களைக் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுக்கப் போதிய அவகாசத்தை உருவாக்கிக் கொடுப்பதும் ஆகும். கணேஷ் என்னிடம் பகிர்ந்து கொண்ட அறிக்கைகள் முதல்வர் அலுவலகத்துக்கும், தலைமைச் செயலாளர் அலுவலகத்துக்கும் உடனுக்குடன் செல்லக் கூடியவை என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை.

சென்னை இப்போது எதிர்கொண்டிருக்கும் மழைகடந்த 100 வருடங்களில் காணாதது என்று பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். 100 வருடங்கள் முன் இருந்த சூழல் எங்கே? இன்றைக்கு இருக்கும் நவீன வசதிகள் எங்கே? 1000 வருடங்கள் காணாத மழைகூடப் பெய்யலாம். மழையைத் தடுக்க முடியாது. ஆனால், மழையால், வெள்ளத்தால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க முடியும். உயிரிழப்புக்களைக் குறைக்க முடியும். வெள்ளத்தின் தொடர்ச்சியாக வீடிழந்து, உடைமைகளை இழந்து, வீதிகளில் மக்கள் ஏதிலியாகத் திரிவதைத் தடுக்க முடியும். கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், மண்டபங்கள், ரயில்கள், லொறிகளில் ஒருவேளைச் சோற்றுக்கும் ஒரு குடம் தண்ணீருக்கும் அலைபாய்வதைத் தடுக்க முடியும். தண்ணீர் இல்லாமல், இயற்கை உபாதைகளை அடக்கிக் கொண்டு வயிற்றைப் பிடித்துக்கொண்டு பெண்கள் உட்கார்ந்திருக்கும் வலியைத் தடுக்க முடியும். முதியவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள், சிசுக்கள் என்று வகை தொகை இல்லாமல் நூற்றுக்கணக்கில் அடைபட்டிருக்கும் முகாம்களில் ஒரு மெழுகுவர்த்தி வெளிச்சம்கூட இல்லாமல் இரவுகளைக் கழிக்கும் அவலத்தைத் தடுக்க முடியுமா?

**சென்னையின் மையப்பகுதியில் அவலப்படும் மக்கள்**

சென்னையில், தமிழகத்தின் தலைநகரில், அதன் மையப் பகுதியான சைதாப்பேட்டையில் மக்கள் அனுபவித்துவரும் சித்திர வதைகளையும் அவர்கள் வடிக்கும் இரத்தக் கண்ணீரையும் கண்ணெதிரே பார்த்து எழுதுகிறேன், முகம் தெரியாத அரச ஊழியர்கள் உயிரைக் கொடுத்து உழைக்கிறார்கள். ஆனால், அரசியல்வாதிகளை முகமாகக் கொண்ட அரசு என்று ஒன்று இங்கே இல்லவே இல்லை!

நள்ளிரவில் அவர்கள் வீட்டின் கதவு தட்டப்பட்டபோதே, அவர்களுடைய வீதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து வந்திருக்கிறது. பொலிஸ்காரர்கள் ஓடி வந்திருக்கின்றனர். செம்பரம்பாக்கம் ஏரியில தண்ணீரை நிறையத் திறந்துவிட்டிருக்கிறாங்களாம். கரை உடைச்சிக்கிட்டு ஊருக்குள்ள தண்ணீ வந்துவிடும் என்று சொல்றாங்க. சீக்கிரம் கிளம்புங்க. தண்ணீர் வருவதற்கு முன்னரே மின்சாரம் போய்விட்டது. அந்த இருட்டில் வீடு வீடாக பொலிஸ்காரர்கள் ஏறி இறங்கும் முன் பல வீடுகளில் தண்ணீர் புகுந்துவிட்டது.

மக்கள் மழையில், இருட்டில் இடம் தேடி அலைந்தார்கள். எங்கே செல்வது? பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஓடுகிறார்கள். மாநகராட்சிப் பள்ளிக்கூடம் சென்றால், அங்கும் தண்ணீர். அடுத்து எங்கே செல்வது? அந்த நள்ளிரவில் எவரை அழைப்பது? அழைத்தும் பிரயோசனம் இல்லை. செல்பேசிச் சேவைகள் பல அப்போதே செயலிழக்க ஆரம்பித்து விட்டன. ஆளுக்கொரு பக்கமாய் ஓடுகிறார்கள். விடிந்தபோது வழிபாட்டுத்தலங்கள், மண்டபங்களின் நிர்வாகிகள் தாமாக ஓடிவந்து கட்டடங்களில் மக்கள் தங்க திறந்து விட்டார்கள். ஆனால், எவ்வளவு பேரை அவை கொள்ளும்? ஓடுகிறார்கள். பஸ் நிலையத்திலும், ரயில் நிலையத்திலும், போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ரயில்களில், அப்படியும் போதவில்லை. பாதிப் பேர் உள்ளே; மீதிப் பேர் வெளியே கொட்டும் மழையில்.

திடீரென சாலை ஆறாக மாறுகிறது. அடித்துக்கொண்டு பாய்கிறது தண்ணீர். வெள்ளம் ஒரு ஆறாகப் பாய்கிறது. ஆம். ஆறாகவே பாய்கிறது. வீடுகள், வீட்டுச் சாமான்கள், வாகனங்களினூடே அடித்துச் செல்லப்படுகின்றன உடல்கள். கால்நடைகள், மனிதர்கள் என்று இனம் பிரிக்க முடியாத வேகத்தில் செல்கின்றன. முழு நாளும் ஒரு பருக்கை அரசுத் தரப்பிலிருந்து வந்து சேரவில்லை. முன்னதாகவே இருட்டிவிட்டது. கும்மிருட்டு. சாலைகளில் பாயும் வெள்ளம். இடையிடையே அழுகுரல்கள், பெரு ஓலங்கள்.

மறுநாள் விடிகிறது. கொஞ்சம் மழை நின்றிருந்தது. மக்கள் கூட்டம் பாய்கிறது, கடைகளைத் தேடி. அரை லீற்றர் பால் விலை ரூ. 100. ஒரு கான் தண்ணீரின் விலை ரூ. 250. வசதியுள்ளவர்கள் கடைகளில் இருந்ததை வாங்கிக்கொண்டு திரும்ப, வசதியற்றவர்கள் வீதிவீதியாக அலைந்தார்கள். பழங்கள், ரொட்டி பாக்கெட்டுகள் என்று வாங்க முடிந்ததை வாங்கிக்கொண்டு முகாம்களுக்கு ஓடி வந்தார்கள். மீண்டும் மழை. இதற்கிடையே வெள்ளம் கொஞ்சம் வடிந்த பகுதிகளில் வசிப்பவர்கள் சிலர் ஆங்காங்கே அவ[illegible]கிக் கொண்டு வந்து கொடுத்துப் போனார்கள். மூன்று வேளைக்கும் சேர்த்து ஒரு சாப்பாடு. மீண்டும் மழை. இருட்டு.

**எவருக்கும் உதவமுடியாத நிலை**

அடுத்த நாள் விடிகிறது. குடிக்கத் தண்ணீர் இல்லை. புழக்கத்துக்குத் தண்ணீர் இல்லை.

வீட்டு வீதிகளில், கீழ்ப்பாலங்களில் வீட்டுக் கழிவுகள், சாக்கடையோடு கலந்து அடித்து வந்து தேங்கிக் கிடக்கும் தண்ணீரை வாளியில் ஏந்திக்கொண்டு போகிறது கூட்டம். இதனிடையே படகுகளோடு வந்த கடலோடி இளைஞர்கள் கொஞ்சப் பேரை மீட்டார்கள். மீட்கும்போது மிதந்து வந்த சடலங்களை பலகைகளில் போட்டுக்கொண்டு போனார்கள். இடையிடையே ஹெலிகொப்டர்கள் மேலே பறக்கின்றன. உணவுப் பொட்டலங்களை வீசும் ஹெலிகொப்டர்கள் என்று நினைத்த மக்கள் கூட்டம் வீதிக்கு வந்து வானைப் பார்த்து, ஆலாய்ப் பறக்கிறது. ஒன்றும் கிடைக்கவில்லை. பிரதமரும், முதல்வரும் வானிலிருந்து பார்வையிட்டார்களாம். எம்.எல்.ஏக்கள், எம்.பிகள் எல்லாம்கூட விசேட விமானம் மூலம் இந்தத் துயரங்களை எல்லாம் பார்த்திருப்பார்களோ, என்னவோ? ஒரு நாதியைக் காணவில்லை. இன்னொரு மழை தொடங்கிவிட்டது. கும்மிருட்டு. இங்கே மெழுகுவர்த்திகளும் இல்லை.

சற்று முன் பாலாஜி என்று ஒரு பையன் ஓடிவந்தான். பக்கத்து வீட்டில் நிறைமாதக் கர்ப்பிணி. எங்கே போவது, எப்படிப் போவது என்று உதவி கேட்டு அனுப்பி யிருக்கிறார்கள். இங்கிருந்து வெளி உலகை இணைக்கும் எல்லாப் பாலங்களையும் நீர் சூழ்ந்திருக்கிறது. எப்படி சொல்லச் செல்வது? தெரியவில்லை. பக்கத்து வீட்டில் கேட்கும் பெண்ணின் அழுகுரல் இதயத்தைப் பிழிகிறது!


> “எங்கே செல்வது? அந்த நள்ளிரவில் எவரை அழைப்பது? அழைத்தும் பிரயோசனம் இல்லை. செல்பேசிச் சேவைகள் பல அப்போதே செயலிழக்க ஆரம்பித்து விட்டன. ஆளுக்கொரு பக்கமாய் ஓடுகிறார்கள். விடிந்தபோது வழிபாட்டுத்தலங்கள், மண்டபங்களின் நிர்வாகிகள் தாமாக ஓடிவந்து கட்டடங்களில் மக்கள் தங்க திறந் துவிட்டார்கள். ஆனால், எவ்வளவு பேரை அவை கொள்ளும்?”





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொத்தம் எத்தனை பேர்?



மிலேச்சன் ஏற்படுத்திய ஒரு குழப்பம் காரணமாகப் பரமார்த்தகுருவுக்கும், மற்றச் சீடர்களுக்கும் பெருத்த ஒரு சந்தேகம் ஏற்பட்டு விட்டது.

ஆற்றினால் பாதிக்கப்பட்டது மிலேச்சன் ஒருவன்தானா? அல்லது வேறு யாராவது பாதிக்கப்பட்டார்களா? இதுதான் அந்த சந்தேகம். இந்தச் சந்தேகத்தை எவ்வாறு தெளிவுபடுத்திக்கொள்வது என்று பரமார்த்த குருவும், சீடர்களும் தீவிரமாக யோசித்தனர்.

"இது என்ன பிரமாதம்? நாம் எத்தனைபேர் இருக்கிறோம் என்று எண்ணிப் பார்த்துக்கொண்டால் நம்மில் எவரையாவது இழந்துவிட்டோமா என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டுப் போகிறது" என்று மட்டி என்ற சீடன் கூறினான். "அது நல்ல ஏற்பாடுதான்" என்று பரமார்த்த குருவுக்குத் தோன்றியது. 'மட்டி'என்ற சீடனை அழைத்து தங்களை எண்ணிப் பார்க்குமாறு உத்தரவிட்டார்.

மட்டியோ தன்னைக் கணக்கில் சேர்க்காமல் மற்றவர்களை மட்டும் எண்ணிக் கணக்கிட்டுவிட்டு "குருதேவா, மோசம் போய்விட்டோம். நாம் ஆறு பேர் அல்லவா! இப்போது ஐந்து பேர் தான் இருக்கிறோம். எம்மில் யாரோ ஒருவனை ஆறு காலைப் பிடித்து இழுத்து விழுங்கி விட்டது" என்று கூக்குரலிட்டான்.

"முட்டாள், இவனைப் போய் எண்ணிப் பார்க்கச் சொன்னீர்களே, நான் எண்ணிப் பார்த்து உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு, மூடனும் தன்னை விட்டு விட்டு மற்றவர்களை மட்டுமே எண்ணிக் கணக்கிட்டான்.

பிறகு பீதியடைந்த குரலில் பரமார்த்த குருவை நோக்கி, "குருதேவா மட்டி சொன்னது உண்மைதான். நாம் ஆறு பேர் இருக்க வேண்டும். ஐந்து பேர்தான் இருக்கிறோம். ஒருவனைக் காணவில்லை. ஆறுதான் அவனை விழுங்கிவிட்டது" என்று சொன்னான்.

ஒவ்வொரு சீடனும் மாறிமாறி தன்னை விட்டு விட்டு எண்ணிக் கணக்கிட்டு தாங்கள் ஐந்து பேர் மட்டுமே இருப்பதாகச் சொன்னார்கள்.

பரமார்த்த குருவும் தன்னை விட்டுவிட்டு எண்ணி ஐந்து பேர்தான் இருக்கிறார்கள் என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்தார்.

ஆனால் காணாமற் போனது யார் என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியவில்லை.

மனக் குழப்பமும் வேதனையும் அடைந்த பரமார்த்த குருவுக்கு வழிப்போக்கனின் நினைவு வந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தார். மரத்தடி நிழலில் அவன் அமர்ந்திருப்பது தெரியவே அவனை அழைத்து வருமாறு சீடன் ஒருவனை அனுப்பி வைத்தார்.

வழிப்போக்கன் வந்து "என்ன சமாச்சாரம் சாமியாரே?" என்று கேட்டான். "நாங்கள் ஆறுபேர் ஆற்றில் இறங்கி ஆற்றைக் கடக்கத் தொடங்கினோம். அக்கரைக்கு வந்து பார்த்தால் ஐந்து பேர்தான் இருக்கிறோம். ஓர் ஆளை ஆறு விழுங்கி விட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. நாங்கள் இழந்துவிட்ட என் சீடனை உயிர்ப்பித்துத் தர முடியுமா?" என்று பரமார்த்த குரு கேட்டார்.

இப்படியும் அடி முட்டாள்கள் உலகத்தில் இருக்கக் கூடுமா என்று எண்ணித் தனக்குத்தானே சிரித்துக்கொண்ட வழிப் போக்கன், "சாமியாரே, உங்கள் சீடனை உயிர்ப்பித்துக்கொண்டு வந்து சேர்க்க என்னால் முடியும். ஆனால் அதற்கு இருபது பணம் செலவாகுமே"என்றான். "பணத்தைப்பார்த்தால் முடியுமா? இருபது பணம் நான் தருகிறேன்" என்று அழுது கொண்டே பரமார்த்த குரு கூறினார். வழிப்போக்கன் இருபது பணத்தை வாங்கிக் கொண்டான்.

"சாமியாரே, நீங்கள் எல்லோரும் வரிசையாக நின்று கொள்ளுங்கள். நான் ஒவ்வொருவரையும் என் கைத்தடியினால் தட்டுகிறேன். தட்டப்படுவர்கள் ஒன்றும்இரண்டு என்று உரக்கச் சொல்லியவாறு அப்பால் நகர வேண்டும்" என்றான்.

அந்த ஏற்பாட்டுக்கு பரமார்த்த குரு ஒப்புக்கொண்டார்.

பரமார்த்தகுரு முதல் ஆளாக நின்று கொண்டார். அவரைத் தொடர்ந்து மற்ற சீடர்களும் வரிசையாக நின்றார்கள். வழிப்போக்கன் முதலில் பரமார்த்த குருவின் முதுகில் தனது கைத்தடியால் ஓங்கி ஓர் அடி அடித்தான்.

"ஐயையோ"என்று முதுகைத் தடவிட்டுக் கொண்டு 'ஒன்று' என்று கூறியவாறு பரமார்த்த குரு அப்பால் நகர்ந்தார். வழிப்போக்கன் அடுத்த ஒவ்வொரு சீடனின் முதுகிலும் அடிகொடுத்து அனுப்பினான்.

அவர்களும் முதுகைத் தடவி விட்டுக்கொண்டு வாய் விட்டு எண்ணிக்கொண்டே அப்பால் நகர்ந்தனர்.

கடைசியாக மூடன் முதுகில் அடிவாங்கிக் கொண்டு 'ஆறு' என எண்ணியவாறு அப்பால் நகர்ந்தான்.

"ஆகா! நாம் இழந்த ஒருவனைத் திரும்பப் பெற் று விட்டோம். நாம் ஆறு பேர் இருக்கிறோம்" என்று கூறியவாறு பரமார்த்த குரு ஆனந்தத் தாண்டவமா டினார். பிறகு அந்த வழிப்போக்கனுக்கு நன்றி கூறி விட்டுத் தனது சீடர்களுடன் பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1510 - போர்த்துக்கேயரால் பிஜாபூர் சுல்தானிடமிருந்து கோவா கைப்பற்றப்பட்டது.

1799 - பிரான்ஸ் மீற்றரை தமது நீள அளவு அலகாகப் பின்பற்றத் தொடங்கியது.

1817 - அமெரிக்காவின் 20 ஆவது மாநிலமாக மிஸிசிப்பி இணைவு.

1906 - நோபல் அமைதிப் பரிசை அமெரிக்க அதிபர் தியோடர் ரூஸ்வெல்ற் பெற்றுக்கொண்டார். இவரே நோபல் பரிசு பெற்ற முதலாவது அமெரிக்கர் ஆவார்.

1932- தாய்லாந்து அரசமைப்புக்கு அமைய அந்த நாடு முடியரசாகியது.

1941 - உலக மகா யுத்தம் II. மலேசியாவுக்கு அண்மையில் ஜப்பானிய கடற்படையினரால் எம்.எம்.எஸ். பிறின்ஸ் ஒவ்வேல்ஸ் மற்றும் எச்.எம்.எஸ். றிபல்ஸ் கப்பல்கள் மூழ்கடிப்பு.

1948 - சர்வதேச மனித உரிமை பிரடகனம் ஐ.நா.சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1949 - சீன சிவில் போர். மக்கள் விடுதலை இராணுவம் செங்கு நகரைக் கைப்பற்றியது. சீன மக்கள் குடியரசு அதிபர் சியாங் கைஷேக் தைவானுக்கு தப்பி ஓட்டம்.

1978 - அரபு இஸ்ரேல் முரண்பாடு. இஸ்ரேல் பிரதமர் மெனாச்சம் பெகின், எகிப்து அதிபர் அன்வர் சதாத் இணைந்து நோபல் அமைதிப் பரிசைப் பெற்றனர்.

2006 - பேராயர் டானியல் தியாகராசா புதிய ஆயராகப் பதவியேற்பு.




## விடுகதைகளும் விடைகளும்

1. வகை வகையாய் தெரியும் வண்ணப்படம், கண்மூடிக் காணும் காட்சிப்படம் அது என்ன?
   - கனவு
2. மென்மையான உடம்புக்காரன், பாரம் சுமக்கும் கெட்டிக்காரன் - அது என்ன?
   - நத்தை
3. மூன்றுகால் குள்ள அக்கா, பாரம் தாங்கி, நெருப்பை சுமந்து சோறு சமைப்பாள் அவள் யார்?
   - அடுப்பு
4. பட்டனைத் தட்டினால் சட்டென விரியும் - அது என்ன?
   - குடை
5. நீரிலும், நிலத்திலும் வாழ்வான், பாறைக்குள்ளும் பதுங்கி வாழ்வான் அவன் யார்?
   - தவளை
6. கையளவு உடம்புக்காரன், காவலுக்கு கெட்டிக்காரன் அவன் யார்?
   - பூட்டு
7. மேகத்தின் பிள்ளை அது, தாகத்தின் நண்பனும் அதுவே. அது என்ன?
   - மழை
8. முற்றத்தில் நடப்பான் மூலையில் படுப்பான் அவன் யார்?
   - துடைப்பம்

## சின்னஞ்சிறிய பாடல்



**ஆவணி**
நான் பிறந்தது ஆவணி
அவள் உடுத்தது தாவணி
அவன் காலில் போடுவது காலணி
அவள் பெயர் வாணி

**சந்தி**
அது ஒரு சந்தி
நீ ஓடுவது முந்தி
நான் வருவது பிந்தி
அந்த வசனம் பந்தி

**சோதனை**
அவளின் தந்தைக்குச் சோதனை
அவனுக்கு வேதனை
உண்மையைச் சொல் நீதனை
நான் படைத்தது சாதனை

**விட்டு**
என் நண்பி பிரிந்தாள் என்னை விட்டு
நான் சாப்பிட்டேன் லட்டு
என் அம்மா கட்டியது பட்டு
அவள் தங்கையின் தலையில் விழுந்தது தட்டு

*பா.தாட்சாயினி, தரம் 6 ஈ,*
*கொக்குவில் இந்துக் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 DEC 2015

# நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகள், பழங்கள்



ஆரோக்கியமாக இருப்பதற்கு தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டுமென்று மருத்துவர்கள் அறிவுறுத்துவார்கள். மேலும் தினமும் குறைந்தது மூன்று லீற்றர் தண்ணீராவது பருக வேண்டுமென்றும் கூறுவார்கள். ஏனெனில் தண்ணீர் அதிகம் குடிப்பதால், உடலில் வறட்சி ஏற்படாமல் இருப்பதோடு, உடலில் உள்ள அனைத்து நச்சுப் பொருள்களும் வெளியேறி, உடல் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்.

மேலும் உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தியானது சீராகச் செயற்படுவதோடு, உடலில் இருக்கும் அதிகப் படியான வெப்பமும் தணியும். பொதுவாக உடலில் வறட்சி ஏற் பட்டால், நிறையப் பிரச்சினைகள் வரக் கூடும். குறிப்பாக மலச்சிக் கல், குடலிறக்கக் கோளாறு, மூல வருத்தம், சிறுநீரகக் கற்கள் போன்றவை ஏற்படும். எனவே இத்தகைய பிரச்சினைகள் அனைத்தும் உடலில் வராமல் இருப்பதற்கு உடலில் போதிய நீர்ச்சத்து இருக்க வேண்டும். அதற்குத் தண்ணீர் மட்டும் தான் குடிக்க வேண்டுமென்பதில்லை.

ஒருசில நீர்ச்சத்துள்ள பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சாப்பிட்டாலும், உடலுக்கு வேண்டிய நீர்ச் சத்தானது கிடைத்துவிடும். மேலும் நீர்ச்சத்து அதிகம் நிறைந்துள்ள காய்கறிகள் மற்றும் தர்ப்பூசணி, வெள்ளரிக்காய், முள்ளங்கி, தக்காளி, கேரட் போன்றவற்றில் நீர்ச்சத்து மட்டுமின்றி, விற்றமின்கள் மற்றும் புரோட்டின்களும் அதிகம் நிறைந் துள்ளன. சரி, இப்போது நீர்ச்சத்து அதிகம் உள்ள உணவுப் பொருள்களின் பட்டியலைப் பார்க்கலாம்.

தக்காளியில் விற்ற மின் சி, பொட்டாசியம் மற்றும் லைகோபைன் போன்றவை அதிகம் இருப்பதோடு, 90வீதம் நீர்ச்சத்தும் நிறைந்துள்ளது. எனவே அதனைச் சாப்பிட்டால், நீர்ச்சத்துக் கிடைப்பதோடு, உடல் எடையும் குறையும். மேலும் இதனைப் பச்சையாகச் சாப்பிட்டால், இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டைப் பெறலாம்.

கரட்டில், பீட்டா கரோட்டின் அதிகம் இருப்பதோடு, ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள், விற்றமின்கள் மற்றும் புரோட்டீன்களும் அதிகம் உள்ளன. இவை உடலுக்கு மட்டுமன்றி, சருமத்துக்கும் கூந்தலுக்கும் மிகவும் நல்லது. எனவே தினமும் ஒரு கோப்பை கேரட் ஜூஸ் குடித்தால், உடல் வறட்சியை நீங்குவதோடு, சருமமும் பொலிவோடு மின்னும்.

முள்ளங்கி சாப்பிட்டால், உடலில் இருந்து வெளியேறிய நீரை மீண்டும் பெறலாம். மேலும் இவை எளிதில் செரிமானமடைவதால், அஜீரணக் கோளாறு ஏற்படுவதைத் தடுக்கலாம். குறிப்பாக இதனைச் சாப்பிட்டால், வயிறு நிறைவதோடு, உடல் எடை குறையவும் உதவியாக இருக்கும்.

வெள்ளரிக்காயில் நீர்ச்சத்து அதிகம் இருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. அதிலும் அது கோடைகாலத்தில் அதிகம் கிடைப்பதால், தவறாமல் வாங்கிச் சாப்பிட்டு, உடல் வறட்சியோடு, மலச்சிக்கலையும் தடுத்து விடுங் கள்.

> நீர்ச்சத்துள்ள பழங்கள் மற்றும் காய்கறிகளை சாப்பிட்டாலும், உடலுக்கு வேண்டிய நீர்ச்சத்தானது கிடைத்துவிடும். மேலும் நீர்ச்சத்து அதிகம் நிறைந்துள்ள காய்கறிகள் மற்றும் தர்ப்பூசணி, வெள்ளரிக் காய், முள்ளங்கி, தக்காளி, கரட் போன்றவற்றில் நீர்ச்சத்து மட்டுமன்றி, விற்றமின்கள் மற்றும் புரோட்டின்களும் அதிகம் நிறைந்துள்ளன.

தோடம்பழத்தில் விற்றமின் சி மட்டுமன்றி, நீர்ச்சத்தும் அதிகம் உள்ளது. எனவே தினமும்ஒருதோடம் பழத்தைஉணவில் சேர்ப்பது மிகவும் நல்லது.

நார்ச்சத்து அதிகம் உள்ள அன்னாசியில், நீர்ச்சத்தும் அதிகம் நிறைந்துள்ளது.

நீர்ச்சத்துள்ள உணவுப் பொருள்களில் பிரபலமான உணவுப் பொருள் தான் தர்ப்பூசணி. அதிலும் இந்த பழம் கோடை காலத்தில் அதிகம் கிடைக்கும். அதுமட் டுமன்றி, இந்த உணவுப் பொருளில் வைட்டமின் ஏ, பி, பொட்டாசியம், மக்னீசியம் மற்றும் தையமின் சத்துக்களும் அதிகம் நிறைந்துள்ளன.

திராட்சைப் பழத்தில் நீர்ச்சத்து அதிகமாக உள்ளது. எனவே இந்தப் பழத்தை தினமும் உண்டுவந்தால், உடல்வறட்சிநீங்குவதோடு, செரிமான மண்டலமும் நன்கு செயற்படும்.

நாம் எமது அன்றாட உணவில் பழங்களையும், நார்ச்சத்துக் கொண்ட உணவுகளையும் ஏனோ தவிர்த்து வருகின்றோம். இவற்றை விடுத்து மாமிச உணவுகளை எடுப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றோம். இதனால் உடலுக்குக் கிடைக்க வேண்டிய நீர்ச்சத்தும், நார்ச்சத்தும் கிடைக்காமல் போய் விடுகின்றன. ஆகவே இந்தத் தவறு எதிர்காலத்திலாவது ஏற்படாதவாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# உலக நாடுகளுக்கு ஒபாமாவின் அறிவுரை

கலிபோர்னியாவின் சான் பேர்னாடினோ நகரில் வருட இறுதி நத்தார் பண்டிகை விழாவின்போது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் உயிரிழந்த சம்பவத்தின் பின்னர் கடந்த ஞாயிறன்று நாட்டு மக்களுக்கு வானொலியில் பராக் ஒபாமா உரையாற்றுகையில், இப்படியான தாக்குதல்களுக்கு அமெரிக்கா பயந்துவிடப் போவதில்லை என்று சூளுரைத்துள்ளார். நாங்கள் பலமானவர்கள். எத்தகைய நெருக்கடிகளில் இருந்தும் மீள். எழுவோம் என்றும் ஒபாமா தெரிவித்தார். தாக்குதல் நடத்திய தம்பதியர் தீவிரவாதிகள் என்றும் அவர் குறிப்பிட்டார். 28 வயது நிரம்பிய செய்ட் றிஸ்வான் பாரூக், அவரது மனைவி தஷ்பீன் மாலிக் (வயது 29) ஆகிய இருவரும் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன் 14 பேரைச் சுட்டுக் கொன்றனர். ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் இதன் பின்னர் விடுத்த அறிக்கையில், தாக்குதல் நடத்திய இருவரும் தமது ஆதரவாளர்கள் என்று தெரிவித்திருந்தனர்.

அமெரிக்கா தலைமையில் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தப்படும் விமானத் தாக்குதல்களில் 65 நாடுகள் இணைந்துள்ளன. இந்த நாடுகளைப் பழி வாங்குவதற்காக பாரிஸில் சமீபத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளால் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தற்பொழுது கலிபோர்னியாவில் நத்தார் பண்டிகை விழாவில் தாக்குதல் நடத்தியோர் தனது ஆதரவாளர்கள் என்கிறது ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகள் அமைப்பு. ஆகவே ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரப் படுத்தும் கட்டாய நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று பராக் ஒபாமா வெள்ளை மாளிகையில் இருந்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகள் அமைப்புக்கு எதிரான அமெரிக்காவின் செயற்பாடுகள் குறித்து பின்வருமாறு விளக்கமளித்தார்.




தேவை ஏற்படின் அமெரிக்க இராணுவம் எந்த ஒரு நாட்டிலும் பயங்கரவாதிகளின் இருப்பிடங்களைக் கண்டு பிடிக்க தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும். ஈராக்கிலும் சிரியாவிலும் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்கள் மூலம் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். கனரக ஆயுதங்கள், எண்ணெய்த் தாங்கிகள், உட்கட்டுமானங்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

ஈராக்கிலும் சிரியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுகக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பல்லாயிரக்கணக்கான படையினருக்கு அமெரிக்கா தொடர்ந்து பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கும். இதன்மூலம் அவர்களின் மறைவிடங்களை இல்லாமல் செய்யமுடியும். இந்த இரு நாடுகளிலும் அமெரிக்கா விசேட செயற்பாட்டுப் படைகளை வைத்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். இன் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக அமெரிக்கா தனது நட்பு நாடுகளுடன் இணைந்து செயற்படுகிறது. இதன்மூலம் நாம் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் இரகசியத் திட்டங்களை முறியடிக்கமுடியும். அவர்களுக்கு நிதியுதவி கிடைப்பதைத் தடுக்க முடியும். அவர்கள் ஆளணி திரட்டுவதைத் தடுக்க முடியும்.

சிரியாவில் போர் நிறுத்தம் செய்வதற்கும் அங்குள்ள பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கும் அமெரிக்காவின் தலைமையில் சர்வதேச சமூகம் செயற்பட்டு வருகிறது. போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்து அரசியல் தீர்வு ஏற்படுமானால் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்ரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா உட்பட அனைத்து நாடுகளும் முழுமையாகப் பங்காற்ற முடியும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்புத்தான். இதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இந்த அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகள் அமைதியை விரும்பும், சாதாரண முஸ்லிம் மக்களைப் பாதிக்காமல் செயற்படுத்தப்பட வேண்டும். அப்பாவி முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படும்போது அவர்களும் தீவிரவாதத்துக்குள் ஈர்க்கப்படலாம்.

இதனைக் கருத்தில் கொண்டு, ஐ.எஸ்.ஐ.எஸ். இன் இதுபோன்ற செயற்பாடுகளை அமெரிக்காவுக்கும் இஸ்லாம் மதத்துக்கும் இடையிலான போராக மாற்ற அமெரிக்க மக்கள் முயற்சிக்கக் கூடாது என்று ஒபாமா வலியுறுத்தியுள்ளார். ஒபாமாவின் அறிவுரை அமெரிக்காவுக்கு மட்டுமன்றி முழு உலக நாடுகளுக்கும் பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | 2 | |
| | 3 | | 7 | | 8 | 4 | | |
| | 5 | | | | | 1 | | |
| 4 | | | | 2 | | | | 3 |
| 6 | | | | | | | | 8 |
| 7 | | | | 9 | | | | 2 |
| | | 1 | | | | | 5 | |
| | | 9 | 3 | | 5 | | 7 | |
| | 6 | | 4 | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியானஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும்கொண்டது. 3X3ஆக உள்ளேயும்3நிரல்களையும்3நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றைநிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனைஅறிமுகப்படுத்திவெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |



கனமழையில் கோரத் தாண்டவத்தைச் சொல்ல இந்த ஒரு புகைப்படம் போதும்...

**மீனம்மா**

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பரவலாக எல்லா ஊரிலும் வெள்ளம் வரக் காரணம் என்ன? தாமிரபரணியில் வெள்ளம், அழிக்கப்பட்ட இயற்கை தன்னை மீட்டெடுக்கிறது.

**புத்திசாலி ராஜா**

குழந்தைக்கு வ, வா வரிசையில் லேட்டஸ்ட் பேரா சொல்லுனு ஒரு அக்கா கேட்டாங்க சரி "வட்சப்"னு சொன்னேன். அதுக்கு வாட்சப்ல அரை மணிநேரமா திட்டியிருக்கிறாங்க.



நாம் தமிழர் தலைவர் 'சீமான்' இதோ.. பச்ச மூங்கிலில் முதன் முதல் படகோட்டிய முதல் தமிழன் எங்கள் அண்ணன். நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான்... இரவில் தான் எங்கள் அண்ணனுக்கு கண் பார்வை அதிகம்..

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி எளிதாக நிறைவேறும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். அரசியல்வாதிகள் பதவி பெற வாய்ப்புண்டு.

**இடபம்:** பேச்சிலும், செயலிலும் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்கள். மாண வர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்கள்.

**மிதுனம்:** பேச்சில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். மனைவியின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும். உடல்நலன் குறித்து அக்கறை கொள்வது அவசியம்.

**கடகம்:** முக்கிய பணிகளில் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவு கிடைப்பதில் தாமதம் இருக்கும். நண்பரின் உதவியால் எதிர்பார்த்த நன்மை உண்டாகும்.

**சிங்கம்:** தாமதமான பணியை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமாணம் கூடும். முக்கிய வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** இடையூறு செய்வோரிடம் இருந்து விலகவும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் தேவை

**துலாம்:** குடும்ப சூழ்நிலை பற்றி, பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபமே வரும். வாகனப் போக்குவரத்தில் கவனநடை நல்லது. இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதி தரும்.

**விருச்சிகம்:** மாறுபட்டு பேசுபவரிடம் இருந்து விலகவும். தொழில், வியாபாரத்தில் வரவை விட, செலவு கூடும். உணவுப் பொருள் தரமறிந்து உண்ணவும். உறவினர்கள் ஆதரவாக செயல்படுவர்.

**தனுசு:** மதிநுட்பமுடன் செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். மனைவி விருப்பம் அறிந்து செயல்படுவீர்கள்.

**மகரம்:** கடந்த கால அனுபவம் கை கொடுக்கும். தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். இலாபம் சுமார். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்க யோகம் உண்டு.

**கும்பம்:** சவால் விடுக்கும் மனப்பான்மை உருவாகும். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறைச் சமாளிப்பீர்கள். விரும்பியதை மனைவிக்கு வாங்கி தருவீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**மீனம்:** குடும்பச் செலவு கட்டுக்கடங்காமல் போகும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பார்கள்.

# இது மனைவிகள் அனைவருக்கும் சமர்ப்பணம்

WhatsApp படித்ததில் பிடித்தது

ஒரு உயர் நிலைப் பாடசாலையில் கற்பித்த ஆசிரியர் ஒரு மாணவனைக் கூப்பிட்டு கரும்பலகையில் உனக்கு பிடித்த உறவு முறைகளில் 30 பேரை எழுது என்றார்- அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, மனைவி, மகன், மகள், அக்கா, தங்கை, அண்ணன், தம்பி, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, காதலி, நண்பன், என 30 பேர் கொண்ட பெயர்களை அந்த மாணவன் எழுதினான்.

கண்டிப்பாக இதில் மூன்று பெயர்களை அழிக்க வேண்டும். எவரை இழக்க வேண்டும் என்று நினைக்கிறாயோ அந்தப் பெயரை அழி-என்றார் ஆசிரியர்.

அந்த மாணவனோ....காதலி, நண்பன், பக்கத்து வீட்டுக்காரர், ஆகியோரின் பெயர்களை அழித்தான்.

மறுபடியும் மூன்று பெயரை அழிக்கச் சொன்னார் ஆசிரியர்.

இப்படியாக ஒவ்வொருவராக அழித்தான்.. கடைசியாக அப்பா, அம்மா, மனைவி, மகன், மகள் என்போரது பெயர்கள் மட்டுமே இருந்தன.

இதிலும் இரண்டு பெயர்களை நீக்க வேண்டும், யாரை நீக்குவாய் என்றார்-ஆசிரியர்.

மாணவர்கள் அனைவருக்கும் கோபம்.

வருத்தத்துடன் அப்பா, அம்மா பெயரை அழித் தான் அந்த மாணவன்.

மறுபடியும் இன்னமும் இரண்டு பெயரை அழிக்க வேண்டும் என்றார் ஆசிரியர்.

மாணவர்கள் அனைவருக்கும் ஆச்சரியம். எவர்களது பெயரை அவன் அழிப்பான் என்று.

மிகுந்த சோகத்துடன் மகன், மகள் பெயர்களை அழித்தான். கடைசியாக மனைவியின் பெயர் மட்டும் இருந்தது.

ஆசிரியர் ஆச்சரியமாகக் கேட்டார் மகன், மகள் பெயரை அழித்து விட்டு எதற்காக மனைவியின் பெயரை மட்டும் அழிக்கவில்லை என்று.

அதற்கு மாணவன் மகள் எப்படி இருந்தாலும் இன்னொரு வீட்டுக்கு போய் விடுவாள், மகன் அவன் மனைவி குழந்தை என வாழ்வான், கடைசிக்காலம் வரை என்னோடு வாழக் கூடியவள் மனைவிதான், [illegible] [illegible] தான் நாம் இறக்கும் வரை எம்முடன் வாழக் கூடிய ஒரே உறவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# குக்கரைப் பற்றி அறிவோம்

▾ பொதுவாகக் குக்கர் என்பது எமது நேரத்தையும், எரி பொருளையும் மிச்சம் பிடிக்க வந்த ஒரு பாத்திரம் என்று கூற வேண்டும். குக்கரைச் சரியாகப் பயன்படுத்தினால் நல்ல ருசியான சமையலையும், சிக்கனமான குடும்பத் தலைவி என்ற பெயரையும் எடுக்கலாம்.

▾ சில சமயம் சமைக்கும் போது வெயிட் வால்வு வழியாக அதிக அளவு கஞ்சி வெளியேறும். இது ஏன் என்று பலருக்கும் தெரிவதில்லை. சமையலுக்கு தேவையானதை விட தண்ணீரின் அளவு அதிகமாகி விட்டால், அதிகமான நீரை இந்த வெயிட் வால்வு வெளியேற்றுகிறது.

▾ மேலும், குக்கருக்குள் ஒரு பாத்திரம் வைத்துச் சமைக்கும் படி தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாம் சில நேரங்களில் உள்பாத்திரம் இல்லாமல் நேரடியாகச் சமையல் செய்யும் போது இவ்வாறு நீர் வெளியேறும்.

## சமைப்போம் வாங்க



# முள்ளங்கி இறால் குருமா

இறால் உணவை விரும்பாதவர்கள் மிகக் குறைவு தான். அதன் சுவை அனைவரையும் திரும்பத் திரும்பத் தனது பக்கம் ஈர்க்கும். நாம் சமைக்க இருக்கும் முள்ளங்கி இறால் குருமா நிச்சயம் சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் சுண்டி இழுக்கும்.

**தேவையான பொருள்கள்:**

இறால் – அரைக்கிலோ
முள்ளங்கிகால் கிலோ
தயிர் – அரைக் கப்
வெங்காயம் – 200 கிராம்
பச்சை மிளகாய் – 4
தக்காளி – 200 கிராம்
தேங்காய் துருவல் – கால் மூடி
பட்டை – 2
லவங்கம் – 2
இஞ்சி – சிறு துண்டு
பூண்டு – 4 பல்
எண்ணெய் – 1 குழிக்கரண்டி
உப்பு – தேவையான அளவு

**செய்முறை:**

இறாலை நன்றாகச் சுத்தம் செய்து தயிரில் சிறிது நேரம் ஊற வைக்கவும். வெங்காயம், தக்காளி, மிளகாய் முள்ளங்கியை நறுக்கிக் கொள்ளவும். தேங்காயை அரைக்கவும், இஞ்சி மற்றும் பூண்டை விழுதாக்கிக் கொள்ளவும்.

தாச்சியில்: எண்ணெயை ஊற்றிக் காய்ந்ததும், பட்டை லவங்கம் போட்டுத் தாளித்து, நறுக்கிய வெங்காயம், தக்காளி, மிளகாயை ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டு வதக்கவும். பின்னர் இஞ்சிப் பூண்டு விழுதைச் சேர்த்து இறாலையும் சேர்த்து வதக்கவும். பின்னர் முள்ளங்கியையும் சேர்த்து வதக்கி நன்றாக வேகவிடவும். தேவையான உப்பு, அரைத்த தேங்காயின் பாலையும் அதனுடன் சேர்க்கவும். முள்ளங்கி மற்றும் இறால் நன்கு வெந்ததும் கொத்தமல்லி இலை தூவி இறக்கவும்.



## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 800 | 350 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 550 | - |
| பாரை | 450 | 500 | - | 500 | 700 | 430 |
| சுறா | 500 | 500 | - | 600 | 500 | - |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 400 | 400 |
| விளை | 700 | 450 | 400 | 600 | 600 | 400 |
| முரல் | 250 | 380 | 300 | 500 | 400 | - |
| கும்பிளா | 400 | 300 | 300 | 480 | 400 | - |
| கிழாக்கன் | 450 | 800 | 300 | 500 | - | - |
| ஒரா | 400 | 350 | 300 | 500 | - | 350 |
| திரளி | 250 | 250 | 100 | 350 | 200 | 100 |
| நகரை | 200 | 250 | 100 | 500 | 150 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 150 | - |
| ஓட்டி | 300 | 200 | 200 | 300 | - | 250 |
| திருக்கை | 200 | 300 | - | 300 | 300 | - |
| பாலை | 450 | 250 | - | 500 | 350 | - |
| வாளை | 150 | 150 | 200 | 300 | 300 | 200 |
| கொய் | 150 | 100 | 80 | 150 | 50 | - |
| மதனம் | 200 | 150 | 300 | 200 | - | 150 |



**நாளை**
கார்த்திகை -25
வெள்ளிக்கிழமை 11.12.2015
ராகுகாலம்: 10.49-12.19 வரை
சுபநேரம்: 06.19- 07.49 வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 120 | 100 | 140 | 120 |
| கத்தரி | 120 | 180 | 130 | 160 | 140 | 200 | 90 |
| கரட் | 150 | 200 | 180–280 | 180 | 300 | 400 | 250 |
| மரவள்ளி | 40 | 60 | 50 | 50 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 200 | 180–200 | 200 | 240 | 280 | 220 |
| பாகல் | 260 | 300 | 250 | 220 | 260 | – | 250 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 90 | 120 | 120 | 70–80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 70–120 | 120 | 100 | 200 | 120 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 40 | 80 | 30 |
| தக்காளி | 200 | 200 | 160 | 220 | 220 | 240 | 220 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 50 | 80 | 40 |
| கீரை | 50 | 40 | 50 | 20 | 60 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 30 | 45 | 30 | 50 | 15 |
| பச்சை மிளகாய் | 1000 | 800 | 800–1000 | 700 | 700 | 1000 | 800 |
| புடோல் | 140 | 150 | 120 | 120 | 120 | 180 | 160 |
| கோவா | 140 | 180 | 120–150 | 50–60 | 150 | 200 | 120 |
| வெண்டி | 120 | 120 | 150 | 120 | 100 | 160 | 100 |
| போஞ்சி | 300 | 240 | 300 | 240 | 240 | 240 | 220 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 180 | 180 | 240 | 160 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50–60 | 40 | 55–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 250 | 70 | 150 | 150 | 220 | 200 | 70 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 30 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 600 | 340 | 400 | 400 | 300 |
| இராசவள்ளி | 300 | – | 250 | – | 280 | – | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் தொடர்பில் அறிவுடன் இருக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட சர்வ மதப் பேரவை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 10
மனித உரிமைகள் பற்றிய போதிய அறிவு டன் இருப்பதே எமது உரிமை மீறல்கள் தொடர்பில் நாம் விழிப்புடன் செயற்பட வழிகோலும். இவ்வாறு யாழ்.மாவட்ட சர்வ மதப் பேரவை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிட்டு 50 வருடங்கள் கடந்துவிட்டபோதும் உலகெங்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றன என்றும் பேரவை தெரி வித்துள்ளது.

இது தொடர்பில் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

மனித உரிமைகள் பற்றிய போதிய அறி வைப் போதிப்பது சர்வ மதப் பேரவையின் முக்கிய கடமைகளில் ஒன்று.

நவீன அர சுகளில் மனிதனின் நல்வாழ்வுக்கு மனித உரிமைகள் சிறப்பாகப் பேணப்படுதல் அவசியமாகின்றது. பிறரது உரிமைகள் பாதிக்காத வகையில் சுதந்திரமாகச் செயற்பட ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. அரிஸ்ரோட்டலின் கருத்துப்படி மனிதன் வாழ்ந்தால் மட்டும் போதாது. நன்றாக வாழவேண்டும். நலன்கள் பாதுகாக்கப்பட் டால் தான் மனிதன் நன்றாக வாழ முடியும். தனது நலன்களைப் பேண பொது நல னையும் பாதுகாப்பதற்கு ஒருவருக்குள்ள சக்தியே உரிமைகள்.

மனிதனை மனிதன் ஒடுக்குவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் இன ஒதுக்கல்கள் தொடர்ந்து நிகழாது இருக்க வும் உரிமைகள் அவசியமாகின்றன. கடுமையான தண்டனைகள், மனித உரிமை மீறல்கள் என்பன வற்றிலிருந்து மனி தனைக் காக்கமனிதஉரிமைகள் அவசியமாகின்றன.

அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்தல், உடல் நலம் பேணல், கல்வி பெறுதல், கருத்துக்களை வெளியிடு தல், விரும் பும் சமயத்தைப் பின்பற்றுதல், சுரண்டலுக்கு எதிராகப் போராடுதல், குறைகளைத் தீர்த் துக் கொள்ளல் உள்ளிட்டவை மனித உரிமைகளாகக் கொள்ளப்படகின்றன.

இவை இன, பால், மத, அரசியல், பிராந்திய பேதமின்றி அனைவருக்கும் உரித்தானவை. ஒருவர் சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமான மற்ற, இழிவான நடத்தலுக்கு அல்லது தண்டனைக்கு உட்படலாகாது என்பது மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப் புரையில் கூறப்பட்டுள்ளது. உறுப்புரையின்படி சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வழி முறைகளால் அன்றி கைது செய்யப் படலாகாது என்பது டன் கைது செய்வதற்கான காரணம் கூறப்பட வேண்டும்.

> தேசிய பாதுகாப்பு, பொது மக்கள் ஒழுங்கு, பொது மக்கள் சுகாதாரம், ஒழுக்கம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு மற்றவர்களுக்கு உரிமைகளையும் சுதந்திரத்தை யும் பெற்றுக் கொடுக்கும் நோக் கில் உரிமைகள் மீதான கட்டுப் பாடுகளை விதிக்கலாம்.

இந்த உறுப்புரையானது தேசிய பாது காப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரம், ஒழுக்கம் என்ப வற்றைக் கருத்திற் கொண்டு மற்றவர்களுக்கு உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உரிமைகள் மீதான கட்டுப் பாடுகளை விதிக்கலாம் என்று கூறுகிறது.

தவிர ஒவ்வொருவருக்கும் சிந்தனைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்ப வற்றுக்கு உரிமையுண்டு. எந்தவொரு சமூகத்தினுள் மாத்திரம் தத்தமது ஆளுமையின் கட்டற்ற, பூரண மான வளர்ச்சி சாத்தியமாக இருக்குமோ அந்தச் சமூகத்தின் பால் ஒவ்வொரு வருக்கும் கடமைகள் உண்டு.

எனவே மக்கள் தமது உரிமைகள் பற்றி அறிந்து கொள் வதுடன் அந்த உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தற் துணிவுடன் நடவடிக்கைகள் மேற்கொள் ளக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்- என்றுள்ளது. (ற-4)

## ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் விழா இன்று

ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் இலங்கையில் மிதிவெடி அகற்றலின் 13 வருட நிறைவும் 2 லட்சம் மிதிவெடிகளை அகற்றியமைக்குமான விழா இன்று மு.ப.11 மணிக்கு முகமாலையில் அமைந் துள்ள ஹலோ ரஸ்ட் நிறுவனத்தில் இடம்பெற உள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் சு. முரளிதரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி. சத்தி யசீலன், தேசிய மிதிவெடி நடவடிக்கை மையத்தின் உதவி இயக்குநர் கே.ஜீ.எம்.பி.விக்கிரமசிங்க ஆகியோர் கலந்த கொள்ள உள்ளனர். (ற-21)

## ரிக்கெற் இல்லாவிட்டால் 5 ஆயிரம் ரூபா அபராதம்

ரயில்களில் ரிக்கெற் இன்றிப் பயணிப்பவர்களுக்கு அபராதம் அறவிடப்படவுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். ரயில்களில் ரிக்கெற்றுகள் இன்றிப் பய ணிக்கும் பிரயாணிகளுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படவுள்ளது.

இந்த முறைமை 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (த-10)

## நாடு திரும்பினார் மன்னார் ஆயர்



மன்னார், டிசெ.10
உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் சிங்கப்பூரில் மேலதிக சிகிச்சை பெற்று வந்த மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்ஆண்டகை 7 மாதங்களின் பின் நேற்று நாடு திரும்பினார்.

உடல் நிலை பாதிக் கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காகக் கடந்த மார்ச் மாதம் சிங்கப்பூர் சென்ற மன்னார் ஆயர், சிகிச்சை முடிந்து நேற்றுப் புதன் கிழமை காலை பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந் தார். அங்கிருந்து விசேட ஹெலி மூலம் ஏ-32 வீதியில் அமைந் துள்ள மன்னார் தள்ளாடி விமானத் தளத்தை வந்த டைந்தார். ஆயருடன் ஆயரின் செய லாளர் அருட்தந்தை ஏ.முரளிதரன் மற்றும் அருட் தந்தை எமில் எழில் ராஜ் ஆகியோரும் சிங் கப்பூரில் இருந்து வருகை தந்திருந் தனர்.

தள்ளாடி விமானத் தளத்துக்கு வந்த ஆயரை மன் னார் மறை மாவட்டக் குரு முதல்வர் அன் ரனி விக்ரடர் சோசை மற்றும் அருட் தந்தை யர்கள், அருட் சகோதரிகள் ஆகியோர் வரவேற்றனர்.

இதனையடுத்து தள்ளாடி விமானத் தளத்தில் இருந்து ஆயர் இராயப்பு ஜோசப் அம்புலன்ஸ் மூலம் மன்னார் ஆயர் இல்லத் துக்குச் சென்றார். (த-21)

## அரசியல் கைதி கோமகன் நேற்று முதல் உணவுத்தவிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.10
யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் கோமகன் கொழும்பு மகசீன் சிறையில் நேற்று முதல் உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அரசியல் காரணத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு கோமகனுக்கு எதிராக, வவுனியா மற்றும் கொழும்பு நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இதில் வவுனியா நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட போதிலும் கொழும்பு நீதிமன்றின் வழக்குத் தொடர்வதனால் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தொடரும் வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் கோமகனின் சார்பில் மேலும் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது .

இவ்வளவு கால இழுத்தடிப்பின் பின்பு மீண்டும் புதியவழக்குத்தாக்கல்செய்வதாகக்கூறப்படுவதைக் கண்டித்தும் இதற்கு உரிய நீதியை ஜனாதிபதி வழங்கவேண்டும் என கோரிக்கை முன்வைத்தும் நேற்று முதல் கோமகன் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (வ-101)

## முஸ்லிம் நாடுகளின் வீட்டுத் திட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கே முன்னுரிமை

### மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார், டிசெ.10
மன்னார் மாவட் டத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்காக முஸ்லிம் நாடு களால் 600க்கும் மேற்பட்ட வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், அவற்றில் பெரும்பாலானவை மன்னார் மாவட்ட முஸ்லிம் மக்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற மாவட்டத்தின் மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துத் தொடர்பில் நேற்றுத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

மாவட்டத்தின் மீள் குடியேற்றம் தொடர் பான கூட்டம் நேற்று (நேற்று முன்தினம்) வடக்கு மாகாண மீள்குடியேற்ற அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தின் போது மக்களுடைய காணித் தேவைகள், சுகாதாரம், தண்ணீர், மின்சாரம் உட்பட்ட பல தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டன.

இந்தத் தேவைகள் தொடர்பான விவரங்கள் அந்தந்தத் திணைக்கள அதிகாரிகளால் சேகரிக்கப்பட்டு மாவட்ட செயலகத்தின் மூலம் எதிர்வரும் திங் கட்கிழமைக்கு முன்பாக வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

இதைவிட பாகிஸ்தான், கஸகஸ்தான், பகாறே போன்ற முஸ் லிம் நாடுகளால் மன்னார் மாவட் டதில் மீள் குடியேறிய மக்களுக்கான 600க்கும் மேற்பட்ட வீட்டுத் திட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன.

முஸ்லிம் நாடு களில் இருந்து கிடைக்கப்பட்ட தன் காரணத்தால் அவர்களின் விருப்பத்தின் பேரிலேயே கொடுக்கவேண்டும் என்றும் கூறப்பட்டதற்கு இணங்க குறித்த வீட்டு திட்டங்களில் பெரும்பகுதியில் முஸ்லிம் மக்களே உள் வாங்கப்பட்டுள்ளார்கள். அதே வேளை தமிழ் மற் றும் சிங்கள மக்களும் இந்த வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இந்த திட்டங்கள் மூன்று கட்டங்களாக வழங்கப்பட உள்ளன என்று தெரிவித்தார்.

அதேவேளை – இந்திய அரசின் வீட்டுத்திட்டத்தில் 1000க்கும் அதிகமான வீடுகள் மன்னார் முஸ்லிம்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. தற்போது 15 ஆயிரம் அளவி லான வீடுகள் முஸ்லிம்மக்களுக்குத் தேவையாக உள்ளன என்றும் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் மூலம் ரயில் கொள்வனவால் திணைக்களம் வீழ்ச்சி காண நேரிடும்

*ரயில்வே தொழிற்சங்க சம்மேளனம் எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ 10

இந்தியக் கடன் திட்டமொன்றின் கீழ் ரயில் இயந்திரங்கள், ரயில் பெட்டிகள் கொள்வனவு மற்றும் ரயில் பாதை அமைப்பு ஆகியவற்றுக்காகப் போக்கு வரத்து அமைச்சு இரு அமைச் சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவுள்ளமை ரயில்வே திணைக்களத்தின் சரிவுக்குக் காரணமாகும் எனச் சுட்டிக் காட்டி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ரயில்வே தொழிற்சங் கங்களின் சம்மேளனம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

இந்தியாவோ அல்லது சீனாவோ நிர்மாணிக்கும் செலவினத்தைவிடக் குறைந்த செலவினத்தில் ரயில் பாதைகளை அமைப்பதற்கு ரயில்வே திணைக்களத்திடம் ஆற்றல் இருக்கையில், ரயில் பாதைகளை அமைக்கும் திட்டத்தை இந்தியாவிடம் கையளிப்பது நாட்டு மக்களை மேலும் கடனாளிகளாக்கும் செயல் என அந்தச் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

ரயில்வே தொழிற்சங்கங்கள் சம்மேளனத்தின் எதிர்ப்பையும் மீறி மேற்படி அமைச்சரவைப் பத்திரங்கள் அனுமதிக்கப்படுமாயின் முன்னர் இருந்த மகிந்த ராஜபக்ச அரசைப் போன்றே நல்லாட்சி அரசும் நாட்டுக்கும் ரயில்வே சேவைக்கும் இழைக்கும் பாரதூரமான அநியாய மென அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-22)

# நாளொன்றுக்கு 5 இந்திய படகுகள் பிடிபட வேண்டும்

*சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 10

நாளொன்றுக்கு குறைந்தது 5 இந்திய மீனவர்களின் விசைப் படகுகளைக் கைது செய்யவேண்டும் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், இதனூடாக இந்திய மீனவர்களின் வருகையைத் தடுக்க முடியாவிட்டாலும், கணிசமானளவு குறைக்கலாம் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான இந்திய விசைப் படகுகள் இங்கு மீன்பிடியில் ஈடுபடுகின்றன. அண்மையில் இந்திய மீன்பிடிப் படகுகள் கைது செய்யப்பட்ட போது அவர்களின் வருகை ஓரளவு குறைந்திருந்தது. பின்னர் மீண்டும் அது ஆரம்பித்துள்ளது. நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது 5 விசைப் படகுகளையாவது கைது செய்ய வேண்டும். இதனூடாக இந்திய விசைப் படகுகளின் வருகையைத் தடுக்க முடியாவிட்டாலும், கணிசமான அளவு குறைக்கலாம்.

இந்த விடயத்தில் கடற்றொழில்துறை அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை, தென்பகுதி மீனவர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. முன்னாள் கடற்றொழிற்துறை அமைச்சர் ராஜித்த சேனாரட்ன காலத்தில் 72 தென்பகுதி மீன்பிடிப் படகுகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இன்று 320 இற்கும் மேற்பட்ட படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. கடற்படை, இராணுவ முகாம்களுக்கு அருகிலிருந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். 72 படகுகளுக்கு மேலதிகமாக அனுமதியின்றி மீன்பிடியில் ஈடுபடும் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (த-5-சி)

# மாகாண சபை முறை மூலமும் இனப் பிரச்சினை தீரவில்லை

*சபையில் ஜே.வி.பி. குற்றச்சாட்டு*



கொழும்பு, டிசெ. 10

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாகவே மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப் பட்டது. ஆனால், அந்த முறைமையின் ஊடாக இன்னும் பிரச்சினை தீர்ந்ததாக இல்லை. மாகாணசபை முறைமை என்பது இன்னும் வெள்ளை யானையாகத் தான் இருக்கின்றது என்று ஜே.வி.பியின் நாடாளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

எனவே, மக்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட உள்ளூராட்சி சபைகளைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வா கவே மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டாலும் உருவாக் கப்பட்டதன் நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. இனப்பிரச்சினைக்கு மாகாணசபை முறைமை தீர்வு அல்ல என்பதே இதன் மூலம் புலனாகின்றது. அத்துடன், வடக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாண சபைகள் சுதந்திரக்கட்சி வசம்தான் இருக்கின்றன. ஆனால், பாதீட்டில் மாகாண சபைகளுக்கு உரிய வகையில் நிதி ஒதுக்கீடு இடம்பெறவில்லை. இதில் போட்டிநிலை காணப்படு கின்றது. அதிகாரப் போட்டிக்காகவே மாகாண சபைகள் இருப்பதுபோல் தெரிகின்றது.

நல்லிணக்கம் பற்றித் தற்போது பேசப்படுகின்றது. ஆனால், மாகாண சபைகள் கட்டளைச் சட்டவரைவு இன்னும் தமிழில் இல்லை. உள்ளூராட்சி சட்டமூலம் மாற்றியமைக்கப்பட வேண்டும். பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

மக்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டதே உள்ளூராட்சிச் சபைகள். அங்கு தற்போது மோசடிகள் இடம்பெறுகின்றன. இந்தச் சபைகள் கண்காணிக்கப்படவேண்டும். அவற்றைப் பலப்படுத்தவேண்டும். ஆனால், இனப்பிரச்சினைக்கு மாகாணசபை முறைமை தீர்வல்ல. இது இன்று உறுதியாகியுள்ளது - என்றார். (த-5-சி)

# ஜனவரி 8 வென்றெடுத்த புரட்சியை மீண்டும் தோற்கடிக்க இடமளியோம்

சபையில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

ஜனவரி 8 ஆம் திகதி வென்றெடுத்த புரட்சியை மீண்டும் தோற்கடிக்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம். மாற்றத்தை விரும்பாதவர்கள் எதிர்ப் புரட்சியூடாக நாட்டை ஆபத்திற்குள் தள்ளப் பார்க்கின்றனர். இவர்களின் எதிர்ப் புரட்சி தலைதூக்கவும் இடமளிக்கமாட்டோம், என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை அமைச்சரவை அறிவிப்பொன்றை விடுத்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இந்தச் சபையில் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டதற்கமைய, நாம் ஜனவரி 8 ஆம் திகதி வென்றெடுத்த புரட்சியை மீண்டும் தோற்கடிக்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம். எதிர்ப்புரட்சி தலைதூக்குகின்றது. எதிர்ப்புரட்சி தலை தூக்கவும் இடமளிக்க மாட்டோம்.

நாம் புதிய அரசியல் பாதையொன்றில் பயணிக்கின்றோம். முழு நாடாளுமன்றத்தையும் அரச அதிகாரத்திற்காக தொடர்புபடுத்துவதற்காக இணக்கப்பாட்டு முறையை நாம் நடைமுறைப்படுத்துகின்றோம்.

இந்தப் பாதையினூடாகவே நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும். எனவே, தமது குறுகிய நோக்கத்தைக் கைவிட்டு, நாட்டுக்காக செயற்படுவதற்காக இணைய வேண்டுமென அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (த-5-சி)

# ஈழக் கனவுக்குப் புத்துயிரளிக்க புலம்பெயர் தமிழர்கள் முயற்சி

குற்றம் சாட்டுகிறார் ஜி.எல். பீரிஸ்

கொழும்பு, டிசெ. 10

விடுதலைப் புலிகளின் ஈழக் கனவு போரின் மூலம் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்களுக்கு ஆதரவு வழங்கிய புலம் பெயர் அமைப்புகள் இன்றும் ஈழக் கனவை மேலும் சக்தி மயப்படுத்தி வருகின்றன, என்று முன்னாள் வெளிவிவகார அமைச் சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியில் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆதரவாக இயங் கிய தனிநபர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளை நாங்கள் தடை செய்தோம். ஆனால், தற்போதைய அரசு அவற்றை நீக்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஈழக் கனவு இலங்கையில் மாத்திரமே தோற்கடிக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் இன்று இவர்கள் ஈழக் கனவை சக்திமயப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக, இலங்கை அரசு தடை நீக்கியுள்ள புலம்பெயர் அமைப்புகளின் வலைத்தளங்களில் விடுதலைப் புலிகளின் கொடியை முன்னிலைப்படுத்தியே வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பல்வேறு நாடுகளில் நிதி சேகரிக்கின்ற னர். ஈழத்திற்கான [illegible] குகின்றனர். [illegible] அவசியம் என்கின்றனர். எனவே, இவ்விடயம் இலங்கைக்குப் பேராபத்தாகும் - என்றார். (த-5-சி)

## மரண அறிவித்தல்கள்

### யோண் பத்திநாதன்



குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட யோண் பத்திநாதன் 08.12.2015 செவ்வாய்க்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோண் செபமாலை முத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியவதி மற்றும் சின்னமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரிஜாக்குலீன், மேரி ஜெனிற்லீன் காலஞ்சென்ற நீல்யோன்சன் மற்றும் யாக்ஷன், ஜெறாட்சன், ஜெகறேசன், கிச்கெக்கெனடி, சாள்ஸ்கெனடி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (09.12.2015) புதன்கிழமை இத்தாலியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால், மல்லாகம்.
077 729 0708

தகவல்:
குடும்பத்தினர்.

### எட்மன் ஜோசப் சுரேஸ்குமார்



பழைய வாய்க்கால், மிருசுவிலைப் பிறப்பிட மாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட எட்மன் ஜோசப் சுரேஸ்குமார் 07.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரனி ஜெயராஜா மற்றும் லூட்ஸ் இராஜமணி தம்பதியரின் அன்பு மகனும் சுபாஜினி, காலஞ்சென்ற பிறேம்குமார் மற்றும் ராஜ் குமார் (பிரான்ஸ்), தர்ஷினி, டியானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07.12.2015 திங்கட்கிழமை திருகோணமலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இல.9, பிளச்சஸ்வீதி, கண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 077 502 7179

தகவல்:
தாய், சகோதரர்கள்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் அருள்லிங்கம்
இராசபூபதி (சங்கானை)



தோற்றம்
15.01.1958

மறைவு
10.11.2015

கடந்த 10.11.2015 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் அருள்லிங்கம் இராசபூபதி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.12.2015) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரண நிகழ்வும் நடைபெறும். 12.12.2015 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத் தலைவியின் மறைவுச்செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும் கண்ணீர்அஞ்சலி, மலர்வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தியவர்களிற்கும் அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களிற்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தேவாலய வீதி, சங்கானை.

குடும்பத்தினர். 077 653 6332

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மாகாண சபை

மறுநாள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒப்படைப்பதற்கும் மாகாண சபையினர் திட்டமிட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. ஆனால், எந்தவித நிதி உதவிகளையோ பொருள் உதவிகளையோ பெறுவதில்லை என்பது இந்திய மத்திய அரசின் கொள்கை என்பதால் வடக்கு மாகாண சபையின் நிதி உதவியையும் தாம் ஏற்க முடியாத நிலையே இருப்பதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

"நிதி மற்றும் பொருள் உதவிகளைப் பெறுவதில்லை என்கிற இந்திய அரசின் கொள்கை வடக்கு மாகாண சபை முதலமைச்சருக்கு தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த நிலையில் அவர்கள் சேகரிக்கும் நிதியை நாம் பொறுப்பேற்க முடியாத நிலையே இருக்கிறது. வடமாகாண சபை என்றல்ல வேறு எந்தவொரு அமைப்போ தனி நபர்களோ உதவிகளை வழங்கினாலும் அதனை ஏற்க முடியாத நிலைமையே இருக்கிறது" என்று தெரிவித்தார் தூதரக அதிகாரி ஒருவர்.

"நிதி உதவியை இந்தியா பெற்றுக்கொள்ளாது என்பது தொடர்பில் எமக்கு எதுவும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகம் நிதியைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் நாம் அதனை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் ஒப்படைப்போம்" என்று தெரிவித்தார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

உதவி நிதியைத் திரட்டுவது குறித்து வடக்கு மாகாண சபையினர் முடிவெடுத்த கூட்டத்தில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உட்பட 20 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கவில்லை.

அதேநேரம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தமிழகத்திற்கு நேரடியாகச் சென்று வழங்கும் பொருள் உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளை இந்தியா முழுமனதுடன் வரவேற்கும் எனத் தெரிவித்த தூதரக அதிகாரி, நிதி உதவியை வழங்க விரும்புபவர்கள் அத்தகைய தொண்டு நிறுவனங்களிடம் அதனைக் கையளிப்பதே சிறந்தது என்றும் தெரிவித்தார். (உ)

## முதலமைச்சர்களுடன்

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலேயே குறித்த சந்திப்பு நடக்கவுள்ளதாக மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் பாதீட்டுக்கு எதிர்ப்பைத் தெரிவித்தமையானது மாகாண சபைகளுக்கு அதன் மூலம் ஏற்படும் சில பாதிப்புகள் காரணமாகும். எனினும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாதீடானது சிறந்த ஒன்றாகும்.

மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் பெரிய பிரச்சினைகள் நிலவுகின்றன. அதன்கீழ் இயங்கும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. அதன் பிரச்சினைகளை நாங்கள் ஆராய வேண்டும். தேசிய பாடசாலைகள் 352 க்கு மாத்திரம் அரசு முன்னுரிமை கொடுக்குமாயின், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் நிலை படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு விடும்.

இதன்போது பாதீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாகாண முதலமைச்சர்கள் கூட்டுச் சேர்ந்துள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது, பாதீடு தொடர்பில் சுதந்திரமான கருத்துக்களைத் தெரிவிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார். மாகாண சபைகளுக்கு இதன்மூலம் ஏற்படும் பாதிப்புகளை நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம். அதற்கமைய நாளை (இன்று) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளோம். இந்தச் சந்திப்பில் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உட்பட ஒன்பது மாகாண சபைகளின் முதலமைச்சர்களையும் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என்றார். (த-5-சி)

## வேகாத

நீதிமன்றினால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் உணவை வாங்கியவருக்குப் 15 ஆயிரம் ரூபா இழப் பீடாக வழங்கப்பட்டது.

நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள குறித்த உணவகத்துக்குச் சென்ற ஒருவர் அதன் புகழ்பெற்ற தயாரிப்பான கோழிப் பொரியலை வாங்கி உண்டுள்ளார். அப்போது அது முழுவதும் நன்கு வேகாமல் இருந்ததையடுத்து அப்பகுதிக்குப் பொறுப்பான பொதுச்சுகாதார பரிசோதகருக்கு இது தொடர் பாக முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்துப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆறுமுகதாசனினால் குறித்த நிறுவனத்தின் முகாமையாளருக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவர் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதிமன்றத்தினால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், உணவைக் கொள்வனவு செய்தவருக்குப் 15 ஆயிரம் ரூபாவை இழப்பீடாகச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது. (த-103)

## உள்ளூராட்சி

நடத்தச் சாத்தியமில்லையென நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவிலயாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

உள்ளூராட்சிச் சபைகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பான மேன்முறையீடுகள் சுமார் 700 வரை கிடைக்கப் பெற் றுள்ளது. எனவே அரசு அவை குறித்து அவதானம் செலுத்த வேண்டும். இதனால் தேர்தலுக்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு நீண்ட காலம் தேவைப்படும் .

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் சில பிரச்சினைகள் உள்ளன. கூட்டாட்சியின்போது சில விடயங்களை முன்னெடுப்பது கடினமான பணியாகும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேசத்தின் உதவிகளைத் தற்போது அரசு பெற்றுக்கொண்டுள்ளது என்றார். (த-வ)

## இலங்கை

பின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இது சிங்களவர்களின் நாடு. இந்த நாட்டில் வாழ்வதற்கு ஒரு முறையிருக்கிறது. அதனை மாற்றிச் சவுதி அரேபியாவில் உள்ள ஒரு கிராமமாக மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

தற்போது அரச அதிகாரிகள் தமிழ் மொழியைக் கற்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. முட்டாள் சிங்களவர்களுக்கு இன்னும் கொஞ்ச நாள்களில் அரபு மொழியைக் கற்கவேண்டிய சூழலும் ஏற்படலாம். நாட்டின் கலாசாரம் ஒற்றுமையை பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது.

தற்போது அரசியல் தீர்வு பற்றிக் கதைக்கின்றனர். வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிப் பேசுகின்றனர். இந்தப் பிரச்சினை ஏன் தோன்றின. இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் சிங்கள மொழியைக் கற்றால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

வரலாற்று ரீதியாக இந்த நாட்டின் மக்கள் சிங்களவர்களே. பாதைகள் அமைப்பதற்காக, வர்த்தக நடவடிக்கைகளுக்காக, தோட்டங்களில் பணியாற்றுவதற்காகவே ஏனைய இனத்தவர்கள் இந்த நாட்டிற்கு வந்தனர். வடக்கு கிழக்கில் இருப்பது அரசியல் பிரச்சினை அல்ல. நிர்வாகப் பிரச்சினை என்றார். (த-5)

## விபத்துக்களால்

பஸ்ஸில் மோதுண்டு உயிரிழந்ததுடன் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில் பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஹங்வெல்லயைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் வென்னப்புவ பிரதேசத்தில் கொழும்பு – புத்தளம் ரயில் பாதையில் கொழும்பிலிருந்து சிலாபம் நோக்கிச் சென்ற ரயிலில் பாய்ந்து 20 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் கிரான்ட்பாஸ் பிரதேசத்தில் மாதம்பிட்டிய வீதியில் மதில் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 57 வயதான நபர் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் கிளிநொச்சி விஸ்வமடு பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி 21 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## சீபா

என்றும், இதுபோன்ற உடன்படிக்கையை சீனா மற்றும் சிங்கப்பூருட னும் கைச்சாத்திடப்படவுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை அமைச்சரவை அறிவிப்பொன்றை விடுத்தபோதே மேற்கண்ட விடயங்களைப் பிரதமர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவுடன் கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை குறித்து அனைத்து தரப்பினரையும் நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். இதற்கான கலந்துரையாடலில் பங்கேற்ற வைத்திய அதிகாரிகள் சங்கம், வெளியே வந்து ஊடகங்களிடம் வேறு கதை கூறுகின்றது.

சீபாவின் (பரந்துபட்ட பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை) சில நிபந்தனைகளால் இலங்கைத் தொழிலாளர்களுக்கு அநீதி ஏற்படும். இந்த உடன்படிக்கையைக் கைச்சாத்திட மகிந்த அரசு இணக்கம் தெரிவித்திருந்தது. இருப்பினும், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த உடன்படிக் கையை கைச்சாத்திட மாட்டோம் என்றும், இதற்காக வேறு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவோம் என்றும் குறிப் பிட்டிருந்தோம்.

இதற்கமைய எமது அரசு சீபா உடன்படிக்கையை ஒரு போதும் கைச் சாத்திடாது. வேறு பெயரிலும் அப்படிச் செய்ய மாட்டோம். பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையிலேயே கைச்சாத்திடவுள்ளோம். இந்தியாவுடன் மட்டுமல்ல, சீனா மற்றும் சிங்கப்பூருடனும் இது போன்ற உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளோம்.

இந்த உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்கு முன்னர் தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடுவோம். கட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்துவோம். அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவோம். அதுபற்றி இந்த நாடாளுமன்றத்துக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்குவோம். அனைத்துத் தரப்பினரின் இணக்கப்பாட்டுடனேயே இந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவோம்.

எமது அரசுக்கும், ராஜபக்ச படையணிக்கும் வித்தியாசம் உள்ளது. நாம் ஒளிந்து கள்ளவேலை செய்யமாட்டோம்.வெளிப்படையான பேச்சுகள், இணக்கப்பாட்டுடன் நாம் செயற்படுவோம் என்றார். (த-5-சி)

## வடக்கு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசித் தீர்க்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்பகுதி மீனவர்களை முற்றாகத் தடை செய்தல், புதியவர்களுக்கு அனுமதி வழங்கப்படக்கூடாது, இந்திய மீனவர்களின் வருகையைத் தடுக்கவேண்டும், கைது செய்யப்படும் இந்திய மீனவர்களைத் தடுத்து வைக்காது விடுவிக்கவேண்டும் என்றவாறு வடக்கு மீனவர்கள் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

நாளொன்றுக்கு ஆயிரம் முதல் ஆயிரத்து 500 இந்திய மீன்பிடிப் படகுகள் எமது கடலில் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இதனால், எமது மீனவர்களால் மீன்பிடிக்க முடியாதுள்ளது. இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் நினைத் தால் இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்த முடியும். இதை வலியுறுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. தமிழக முதலமைச்சருடனும், இந்தியப் பிரதமருட னும், எமது பிரதமர் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பதற்காக வடபகுதி மீனவர்கள் கடன்களைப் பெற்றுள்ளனர். தமது தொழில் பாதிக்கப்படுவதால் இந்தக் கடனை மீளச் செலுத்த முடியாமல் அவர்கள் தவிக்கின்றனர். எனவே, இவர்களின் கடன்களை நீக்கி, மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், சில கரையோரப் பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன. தென்னிலங்கை மீனவர்களும் அங்கு தொழிலில் ஈடுபடுகின்றனர். எனவே, இவற்றையும் அரசு கருத்திலெடுத்து தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (த-5-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா இராசதுரை



கச்சார்வெளி பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா இராசதுரை 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசதுரையின் மனைவியும் சாந்தகுமார் (ஜேர்மன்), வேலுப்பிள்ளை (கனடா), ரவீந்திரன் (பளை), மகேஸ்வரி (கனடா), பாக்கியலட்சுமி, புவனேஸ்வரி (பளை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ரவீந்திரன் இல்லம் (கச்சார்வெளி பளை)யில் நடைபெற்று தம்பகாமம் மலையான் காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சார் வெளி, பளை.

T.P : 077 9321494
0773149782

தகவல்:
ரவி (மகன்)

(66983)

### திருமதி திலகவதி காராளசிங்கம்



சூறாவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி காராளசிங்கம் நேற்று (09.12.2015) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காராளசிங்கத்தின் அன்பு மனைவியும் சிறிறஞ்சினியின் அன்புத் தாயாரும் சுதேசன் (இலங்கை வங்கி வட பிராந்திய காரியாலயம்) அன்பு மாமியும் கவியரசி, ஜெருசா, சாருயுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (சூறாவத்தை சுன்னாகம்) நடை பெற்று நண்பகல் 12.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(66987)

### சின்னராசா சுதாகர் (சுதன்)



மாதகலைப் பிறப்பிடமாகவும், இராஜகாரியலேன் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா சுதாகர் (சுதன்) நேற்று (09.12.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னராசா மலர் தம்பதியினரின் அன்பு மகனும் சுஜாதா, சுமிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபால கிருஸ்ணனின் அன்பு மைத்துனரும் விதுஷன், பர்ஷயன் ஆகியோரின் அன்பு மாமனும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2015) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜகாரிய லேன்,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(66981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுடன் செயற்பட்டது கடந்த கால மகிந்த அரசு

## ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ 10

இலஞ்ச, ஊழலுக்கு எதிரான நிகழ்வுகளை கடந்த அரசு நடத்தத் தவறியுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச இலஞ்ச, ஊழல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசு (மஹிந்த அரசு) ஊழலுடன் செயற்பட்டமையினாலேயே இவ்வாறான நிகழ்வுகளை கடந்த காலங்களில் ஏற்பாடு செய்ய தவறியதாகவும் ஜனாதிபதி கூறினார்.

ஔடத சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருந்தபோது, அனைத்து ஔடத நிறுவனங்களிடமும் 25 இலட்சம் ரூபா வீதம் பெற்றுக்கொண்டு, அன்றைய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட ஔடத சட்டமூலம் காணாமற்போகச் செய்யப்பட்டிருந்தது என்று ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை புகைப்படங்களை 80 வீதம் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், நீதிமன்ற உத்தரவைப் பெற்று, அந்த நடவடிக்கை 60 வீதம் வரை குறைக்கப்பட்டமை தமக்கு கவலையளிப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

மேலும், இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சுயாதீனமான முறையில் செயற்படுவதற்குத் தேவையான அனைத்துநடவடிக்கைகளையும் அரசு என்ற வகையில் தாம் முன்னெடுப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

இதன்படி, எதிர்வரும் சில வருடங்களில் நாட்டில் ஊழலை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-சி)

### விற்பனைக்கு

CD200 147-xxxx இலக்கமுடைய மோட்டார் வண்டி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 4324 662

### தேவை

யாழ் - நகரை அண்மித்த அலுவலகம் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.

தொடர்புக்கு : 077 2174 741

(66982)

### கண்ணீர் அஞ்சலி

**சின்னராசா சுதாகர்** (சுதன்)



தோற்றம் : 1981 - 08 - 18 மறைவு : 2015 - 12 - 09

பிறின்ஸ் ரவல்ஸ் உரிமையாளர்களின் உற்ற நண்பன் சின்னராசா சுதாகர் (சுதன்) அவர்களின் பிரிவால் நாமும் மிகுந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிறின்ஸ் ரவல்ஸ்**
**உரிமையாளர்களும், ஊழியர்களும்.**

(66986)

### அறிவித்தல்
### சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

2016ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி பிரதேசசபையின் நிகழ்ச்சித் திட்ட வரவுசெலவுத்திட்டம் 1987ஆம் ஆண்டு பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 15ஆம் இலக்க 168ஆம் பிரிவிற் கமைய தயாரிக்கப்பட்டு 10.12.2015ஆம் திகதி தொடக்கம் 18.12. 2015 ஆம் திகதி வரை சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலு வலகத்தில் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.
கொடிகாமம்.

### கேள்வி கோரல்

**சிற்றுண்டிச்சாலை**
**யா/ஹாட்லிக் கல்லூரி-பருத்தித்துறை**

பாடசாலை சிற்றுண்டிச் சாலையினை வாடகைக்கு வழங்குவதற்கு கேள்வி கோரல் விடப்படுகின்றது.

இதற்கான விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நேரத்தில் (காலை 9.00 -12.00) பாடசாலை விடுதியில் பெற்று பூரணப் படுத்திய படிவத்தினை 2015.12.26ஆம் திகதி 12 மணிக்கு முன்பாக ஒப்படைக்கவும். கூறுவிலைகள் அன்று 12.00 மணிக்கு திறக்கப்படும்.

த.முகுந்தன் (அதிபர்)
யா/ஹாட்லிக் கல்லூரி.

### அறிவித்தல்
### காரைநகர் பிரதேச சபை, காரைநகர்

2016ஆம் ஆண்டுக்கான சபையின் நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத் திட்டம் 1987ஆம் ஆண்டு பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின் 15ஆம் இலக்க 168ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 09.12.2015 தொடக்கம் ஏழு (07) நாள்களுக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்திலும் வடக்கு உப அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

திரு.கு.இரத்தினராசா
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை. 09.12.2015.

### SAAMSON இன் சிங்களம்

Experts in Language Training

3 மாத பயிற்சிநெறி

அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!

சிங்கள வகுப்புகள் (செவ்வாய்,வியாழன்) ஆரம்பம்-10.12.2015
1.காலை 10-12 2.மாலை 03-05

சிங்கள வகுப்பு ( சனி,ஞாயிறு )ஆரம்பம்-12.12.2015
1.காலை 08-10

பயிற்சியில் இணைந்துகொள்ள முன்பதிவு அவசியமானது.
பதிவுசெய்யவேண்டிய கடைசிநாள் 10-12-2015

SAAMSON
Experts in Language Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

### கண்ணீர் அஞ்சலி



யா/யூனியன் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபரும் பழைய மாணவருமாகிய

**நாகமுத்து கந்தசாமி**

07.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.**

(C/20736) (10.17)

### தவறிவிட்டது

BBN 2280 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு (Number Plat) புத்தூர் சந்திக்கும் சுன்னாகம் சந்திக்கும் இடையில் தவறி விழுந்துள்ளது. கண்டெடுத்தவர்கள் 0776327669 அல்லது 021 226 3658 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

### புகைப்படப் பிரதியாக்கம்
### 4R - 8/=

மற்றும் பாஸ்போர்ட், விசா / NIC புகைப்படப் பிரதியாக்கங்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
**யாழ். வீதி, மானிப்பாய்.**
**T.P: 077 949 5065**

### கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நிதி உதவியாளராக கடமையாற்றும் **திருமதி.கலையரசி நற்குணசிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்

**கண்மணி சிவலிங்கம்**

அவர்களின் திடீர்மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.**
**நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.**

### கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் சிறுவர் உரிமை மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி.அ. ஆன்ஜஸ்மின்** அவர்களின் அன்புத் தந்தை

**மரியாம்பிள்ளை அல்போன்ஸ்**

அவர்களின் திடீர்மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.**
**நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.**

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1931 | | 2015 |
| 03 | | 11 |
| 12 | | 10 |



**அமரர் தவமணி துரைராசா**

கடந்த 10.11.2015 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு தவமணி துரைராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [10.12.2015] வியாழக்கிழமை குரும்பசிட்டி ஞானவைரவர் ஆலய முன்றிலில் காலை 5.00 மணிக்கு நடைபெறும். அதைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு

அன்புடன் அழைக்கின்றோம்.

குரும்பசிட்டி
புலோலி மேற்கு,
புலோலி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆட்டங்களுக்கு திரும்ப முனைப்புக்காட்டும் கிரேம் சிமித்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா இழந்தமையை அடுத்து தான் மீண்டும் டெஸ்ட் ஆட்டங்களுக்கு திரும்ப முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார் அந்த அணியின் முன்னாள் தலைவரான கிரேம் சிமித்.

டெஸ்ட் ஆட்டங்களில் முதல்தர அணியாக இருக்கும் தென்னாபிரிக்கா, இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0:3 என இழந்தது. முதல் இரண்டு டெஸ்ட் ஆட்டங்களும் மூன்று நாள்களுக்குள் முடிந்தது.



> இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்வதற்கு முன் தென்னாபிரிக்கா அணி வெளிநாட்டு மண் ணில் 9 ஆண்டுகளாக எந்தத் தொடரையும் இழந்ததில்லை.

இது தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவரும் தொடக்க வீரருமான சிமித்தை பெரிதும் பாதித்துள்ளது.

தென்னாபிரிக்கா அணி தொடர்பாக சிமித் தெரிவிக்கையில்; இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்வதற்கு முன் தென்னாபிரிக்கா அணி வெளிநாட்டு மண்ணில் 9 ஆண்டுகளாக எந்தத் தொடரையும் இழந்ததில்லை. இது மிகவும் பெருமைக்குரிய விடயம். ஆனால் இந்த வெற்றிநடைக்கு தற்பொழுது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாயிற்று.

கடந்த கால எமது உழைப்புக்களை தற்போதைய வீரர்கள் சிறப்பாகப் பயன்படுத்தவில்லை. இதனால் நான் மீண்டும் சர்வதேச ஆட்டங்களுக்குத் திரும்புவது தொடர்பாக சிந்தித்து வருகிறேன். மாஸ்டர் சம்பியன் லீக் தொடர் (ஓய்வுபெற்ற வீரர்களின் தொடர்) சர்வதேச ஆட்டங்களுக்குத் திரும்புவதற்கு முக்கிய அடித்தளமாக இருக்கும்.

தற்போது எனக்கு 34 வயதாகிறது. (33 வயதில் நான் ஓய்வு பெற்றார்) என்றால் இன்னும் 3 அல்லது நான்கு ஆண்டுகள் விளையாடமுடியும். என்னால் முடியும் என்று எனக்குத் தெரியும்–என்றார். (ம)



## தீவுகளிடம் கவனம் அம்புரோஸ் எச்சரிக்கை

இளம் வீரர்களைக் கொண்ட மேற்கிந்தியத் தீவுகளை சிறிதாக நினைத்துவிடக் கூடாது என்று ஆஸியை எச்சரித்துள்ளார் தீவுகளின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும் தற்போதைய பந்துவீச்சுப் பயிற்சியாளருமான அம்புரோஸ்.

புதுமுகம் மற்றும் அனுபவமில்லாத வீரர்களைக் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆஸ்திரேலியாவிடம் மரண அடி வாங்கப்போகிறது. ஆஸ்திரேலியா அணி தீவுகளை துவம்சம் செய்யப்போகிறது என்று செய்தித் தாள்களும், கிரிக்கெட் விமர்சகர்களும் பக்கம்பக்கமாக எழுதி வருகிறார்கள். இதற்கு அந்த அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளரும், முன்னாள் அதிவேகப் பந்து வீச்சாளருமான அம்புரோஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அம்புரோஸ் தெரிவிக்கையில்; "வியாழக்கிழமை தொடங்கும் முதல் டெஸ்டில் நாங்கள் ஆஸ்திரேலியாவுக்கு தக்க பதிலடி கொடுக்கையில், எங்களை விமர்சனம் செய்தவர்கள் வெட்கித் தலைகுனிவார்கள். நாங்கள் திறமையாக விளையாடி ஆஸ்திரேலியாவை தோற்கடித்த நாளன்று செய்தியாளர்கள் தங்களது எண்ணத்தில் இருந்து திரும்புவார்கள்.

நாங்கள் இங்கு விளையாட வந்துள்ளோம். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்காகச் சென்று கொண்டிருக்கிறோம். தெரிவிக்கப்படும் கருத்துக்கள் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும். நாங்கள் சிறந்த முறையில் சென்று கொண்டிருக்கிறோம். நீங்கள் நினைப்பதைவிட அதிகமாகச் செய்து காட்டுவோம்"- என்றார். (ம)

## ஊக்கமருந்து பாவனையின் எதிரொலி கென்ய அதிகாரிகள் இடைநிறுத்தம்


கென்ய தடகளச் சம்மேளனத்தின் தலைவர்

சர்வதேச தடகளத் தொடர்களில் கென்ய வீர, வீராங்கனைகளில் அதிகமானோர் ஊக்கமருந்து பயன்படுத்தியமை உறுதியானதைத் தொடர்ந்து கென்யாவின் தடகளத் தலைவர் உட்பட வேறு இரு முக்கிய அதிகாரிகளும் சர்வதேச தடகளச் சம்மேளனத்தின் ஒழுக்கவியல் ஆணைக்குழுவால் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

2005ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலப்பகுதியில் கென்யாவைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய வீர, வீராங்கனைகளில் கிட்டத்தட்ட 70 சதவீதமானவர்கள் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியமை அம்பலமானது. கென்ய அரசின் அனுமதி அல்லாமல் இத்தகைய பெரும் எண்ணிக்கையானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்த சாத்தியமில்லை. இதனால் கென்ய தடகள அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்படலாம் என்று கருத்துக் கணிப்பு நிலவியது. கணிப்புக்கள் நியாயமாகும் வகையில் சர்வதேச தடகளச் சம்மேளனத்தின் ஒழுக்கவியல் ஆணைக்குழு, கென்ய தடகளச் சம்மேளனத்தின் தலைவர் உட்பட வேறு இரு அதிகாரிகளையும் இடைநிறுத்தியுள்ளது. (ம)




## பந்தால் தாக்கப்பட்ட நடுவர் ஆபத்து இன்றி தப்பினார்

ராஞ்சி கிண்ணத் தொடரில் பந்தால் தாக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நடுவர் சத்திர சிகிச்சையின்றி உயிர் தப்பியுள்ளார்.

ராஞ்சிக் கிண்ணத் தொடரில் நடுவராகச் செயற்பட்ட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜோன் வார்ட், சிலதினங்களுக்கு முன்னர் பந்தால் தலையில் தாக்கப்பட்டு தீவிரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

ஸ்கான் செய்து பார்த்ததில் அவருக்கு தமணிப் பகுதியில் அடிபடவில்லை என்பது உறுதியானது. இதனால் சில விசேட சிகிச்சைகளுடன் அவர் தொடர்ந்தும் ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். (ம)

## 19 வயதுக்கு உட்பட்ட உலகக்கிண்ண அட்டவணையை வெளியிட்டது ஐ.சி.சி.

ICC UNDER19
CRICKET WORLD CUP
BANGLADESH 2016

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதி முதல் பெப்ரவரி 14ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வெளியிட்டுள்ளது.

உலகக்கிண்ணத் தொடரில் மொத்தம் 16 அணிகள் கலந்துகொள்கின்றன. இவை நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் நடப்புச்சம்பியன் தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து, நமீபியா அணிகளும்– 'பி' பிரிவில் பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், கனடா ஆகிய அணிகளும்– 'சி' பிரிவில் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே, பிஜி அணிகளும் 'டி' பிரிவில் இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நேபாளம் ஆகிய அணிகளும் இடம் பெற்றுள்ளன. 19 நாள்கள் நடைபெறும் தொடரின் முதல் ஆட்டத்தில் 27ஆம் திகதி தென்னாபிரிக்கா – பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன. இறுதியாட்டம் 14ஆம் திகதி மிர்பூரில் நடைபெறவுள்ளது. (ம)


இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் இன்று டன்டினில் ஆரம்பமாகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. நிறுவனத்தால் கால்பந்தாட்ட பயிற்சிமுகாம் முன்னெடுப்பு




யாழ்ப்பாணம், டிசெ. 10
வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் 125 ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த நிறுவனம் கால்பந்தாட்ட வீரர்களிடையே பயிற்சி முகாம் ஒன்றை கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் முன்னெடுத்துள்ளது.

பயிற்சிமுகாமில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், கனகரெட்ணம் மத்திய மகா வித்தியாலயம், சென்.ஜோன்ஸ் கல்லூரி, நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியாணந்தாக் கல்லூரி, இந்துசபை தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன கலந்துகொண்டன.

பயிற்சி முகாமுக்கான சான்றிதழ்கள் வை.எம்.சி.ஏயின் கேட்போர் கூடத்தில் பொதுச் செயலாளர் ஜெயராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை வை.எம்.சி.ஏயின் தேசிய சபையின் முகமையாளர் ரி.சி.சாள்ஸ் பிறவுண்சன், இலங்கை வை.எம்.சி.ஏயின் தேசிய சபையின் முன்னாள் செயலாளர் விஜயகுலசிங்கம், யாழ். வை.எம்.சி.ஏயின் தலைவர் ஆர்.வினோத், அருட்தந்தை வி.டானி யல் ஜெயறூபன். வை.எம்.சி.ஏயின் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ரி.விமலராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-23)



## புனே அணிக்கு செல்லும் டோனி?

அடுத்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் சென்னை ராஜஸ்தான் அணிகளுக்குப் பதிலாக புனே, ராஜ்கோர்ட் அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் புனே அணியின் தலைவராக டோனி செயற்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கு சென்னை, ராஜஸ்தான் அணிகளில் அங்கம்வகித்த வீரர்களில் தலா ஐந்து வீரர்கள் செல்வர். சென்னையில் இருந்து டோனி, அஸ்வின், ஜடேயா, ரெய்னா, பிராவோ ஆகியோரும்- ராஜஸ்தான் அணியில் இருந்து ரகானே, ஸ்ரீவ் சிமித், பல்க்னெர், வற்சன், சஞ்சு சாம்சன் ஆகியோருக்கு கடும் கிராக்கி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புனே அணியே முதலாவதாக வீரரைத் தெரிவுசெய்யும் அந்தஸ்தைப் பெற்றுள்ளமையால் அவர்களின் தெரிவாக டோனி இருப்பார் என்று கருதப்படுகிறது. ராஜ்கோர்ட் அணி ஜடேயா, அஸ்வின் இருவரில் ஒருவரை முதலாவதாகத் தெரிவு செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டால் இந்திய அணியிலும் ஐ.பி.எல். தொடர்களிலும் ஒன்றாகப் பயணித்த டோனி, அஸ்வின், ஜடேயா, ரெய்னா கூட்டணி தொடரமுடியாத நிலை ஏற்படும். (ம)

## ஐ.பி.எல். தொடருக்கான திகதி அறிவிப்பு

2016 ஆம் ஆண்டின் ஐ. பி.எல். தொடருக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் நேற்று நடைபெற்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் கூட்டத்தில் 2016 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் திகதி முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் மே 29 ஆம் திகதி வரை 51 நாள்கள் தொடர் நடத்தப்படவுள்ளது, குறித்த தொடருக்கான வீரர்களின் ஏலம் பெப்ரவரி 6 ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## சான்யாவை வீழ்த்தினார் ஸ்பெயினின் கரோலின்

நடப்பு வருடத்தின் சிறந்த பூப்பந்தாட்ட வீராங்கனையாக கரோலின் மரின் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச பூப்பந்தாட்ட சம்மேளனம் இந்த ஆண்டுக்கான சிறந்த வீராங்கனையாக ஸ்பெயின் வீராங்கனை கரோலின் மரினை தெரிவுசெய்துள்ளது. மரினுக்குப் போட்டியாக கருதப்பட்டவர் இந்தியாவின் சாய்னா நேவால். நேவால் காயம் காரணமாக சில மாதங்கள் ஓய்வில் இருந்தார். இந்தக் காலப்பகுதியில் மரின் சிறிது ஆதிக்கம் செலுத்தினார். இதுவே மரினின் தெரிவுக்கான காரணமாகக் கருதப்படுகிறது. (ம)

## அரையிறுதியை தவறவிட்டது கொக்குவில் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம், டிசெ. 10
தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் அரையிறுதி ஆட்டதுக்கான வாய்ப்பை நழுவவிட்டது கொக்குவில் இந்துக்கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் தேசிய ரீதியாக நடத்தும் 15வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் செவ் வாய்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கேட்வே சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் கேட்வே சர்வதேச பாடசாலை அணி 61:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிபா ஊழல் அருவருப்பானது

## என்கிறார் பெக்காம்



சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்ற மிகப்பெரும் நிதி மோசடி அருவருப்பானது என்று தெரிவித்துள்ளார் உதைபந்தாட்ட ஜாம்பவானான பெக்காம்.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரான செப் பிளாட்டரும் வேறுசில அதிகாரிகளும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் மோசடி செய்தமை அண்மையில் தெரியவந்தது. இதனையடுத்து சில அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வேறுசிலர் கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். செப் பிளாட்டர் மீதும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மோசடி தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ளார் பெக்காம்.

இது குறித்து பெக்காம் தெரிவிக்கையில் - 'உதைபந்தாட்ட சம்மேளனத்தில் இத்தகைய பெரும் தொகையான மோசடி இடம்பெற்றமையை என்னால் நம்ப முடியாதுள்ளது. உதைபந்தாட்டத்தின் மீது ரசிகர்கள் வைத்திருந்த நம்பிக்கையை சம்மேளனம் கேள்விக்குறியாக்கியுள்ளது. வீரர்கள், ரசிகர்கள், விளம்பரதாரர்கள், ஊடகங்கள், அனுசரணையாளர்கள் என ஒவ்வொருவருக்கும் பிபா பதில்சொல்ல வேண்டும். பிபாவின் நடவடிக்கை அருவருக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது.- என்றார். (ம)

# 24ஆம் திகதி இலங்கையில் இந்தியா - பாக். தொடர்



இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் இந்த மாதம் 24ஆம் திகதி இலங்கையில் நடைபெறும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்த மாத தொடக்கத்தில் இரு அணிகளுக்கும் இடையில் தொடரை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் எல்லையில் இடம்பெற்ற பதற்ற நிலைமைகள் காரணமாக இந்தியா தொடரில் இருந்து பின்வாங்கியது. ஆனால் பாகிஸ்தானின் விடா முயற்சிக்கு தற்பொழுது வெற்றி கிடைத்துவிட்டது என்று சொல்லிக்கொள்ளும் வகையில் தொடர் நடைபெறுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது.

பாரிஸில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடியும் பாகிஸ்தானின் பிரதமர் நவாஸும் சந்தித்துப் பேசியமையை அடுத்தே தொடர் நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதன்படி இந்திய அரசு அனுமதி கொடுத்தால் இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர் 24ஆம் திகதி இலங்கையில் ஆரம்பமாகும். தொடரில் 3 ஒருநாள் ஆட்டங்களும் 2 ரி-20 ஆட்டங்களும் இடம்பெறும். (ம)

## ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டம் மும்பையில்

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான முதலாவது ஆட்டம் எங்கு நடைபெறும் என்பதை அறிவித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை.

ரி-20 உலகக்கிண்ணத் தொடர் அடுத்த வருடம் மார்ச் மாதம் 11ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான திகதி அறிவிக்கப்பட்டாலும் இடங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில் நேற்று ஆரம்ப ஆட்டம் நடைபெறும் இடத்தை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. அதன்படி முதலாவது ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும். (ம)



**சிறுநீரகம் தேவை**

B- Negative (நெகற்றிவ்), O- Negative (நெகற்றிவ்) குருதிவகை சிறுநீரகம் தேவை.
தேக ஆரோக்கியம் உள்ளோர், 43 வயதுக்கு குறைந்தோர் தொடர்புகொள்ளவும்.
0777 278 677
0772 508 568
0769 111 682

## மால்மோ எதிர் ரொனால்டோ

நடைபெற்றுவரும் லா லிகா தொடரில் முன்னணி கழக அணிகளுள் ஒன்றான ரியல் மட்ரிட் மால்மோ அணியை 8-0 என பந்தாடி தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பென்சிமா முதல் கோலை பதிவு செய்தார். 24ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோல் அடித்தார். இதனால் ரியல் மட்ரிட் 2-0 என முதல் பாதியில் முன்னிலைப் பெற்றது.



இரண்டாம் பாதியில் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ஆட்டத்தில் அனல்பறந்தது. 46ஆவது நிமிடத்தில் முதல் கோலையும், 47ஆவது 50ஆவது மற்றும் 58ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து மேலும் மூன்று கோல்கள் அடித்து அசத்தினார். இதன்மூலம் தொடர்ச்சியாக நான்கு கோல்கள் அடித்து தனது சாதனையை தானே முறியடித்தார். 74ஆவது நிமிடத்தில் பென்சிமா மீண்டும் ஒரு கோல் அடித்தார். அந்த அணியின் கோவாசிக் 76ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க ரியல் மட்ரிட் 8-0 என வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் லீக் சுற்றுக்களின் முடிவில் ரியல் மட்ரிட் முதல் இடத்தில் உள்ளது. (ம)

**கண்ணீரில் கரைந்த முதலாம் ஆண்டு**

உயர்திரு வேலாயுதர் இரத்தினம்
[ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்]



திதி : கார்த்திகை சதுர்த்தசி

தந்தையாய் இருந்தெமக்கு தகுதியாய் தலைமை தாங்கி சுந்தர வாழ்விலெம்மை சுடர்விடும் வழியும் காட்டி சிந்தியே வியர்வை நல்ல சிறப்புறு வாழ்வும் தந்து நொந்திடல் விட்டே எம்மை நொடியினில் துறந்து போன எம் ஆருயிர் தந்தையே தவிக்கின்றோம் உம் வழிகாட்டல் ஏதுமின்றி...

அப்பா எந் நிலையில் நாம் இருந்தாலும் உங்களுடன் வாழ்கின்ற சந்தோசமான நாள்களைப் போல எப்போதும் இல்லை அப்பா...

பொன்னாலை வரதராசப் பெருமாள் வீதி,
சுழிபுரம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(66980)

மேற்கிந்தியத் தீவுகள் - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகிறது. (ம)

# தவானின் பந்துவீச்சில் முறைப்பாடு தெரிவிப்பு



தவானின் பந்துவீச்சில் சந்தேகம் உள்ளதாக மைதான நடுவர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் அம்லாவும் வில்லியர்ஸும் நீண்ட நேரம் நிலைத்துநின்றதால் பகுதி நேரப் பந்து வீச்சாளராக தவானை அழைத்தார் கோக்லி. கிட்டத்தட்ட 3 பந்துப்பரிமாற்றங்கள் தவான் பந்துவீசினார். இந்த நிலையில் தவானின் பந்துவீச்சில் சந்தேகம் இருப்பதாக மைதான நடுவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இதனால் தவான் இன்னும் 14 நாள்களுக்குள் தனது பந்துவீச்சை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. அதுவரை அவர் பந்து வீசலாம். பொதுவாக தவான் பந்து வீசுவதில்லை. நான்கு பந்து வீச்சாளர்களுடன் இந்தியா களம் இறங்கியதாலேயே தவான் பந்து வீசவேண்டிய நிலை ஏற்பட்டது. (ம)

# சர்வதேச ஆட்டங்களுக்கு திரும்பும் வேகப்பந்து வீச்சாளரான ஆமிர்

சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தானின் இளம் வேகப்பந்து வீச்சாளரான ஆமிர் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடரில் மீண்டும் களமிறங்க வாய்ப்புக்கள் உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும்போது ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக பாகிஸ்தான் வீரரான மொகமது ஆமிருக்கு ஐந்து ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. பாகிஸ்தான் அணியின் முன்னணி இடதுகை வேகப்பந்து வீச்சாளராக வலம் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆமீரின் கிரிக்கெட் வாழ்க்கை அத்துடன் முடிவுக்கு வந்ததாக கூறப்பட்டது.

சமீபத்தில் அவரது தண்டனை காலம் முடிவடைந்தது. அதற்கு முன்பு இருந்தே ஆமிர் உள்ளூர் தொடர்களில் விளையாடும் வண்ணம் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வந்தார். உள்ளூர் தொடர்களில் விளையாட ஐ.சி.சி. அனுமதி அளித்ததையடுத்து பங்களாதேஷ் ரி-20 தொடரில் களமிறங்கினார். இதில் அவரது பந்துவீச்சு அபாரமாக இருந்தது. இதனால் பாகிஸ்தான் அணியில் அவர் மீண்டும் இணைவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் சகாரியர் கான் தெரிவிக்கையில் - "இந்தியாவிற்கு எதிரான தொடர் நடைபெற்றால் இதில் அவர் இடம்பெறுவது குறித்து பரிசீலனை செய்யவில்லை. ஆனால் அடுத்த வருடம் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான தொடருக்காக அவரை கொண்டு வருவது பற்றி பரிசீலித்து வருகிறோம். இந்த தொடர் மூலம் அவர் மீண்டும் சர்வதேச ஆட்டங்களுக்கு திரும்ப வேண்டும். மிஸ்பா, அப்ரிடி, கபீஸ் போன்ற மூத்த வீரர்களிடம் ஆமிர் நடவடிக்கை குறித்து கருத்து கேட்டுள்ளோம். இருந்தாலும் அவர்களுடைய கருத்துக்களை மட்டுமே வைத்து நாங்கள் அணிக்கு திரும்ப அழைக்கமாட்டோம். சர்வதேச அணிக்கு திரும்புவதற்கு முன் ஆமிருடன் கலந்தாலோசிக்க வேண்டியது கட்டாயம்" என்றார்.

இதனால் விரைவில் மொகமது ஆமிர் பாகிஸ்தான் அணிக்கு திரும்ப வாய்ப்புள்ளது. 23 வயதாகும் ஆமிர் தனது 17 வயதில் இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமானார். கடைசியாக 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி இங்கிலாந்துக்கு எதிராக லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் விளையாடினார். அதன்பின் அவருக்கு தடை விதிக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.